**TAMIL SPEAKING**
*Personal Injury Lawyer*
INJURED IN A ROAD ACCIDENT ?
ACCIDENT AT WORK PLACE OR PUBLIC PLACE
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
YOU KEEP 100% COMPENSATION
FOR FREE ADVICE CALL
Ask for RAJ
NOTMYFAULT LAWYERS
M : 0781 089 7754
EMail : raj@notmyfaultlawyers.com
4, Prince Albert Drive, Ascot, SL5 8AG

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE

PAPER - 10 ♦ ISSUE - 211 ♦ FRIDAY 07 FEBRUARY 2014

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM



## கடந்துவந்த பாதை கடினம் தான் என்றாலும் வெற்றிப் புன்னகை தருவோம்...!

**Offlicence Shop for Sale**
Immediate Sale
- Rent £ 13,500 Per Year
- Rates - 2500
- Turn Over - 5000 to 6000 Weekly
- Bus Pass - £6500 per week
- Lottery - £4000 per week
- Location - NW10 4JG

Shop price : £ 50,000
28, Park parade, Harleston, NW10 4JG
Contact : 07590537521

- புதிதாக அகதி அந்தஸ்த்து கோருபவர்கள், விசா காலவதியாகி மற்றும் சட்டவிரோதமாக தங்கி இருப்போர்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி Legacy (லெகசி) திட்டத்தின் கீழ் எவ்வித முடிவின்றி நீண்ட காலமாக காத்திருப்போர்.
- கைது செய்தல், தடுத்து வைத்தல், நாட்டுக்குத் திருப்பி அனுப்புதலை எதிர்கொள்வோர்
- அனுபவமுள்ள சட்டத்தரணிகள் குழுவினரால் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்.

இலவச ஆலோசனைக்கு தொடர்பு கொள்ளவும்
வின்சென்ட் சொலிசிட்டர்
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU
(ஹிமாலயா தியேட்டருக்கு எதிராக)

**FOR SALE!**
Petrol Station And Shop - West Drayton
West Drayton, Middlesex, Petrol & Retail Sales in excess of £2,500,000pa, A fantastic investment opportunity in West London, Main road location close to Heathrow Airport, Excellent passing trade, Good fuel deals with Texaco, An easily run operation,
Low rent, Leasehold £69,000 + sav
Contact No: 07748963653

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

**Immediate Sale !**
Supermarket & Offlicence shop for Sale
- Rent: £12,000
- Rate: £5,000
- Shop price : £35,000 + Stock
- Turn over per week £6,500 to £7,000
- Location : N5 2LL
- Opening Time : 8 Am to 11 Pm

Contact [Ali] : 07787 135 565
Tel : 020 7226 9148

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

We may have herbal solutions for your problems !!
உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா?
காலத்தை வீணடிக்காமல் தொடர்பு கொள்ளுங்கள்.
ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு
சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
Herbal Aid Health Centre
10 Park Avenue, Southall, Middx, UB1 3AQ
Tel: 020 8843 0330
www.herbalaidhealthcentre.co.uk I herbalaid@hotmail.co.uk

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# Do you want to become an Accountant?

**Sage**

- We teach Sage for those don't have exposure to accounting package.
- Our approach will be more practical oriented and focused on the real accounting issues.
- We will teach the candidate to enable them to work in Sage independently.
- Our course includes the preparation of Trial Balance, Balance Sheet, Profit & Loss Account and VATcomputation including EU Sales Listing.

**Excel**

- We conduct classes for Basic and Advanced Excel (such as V-Lookup, H-Lookup, IF functions, Pivot tables, data worksheet consolidation, IRR & NPV computations) for complex modelling for accountants.
- You will get the chance to learn how to model practical case scenarios.

## AIKON ACCOUNTANTS LTD

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS

**Tel: 020 3585 3484, Mob: 077 1632 4331**

Email: accounts@a-accountants.com Web: www.a-accountants.com

# GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

**07983 589 993**
**07723 467 012**

# United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்



**C1, B1 & B2 Test**

**Our services:**

- ESOL with citizenship (B 1)
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 150 .00 மட்டுமே
* Including Everything

Certificate only in six days

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

**Head Office - Croydon Tel: 0208 1509 953 | 0753 8933 261**
**14, Lombard Business Park, 2 Purley Way, Croydon CR0 3JP.**

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL
AND SHOPFITTING Ltd.



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk



UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

UK COOL & SHOP FITTING LTD



**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR? CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY



# OM GURU SHAKTHI ASTROLOGICAL CENTRE

## GURUJI: KRISHNA SHASRI



இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவர்த்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சனை, வியாபார முன்னேற்றமின்மை, பில்லி சூனியம் மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலலும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங்களை உங்கள் கைநாடி மூலம் கண்டுபிடித்து போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்கு சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

**21 LEE HIGH ROAD**
**LEWISHAM SE13 5LD**

Near: SIVAN TEMPLE, Opposite: KAVIAYA (SATHYAM) SUPER MARKET

**Tel: 07404567306**
**07506737606**

Open
7 Days a Week
9.30am to 8.00pm

# தூவல்




## சேரனுக்கு நன்றி!

ஆசிரியருக்கு,

மெத்தப் படிச்ச பிரமுகர்கள் அலங்கரிக்கும் வடமாகாணசபையே இலங்கையில் நடந்தது இன அழிப்புத்தான் எனக் கூறத் தயங்கியபோது பிறேமன் நகரில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில், தனது வாதத்தை ஆதாரங்களுடன் சமர்ப்பித்து 1948 தொடக்கம், இலங்கையில் இடம் பெறுவது இன அழிப்புத்தான் என ஆணித்தரமாக கூறி வைத்த பேராசிரியர் சேரனுக்கு தலை வணங்குகிறோம். நன்றி

*- அன்புடன் மகாலிங்கம்*

## படம் காட்டப்போகிறார்கள்

சிறிலங்கா விமானப்படை விமானத்தில் பயணம் செய்து இனப்படுகொலை அரசுக்கு தாங்கள்தான் நிதி உதவி செய்கிறோம் என்று வெளிப்படுத்திய லைக்கா கும்பல், இப்போது ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிகர் விஜய் நடிக்கும் படம் ஒன்றை பெரும் செலவில் தயாரிக்கப் போகிறார்களாம். ஈழத் தமிழர்கள் யாழ்ப்பாணத்தின் மருமகனை வைத்து படம் எடுக்கிறார்கள் சிலர்பரபரப்புக் காட்டாலாம். ஆனால் புலம்பெயர் நாடுகளில் இந்த படத்தை புறக்கணிப்பதன் மூலமே இனப்படுகொலை அரசின் பங்காளிகளுக்கு பாடம் கற்பிக்கலாம் என்பதை மக்கள் மறந்து விடக் கூடாது.

*- அன்ரன் செல்வராசா*

## விக்கியை கைவிட்டுடாங்கள்

விக்கினேஸ்வரன் அரசியலுக்கு புதிசு அவர் கதைக்கிறதுகளை கணக்கிலை எடுக்காதேங்கோ. நான், சம்பந்ன், சுமந்திரன் இனப்படுகொலை எண்டதிலை உறுதியாயிருக்கிறம் எண்டு நிலப்பறிப்பு மாநாட்டுக்கு வந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் சொன்னார். அரியநேந்திரன் சொல்லுறார் அந்தாளைப்பற்றி நான் மாகாணசபைதேர்தலுக்கு முந்தியேசொல்லிப்போட்டன். புதிசாய் ஒண்டும் சொல்லுறதுக்கில்லை. ஆனாலும் அந்த மனுசனை இப்பிடி அவமானப்படுத்தக் கூடாது.

*- இணுவை சி. இரங்கன்*

## பணி தொடர வாழ்த்துகள்

கடந்த இதழில் எனது 'வெண் நிலவுகள்' சிறுகதையை பிரசுரித்தமைக்கு நன்றி. புதிய கதையான 'இரவல் திருமணம்' சிறுகதையினை அனுப்பிவைக்கிறேன். (இதன் அங்கங்கள் அறுபடாது என நம்புகிறேன்) மனத்தாங்கல் ஏதும் இல்லை பத்திரிகையின் கொள்கை முக்கியமானதே. முல்லை அமுதனின் கட்டுரை பயனாக இருந்தது . எமது எழுத்தாளர்களையும் கலைஞர்களை நாம் தான் அறிமுகம் செய்ய வேண்டும். தொடர்ந்து இவ்வாறான பத்திகளை பிரசுரியுங்கள். பலன் பாரா உங்கள் பணி தொடர வாழ்த்துகள்.

*- பசுந்திரா சசி*

## கருணாநிதிக்கு ஆபத்தாம்

கருணாநிதி கும்பல் "புலிகளால் தமக்கு ஆபத்து இருப்பதாக" கதை விட்டிருப்பது தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்ந்து பயங்கரவாத போராட்டமாக சித்திரிக்கப்படவும், இந்திய அளவில் புலிகள் மீதான தடை நீடிக்கவும், தமிழக மட்டத்தில் ஈழ ஆதரவு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது சிக்கலை சந்திக்கவும் நேரிடலாம்.. கருணாநிதியை தமிழினத் துரோகி என்று திட்டுவதில் எந்த தவறும் இல்லை..

*- கிருஸ்ணா*

## தமிங்கில ரீவி

Vijay TV எனும் ஆங்கில ஊடகத்தில் honest எனும் வார்த்தையைகோபிநாத், 'காப்பி டீ' போன்ற பெரிய நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் எல்லாம் 'ஹொனஸ்ட்' என தவறாக உச்சரிக்கின்றார்கள். 'ஒனெஸ்ட்' என்பதே சரியான உச்சரிப்பு. தமிழ் ஊடகம் என்றால் பரவாயில்லை. ஒரு ஆங்கில ஊடகத்தில் ஒரு ஆங்கில வார்த்தை தவறாக உச்சரிக்கப்படுவது மனத்தை உறுத்துகின்றது என்று என்ரை நண்பர் ஒருவர் ஆதங்கப்படுகிறார். ஏதோ இவங்கள் ஆங்கிலத்தில் கதைச்சால் பெரிய முதலாளி Rupert Merdoch க்கு விளங்கப்போகிறதா?

*- நளாயினி*

## இவர்களுக்கு அழைப்பு இல்லை

பிரித்தானிய தமிழர் பேரவை லண்டனில் நடாத்திய நிலப்பறிப்புக்கு எதிரான மாநாட்டிற்கு, சம்பந்தன் ஐயா, சுமந்திரன், விக்கி ஐயா போன்றவர்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை என கனடாவிலை இருக்கிற கூட்டமைப்பின் கிளைத் தலைவர் தங்கவேலு கடுப்பிலை இருக்கிறாராம். உள்ளூரிலை பாதர் இமானுவேலுக்கும்அழைப்புகொடுக்கவில்லையாம். இனி இவையள் எல்லாம் சேர்ந்து ஒரு மாநாட்டை நடாத்துவினம் பாருங்கோ.

*- இரதி சிவா*

## நாடே இருக்காது!

தமிழக முதல்வர் ஜெயலலிதா, இந்தியாவின் பிரதமராகும் கனவில் இருக்கிறார். அவரது, கனவு பலித்து அவர் பிரதமரானால், நாடு இருண்டு விடும் என்றும் ஸ்டாலின் கூறியிருக்கிறார். தப்பித்தவறி மு.க. பிரதமராக வந்தால் நாடே இருக்காது கூறு போட்டு விற்றுவிடுவார்கள்.

*- ரெஸ்கோ மணி*

## இனப்படுகொலையை நிறுவவேண்டும் !!

இன்று இனப்படுகொலை நடைபெற்றுள்ளது என்று கூறுகின்ற அனைவரும் இனப்படு கொலையின் அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து மிகச் சரியான ஆதாரபூர்வமான தகவல்கள்-தரவுகள் என்பவற்றை திரட்டி வைத்துள்ளனரா? மேலோட்டமான சில தகவல்களையும் தரவுகளையும் கூறுவது மேடைப் பேச்சுக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் சர்வதேசரீதியில் இன அழிப்பை நிறுவதற்கு இது போதுமானதல்ல.

*- வரதராசன்*

## புதுப்பொலிவுடன் ஐபிசி வானொலி

ஐபிசி வானொலியின் கலையகப் பொறுப்பாளராக பரா பிரபா நியமிக்கப்பட்டுள்ள செய்தி மகிழ்வைத் தருகிறது. சிறந்த ஒலிபரப்பாளரும் தமிழ்த்தேசியவாதியுமான பரா பிரபா அவர்களது நெறியாள்கையில் ஐபிசி வானொலி 2009க்கு முன்னர் இருந்தது போல் சிறப்பாக இயங்கி மக்கள் அபிமானத்தை பெற்றுக் கொள்ளும் என நம்புகிறேன்.

*- அருளம்பலம் சதீஸ்*

## நாம் வலிமையானவர்கள்

தமிழ்ச் சமூகம் வலிமையுடையது... இது ஆசியக் கண்டத்தில் வலிமையான சமூகங்களில் ஒன்று... ஆனால் தனது வலிமையை கண்டறியாமல் சேவகம் செய்யும் அடிமை மனநிலையிலேயே நிற்கிறது... தமிழ்ச் சமூகம் அறச்சீற்றம் கொண்டு உலகம் முழுவதும் எழுந்திருக்குமானால், இந்த மேற்குலகம் மண்டியிட்டாக வேண்டும். இந்தியா மண்டியிட்டு ஆகவேண்டும். உலகில் நமக்கு பல நண்பர்கள் இருக்கிறார்கள். உலகில் இவர்களுக்கு பல எதிரிகள் இருக்கிறார்கள். நாம் புத்தி சாதுர்யத்தோடு செயல்பட வேண்டும்.

*- திருமுருகன்*

கருத்துக்களுக்கு : Tel : 020 7043 4314

# சர்வதேச சமூகத்தின் முன் அரசின் உற்ற தோழனாக விளங்கும் வடமாகாணசபையும், உள்ளூர் தமிழ் மக்களுக்கு அரசின் எதிரியாக வேடமிடும், அமைச்சர்களும்.

'போருக்குப் பிந்திய வடமாகாணத்தின் விவசாய நடவடிக்கைகளில் மத்திய அரச நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் அதிக ஈடுபாட்டைக் காட்டிவருகின்றன. வடக்கின் விவசாயத்தை மீளக் கட்டியெழுப்புவதில் வெளியாரின் முயற்சிகளை நாம் வரவேற்கும் அதே சமயம் இவர்கள் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருக்கவேண்டியும் உள்ளது' என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். முழங்காவில் பொது மண்டபத்தில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் பப்பாசிப் பழங்களை ஏற்றுமதிசெய்யும் நோக்கில் நல்லினப் பப்பாசிக் கன்றுகளை வழங்கும் வைபவம் கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தலைமையில் இடம்பெற்றபோது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'இப்போது பப்பாசி ஏற்றுமதிக்கான சந்தைவாய்ப்பு உருவாகியிருக்கும் நிலையில் அதன் மதிப்பு உயர்ந்திருக்கிறது. எமது விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் இந்தத் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதி உதவியோடு முன்னெடுத்துள்ள சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்திற்கு நாம் நன்றி கூறுவதற்குக் கடமைப்பட்டுள்ளோம். இந்த நிறுவனம் வடமாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைந்தே தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால், பல நிறுவனங்கள் விவசாயத் திணைக்களத்தின் ஆலோசனைகளோ அனுமதியோ இல்லாமல் குறுக்குவழியில் தமது திட்டங்களைச் செயற்படுத்த முனைகின்றன. தன்னிச்சையாக இறப்பர் மரக்கன்றுகளும் சந்தனக் கன்றுகளும் விநியோகிக்கப்படுகின்றன.

கரும்புச் செய்கைக்கென பெருமளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை. இஸ்ரேல் தோடம்பழ ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள ஒரு நாடு. ஒரு தோடம்பழத்தை விளைவிக்க ஐம்பது லீற்றர்கள் தண்ணீர் தேவை. அதாவது ஒரு தோடம்பழத்தை ஏற்றுமதி செய்யும் போது 50 லீற்றர்கள் தண்ணீர் நாட்டைவிட்டு வெளியே அனுப்பப்படுகிறது. மூன்றாம் உலகப்போர் தண்ணீருக்காகவே நிகழும் என்று சொல்லும் அளவிற்கு உலகில் நீர் நெருக்கடி முற்றிக்கொண்டு வருகிறது. இதனால், தண்ணீர் பற்றாக்குறைவான இஸ்ரேல் தனது நீர்வளத்தைக் காப்பாற்றுவதற்காக இப்போது தோடம்பழச் செய்கையைக் குறைக்க ஆரம்பித்திருக்கின்றது.

இதேபோன்று தான் எமது மண்ணிலும் எவற்றை விளைவிப்பதுத் எவற்றை ஏற்றுமதி செய்வது என்பது பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். இவற்றைத் தீர்மானிக்கும் உரிமை இந்த மண்ணைப்பற்றி அக்குவேறு ஆணிவேறாகத் தெரிந்து வைத்திருக்கும் எமது விவசாயிகளுக்கு உரியதே தவிர வெளியாரிடம் இல்லை. வடமாகாண சபையொன்று உருவாகியுள்ள நிலையில் மாகாண விவசாயத் திணைக்களத்தின் அனுமதி பெற்றே நிறுவனங்கள் இங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். உரிய அனுமதி பெறாமல் விநியோகிக்கப்படும் பயிர்கள் பற்றி எமது விவசாயிகள் விழிப்பாக இருக்க வேண்டும். தவறினால் எமது விளைநிலங்களையெல்லாம் வெளியாருக்கென பொருத்தமற்ற பயிர்களுக்குத் தாரைவார்த்துவிட்டு உணவுக்காகத் தென் இலங்கையை நம்பியிருக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படும். அரசும் இதையேதான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது' என்று உபதேசம் செய்துள்ளார்.. ஐங்கரநேசனின் கதையைப் பார்த்தால் வட மாகாண சபைக்கு முழு அதிகாரங்களும் இருப்பது போலவும் தமது செயற்பாடுகள் எதிலும் மத்திய அரசு தலையிட முடியாது என்பது போலவும் காட்டிக் மக்களை ஏமாற்ற முற்படுவது தெரிகின்றது. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் சிறீலங்கா அரசுடன் எந்தவித கலந்தாலோசனையும் இல்லாது வடமாகாண சபையின் நேரடியான கோரிக்கைக்கு அமைவாக அவுஸ்ரேலிய அரசின் நிதி உதவியுடன் முழங்காவிலில் நல்லினப் பப்பாளிக் கன்றுகளை விளைவித்து ஏற்றுமதி செய்யும் திட்டத்தை நடை முறைப்படுத்த முன்வந்துள்ளது போன்ற மாயத் தோற்றத்தை காட்ட முற்பட்டுள்ளார். தேர்தலின்போது ஆளுனரை மாற்றப் போகிறோம் என்றும், சிறீலங்கா தேசியக் கொடியிலுள்ள சிங்கத்தை நீக்கி சிறுத்தையை பொறிக்கப் போகிறேன் என்றும் சீறிச் சீறிக் கதைவிட்டு வாக்கு வேட்டையாடினார்.

தற்போது ஆளுனரை மாற்றுவது பற்றி எந்தக் கதையுமில்லாது வாலைச் சுருட்டிக் கொண்டு பிரதம செயலாளரையாவது மாற்றி ஒரு படம் காட்டலாம் என்று முயன்றனார். தற்போது அதுவும் முடியாத நிலையில் பாதீனியம் புடுங்கப் புறப்பட்டுள்ளன தமிழனத்துள் முளைத்துள்ள பாதீனியங்கள்.

*இது நம் தேசம் இணையத்திலிருந்து*

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400
Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400


Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation
IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test
New rules applicable from October 28th
OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS
for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)
FREE INITIAL ASSESSMENT
Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, FEBRUARY 07, 2014, ISSUE 211

## கிழக்கின் நிலப்பறிப்புப் பற்றிய கவனம் தேவை!

கடந்தவார இறுதியில் பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நில அபகரிப்புக்கு எதிரான மாநாடானது தமிழர் தாயகப்பகுதிகளில் நடைபெறும் சிறிலங்கா அரசினால் திட்டமிட்ட மண் பறிப்பு நடவடிக்கைகள் தொடர்பான விழிப் புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. இலங்கைத் தீவில் நடை பெறும் நிலப்பறிப்பானது இனவிகிதாசாரத்தை மாற்றி, தமிழ் மக்களை தேசிய இனம் என்ற நிலையிலிருந்து சிறுபான்மை இனம் என்ற நிலைக்கு தள்ளும் நோக் கிலானது என்பதனை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய துறைசார் நிபுணர்கள் வெளிப்படுத்தினர். தாயகத்தில் கடமையாற்றி இளைப்பாறிய அரச (காணி) அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டவாளர்கள் போன்றோரும் இவற்றை ஆதாரங்களுடன் முன்வைத்தனர்.

இந்தியாவில் நதிகளின் விரிவாக்க கட்டுமானங்கள் மூலம் நிலங்களை இழக்கும் மக்களுக்காக கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகப் போராடிவரும் சமூகப் போராளி மேதா பட்கர் அம்மையார் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டமையும் `Stop Land Grab, Save Tamils' என்ற கோசத்துடனான நிலப்பறிப்புக்கான போராட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்தமையும் மிக முக்கியம்வாய்ந்த நிகழ்வுகளாகவே கருதப் பட வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கான ஆதரவுத்தளம் தமிழ்நாட்டுக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதன் அவசியம் உணரப்பட் டாலும், அதற்கு செயலருவம் கொடுப்பதற்கான வாய்ப்பாக இந்நிகழ்வினைப் பயன் படுத்தி முன்னே செல்ல வேண்டியது புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் முன்னே விரிந்து நிற்கும் பணியாக அமைகிறது.

இலங்கைத் தீவின் கிழக்கில் நடைபெற்று வரும் நிலஅபகரிப்புகள், குறிப்பாக சம்பூரில் இந்தியாவினால் நிர்வகிக்கப்படவிருக்கும் அனல் மின்சாரத்திட்டத் திற்கான காணிப்பறிப்புகள், தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டமை பற்றிய விபரங் கள், அக்களச்சூழலிலிருந்து வந்தவர்களால் இம்மாநாட்டில் வெளியிடப்பட்டன.

நிலப்பறிப்பு ஒரு புறமிருக்க, இயற்கையான பொருளாதார வளங்கள் கொண்ட பிரதேசங்களிலிருந்து மக்கள் விரட்டப்படுவதன் மூலம் அவர்களது வாழ்வாதாரங் கள் இழக்கப்படுவதனை அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

வடக்கில் நடைபெறும் விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கிச் செய்தி வெளி யிடும் தமிழ் ஊடகங்கள் கிழக்கு விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றம் சாட்டும் இம்மாநாட்டில் உரையாற்றியவர்களால் முன்வைக்கப்பட்டது. இவ் விடயத்தில் ஊடகங்களும், தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*நேரகாலத்திற்கு ஆக்கங்கள் வந்து சேராதுதான் பேப்பர் அடிக்கிறதிலையே இருக்கிற பெரிய பிரச்சனை. இந்தா அனுப்பிறம் அந்தா அனுப்பிறம் எண்டு எங்களை காக்க வைச்சிட்டு அனுப்பாமல் இருக்கிற ஆக்களும் இருக்கினம். கடைசி நேரத்திலை அனுப்பிறவையும் இருக்கினம். இந்த இரண்டாவது வகையான ஆட்கள்தான் அதிகம். ஒரு வேளை up to the minute செய்தியளை தங்கடை ஆக்கங்களை சேர்க்கோணும் எண்ட நல்ல எண்ணமோ என்னவோ, எங்களுக்குத்தான் திக்கு திக்கு எண்டும். இவையள் நேரத்துக்கு தருகினமோ இல்லையோ அச்சகக் காரங்களுக்கு நாங்கள் குறிச்ச நேரத்துக்கு குடுக்கோணும். இல்லையெண்டால் அடுத்த கிழமைக்குத்தான் பேப்பர். இப்பிடியான பிரச்சனைகளாலை பிந்தி வாற ஆக்கங்களை எழுத்துச்சரி பார்க்க நேரமிருக்கிறதில்லை.*

*இப்பிடித்தான் போன பேப்பர் செய்யிற நேரத்திலை நடந்த அந்தடியிலை 3ம் பக்கத்திலை வந்த பிரித்தானிய தமிழர் பேரவையின்ரை அறிக்கை நிறைய எழுத்துப் பிழையோடை பிரசுரிக்கப்பட்டு விட்டது. அதுக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்.*

***ஒரு பேப்பர்** ல் பிரசுரமாகிற வாழ்க்கைத் துணை பக்கம் பற்றி கொஞ்சம் விளக்கமாய் சொல்லோணும். அது இலவசமான சேவை எண்டது உண்மைதான். அதாவது விளம்பரம் போடுறதுகுத்தான் அது இலவசம். ஆனால் விளம்பரங்கள் கொடுத்திருக்கிறவையின் தொடர்பு விபரங்கள் வேணும் எண்டால் நீங்கள் ஒரு சிறுகட்டணத்தை நீங்கள் தரவேண்டியிருக்கும். இது என்னத்துக்கெண்டால், பணியக செலவுகளுக்காக மட்டுமே. இது எல்லா இடமும் நடக்கிற வழமையான விசயம்தான் எண்டாலும் சிலர் பிழையாய் விளங்கிக் கொள்கிற தாலை இதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கு. இது ஒண்டும் dating agency இல்லை. பொறுப்பான பணி எண்டதையும் நாங்கள் சொல்லி வைக்க விரும்பிறம்.*

*சிலர் நேரத்துக்கு ஆக்கங்களை அனுப்பிறதில்லை எண்டும் சொன்னோம் அவை ஆரெண்டு சொல்லவில்லை. அது தேவையும் இல்லை ஆனால் நேரத்துக்கு ஆக்கங்களை அனுப்பிறதிலை முன்னுக்கு நிக்கிற ஆளை ஆரெண்டு சொல்லுறம். அது வேறு ஆருமில்லை திரு. உமா மகாலிங்கம் அவர்கள்தான். விடுமுறையில் வேறு நாடுகளுக்கு போனாலும் அவர் குறித்த நேரத்துக்கு முந்தியே அனுப்பிவிடுவார். அவருக்கு எங்கடை மெத்தப்பெரிய நன்றியைத் தெரிவித்து கொள்கிறம்.*

***ஒரு பேப்பர்** ன் பத்தாண்டு நிறைவு நெருங்குது. என்ன செய்யலாம் எண்டு நீங்கள் நினைக்கிறியள்? ஒண்டும் வேண்டாமடாப்பு சும்மாயிருங்கோ எண்டு ஆலொசனை சொன்னாலும் நீங்கள் சொன்னால் ஏற்றுக் கொள்ளுவம்?.*

*வேறை என்ன?*

*சந்திப்பம்*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Sinhalese and their fear of freedom



By Sajeeva Samaranayake

Anagarika Dharmapala, A.E. Goonesinha and C.W.W. Kannangara, three of the radical champions of the early 20th century who were 'managed' by the conservative leaders who eventually negotiated 'freedom' from the British.

With the displacement from Rajarata, the heart, soul and body of their ancient culture in the 13th century the Sinhalese settled for safety over liberty; mediocrity over excellence.

By the 18th and 19th centuries the Sinhalese, after sustained exposure to the pressures of colonization had developed a self defeating defensive mechanism. This mechanism remains in full operation as we move into the 21st century and it is something that all Sri Lankans must view and review seriously.

Thus when they made partial progress either spiritually or materially during this period they tended to revert back to the safety of caste, religious or race identity and belonging. Moving another step forward towards excellence and freedom was not an option to be exercised. Freedom is a radical and not conventional value. In Sri Lanka unlike in India the idea of freedom was confined within conventional bounds in religion, society and politics alike. Radical champions like Anagarika Dharmapala, A.E. Goonesinha and C.W.W. Kannangara suffered deeply due to the absence of a radical tradition of freedom in this country. They were essentially misfits in a society retarded by conventional social respectability.

We can see this very clearly in the outcomes of the revival of monastic ordination in 1753 where admission to the Siyam Nikaya was confined to the 'high born' govi caste. Likewise the emergent middle class of the 19th century and beyond tended to frame their identity and wealth within tightly knit family and caste circles. Religious revivals of both Buddhists and Hindus of the 19th century significantly failed, to address the internal cancer of caste division. In fact the leading Bikkhus belonging to the caste stratified Siyam and Amarapura Nikayas were drawn into the middle class competition for social mobility with the Govi and three main low country castes, each vying through the new print media to prove their own superiority against the other. Only the smallest Nikaya – the Ramanna Nikaya established in1863 publicly eschewed all caste distinctions.

Thus whatever advantage was gained – spiritually or materially was secured on the basis of parochial distinctions. There was a fear of the freedom that beckoned those individuals who achieved a position of power. They could open the doors to the sources of power they discovered so that all society could benefit. Or they could restrict them to a preferred class. Unfortunately a majority of our leaders preferred the latter option – thus maintaining the social distance between the privileged and under-privileged in this island.

We must therefore look at those radical and marginal movements (on the nonviolent side) who were courageous enough to take their spiritual, social and economic freedoms to their logical conclusions, departing from the ways of their more conservative brethren. On the national scale the fate of free education is a case in point.

By the 18th and 19th centuries the Sinhalese, after sustained exposure to the pressures of colonization had developed a self defeating defensive mechanism. This mechanism remains in full operation as we move into the 21st century and it is something that all Sri Lankans must view and review seriously.

On the Tamil side we have the example of the Jaffna Youth Congress in the 1930's and on the Muslim side the life work of Dr. A.M.A. Azeez. Two prominent Sinhala intellectuals who also exhibited freedom of thought and action were Ven. Balangoda Ananda Maitreya and Dr. E.W. Adhikaram.

The fear of freedom is often disguised under the label "apekama" and this insecurity lies at the root of all narrow and adversarial operations mounted – particularly (but not exclusively) by Sinhala Buddhists from colonial times. In fact and in truth "apekama" refers to a rich, internal cultural value that is not tied down by external symbolism as such. It is an expression of the Sinhalese cultural inheritance, but like all heritages it has been mis-interpreted, abused and exploited.

The Sinhala Buddhists have been quick to celebrate a limited advantage and consolidate merely upon achieving half a point. In fact this half a point is blown out of all proportion to provide a cast iron guarantee against any further progress. Mediocrity (in the sense of partial achievement) is thus celebrated and entrenched within the popular imagination. Having taken the ball halfway up the pitch we erect an artificial goal and put the ball out of reach of everyone else without moving right up and attacking the true goal at the end of the pitch.

This is of course a cheap substitute for the real thing. But we have not known freedom or what is real for centuries.

# A Nation Of Bystanders



By : Tisaranee Gunasekara

*"There must be some way out of here…." -Bob Dylan (All along the Watchtower)*

Mel Gunasekera, the accomplished journalist; Lahiru Sandaruwan Rathnayake, the aspiring undergraduate – both died last week. The acclaimed journalist at the Zenith of her profession was murdered, reportedly by a non-professional thief. The unknown student at the threshold of his university life died, when a pre-existing health condition turned lethal during the military-conducted 'Leadership Training Programme' all university-entrants are subjected to.

Both deaths were senseless and preventable. That they happened at all are indicative of the irrational, pitiless and brutish place Sri Lanka is becoming.

When societies lose their collective sense of shame/decency and justice/fairness they become dangerously dysfunctional places for their own people.

In his eulogy on Mel Gunasekera, Sanjana Hattotuwa wrote, "Her murder blindsided many of us because she wasn't on our list of those against whom hate, hurt or harm would be directly channelled. She wasn't working on any story that risked her life. She was just a damn good journalist. And damn good journalists don't die like she did. They don't. They can't." Except that they do and they can, in a society which is becoming inured to decency and compassion, which is losing sense of reason and proportionality, which sees violence as the first and the ideal solution to any problem.

The murder of Mel Gunasekera and the death of Lahiru Rathnayake demonstrate that in this Sri Lanka, one does not have to be a Rajapaksa opponent to be felled by sudden, unnatural death. Irrational laws and societal violence can claim the life of even the most non-political citizen, anytime. In this country which spends the largest chunk of its national wealth on national security, security has become the prerogative of power-wielders and their kith and kin while the rest of the citizenry live with chronic insecurity and perpetual threat of violence.

The Eelam War ended almost five years ago. Since then Lankan society has lurched from violence to ghastlier violence. Crimes are becoming more brutal and more anti-civilisational.

Last year, a four month old girl and a ninety year old (bedridden) woman were raped. In this thrice-blessed Mother Lanka, the only females safe from rapine seem to be the unborn ones and the dead ones.

Why is post-war Sri Lanka becoming such an extremely unsafe country for her people, especially her children?

## The Moral and Rational Slide

The Greek philosopher Protagoras, in Plato's eponymous book, relates that Zeus sought to endow the young mankind with civic-wisdom through two vital gifts: aidos (shame/decency) and dike (justice/even-handedness/fairness). Zeus insists that these gifts must be given to all, "for cities cannot be formed if only a few share in these skills as they do in other arts."

When societies lose their collective sense of shame/decency and justice/fairness they become dangerously dysfunctional places for their own people.

In 2012, at a school in the Galle District, a group of uniform-wearing students, led, aided and abetted by a mob of parents, launched a violent attack on the incoming principal.

A twelve-year-old boy who would have hacked his sister with a manne, after breaking open her door, had he not been restrained by adults, and a nine-year-old girl who stabbed her father in the back with a kitchen knife are two examples mentioned by Kumudini Hettiarachchi in her timely piece on that gathering malaise – child-violence.

"Violence has become a familiarity in society" warned Professor of Criminology and Head of Department of Sociology and Anthropology, WM Jayasundara. A society which lived with a civil war for thirty blood-soaked years cannot be immune to the Post-Traumatic Stress Disorder anymore than its military is.

"Military training has to make people do things which they do not do in civilian life". The military-landscape has to be free of many familiar and vitally necessary 'moral landmarks', starting with the universal injunction against taking a human life. Military values and civil values cannot and must not be identical. 'If the sword is not used in war, is it for cutting jak-fruit?' That popular Sinhala aphorism pinpoints two equally seminal truths: in wars, swords are necessary, but they have no place in civilian lives. Militaries must be kept sequestered from larger society, to protect societies from the ethos of violence without which a military is not a military. When a country deliberately breaks down that necessary wall, when it hails the war as a meritorious enterprise, glorifies soldiers as infallible supermen and upholds martial-valour as the greatest of virtues, it unplugs those psychological and moral safeguards which prevent the contagion of violence from infesting the national bloodstream.

The Rajapaksa government cannot offer solutions because it a vital part of the problem. It is the Ruling Siblings who are militarizing society, including psychologically. The best case in point is the 'Leadership Training Programme', which aims at transforming universities from breeding grounds for dissent into epicentres of conformism

After the October 2007 Black Tiger-attack on the Saliyapura Air Force camp, the naked bodies of the attackers (including three women) were loaded into two tractors and paraded in Anuradhapura town. Sinhala-South responded to this horrendous spectacle with embarrassment and outrage; the dominant feeling was that such denigration of the dead enemy was against our values. In 2009 when the dead body of Vellupillai Pirapaharan was stripped down to his underpants and displayed on national-television that same society responded with equanimity if not approbation. That differential response was indicative of the eons we had travelled, morally and ethically, in less than two years.

According to Dr Jayan Mendis, the specialist psychiatrist of the National Institute of Mental Health, "All those who are 30 years or so were born, bred and schooled within a war situation….. They knew of war and war alone….. Some would want to kill any person who troubles him on even a small issue, just to get even. They know of killings and murder quite well. That is their experience…. These murders show that Sri Lankan society is sick… The Police may not be able to cure this by themselves. It is within the responsibility of the government."

We started off by ignoring Tamil victims. Now we are indifferent to our own, including children.

The Rajapaksa government cannot offer solutions because it a vital part of the problem. It is the Ruling Siblings who are militarizing society, including psychologically. The best case in point is the 'Leadership Training Programme', which aims at transforming universities from breeding grounds for dissent into epicentres of conformism.

"Laws are not enforced properly and the police do not carry out their duties properly. Police now act according to politicians' dictate," Professor Jayasundara points out. A society can be simultaneously unlawful and 'disciplined' in a regimented sense. An individual can be an obedient subject and a violent citizen. The regimentation of public spaces can coexist with societal lawlessness. The same person who will not dream of breaking the militarised code-of-conduct prevailing in the new Gardens of Gotabhaya may not hesitate to kill a man or abuse a child. Mindless obedience and mindless violence are the two sides of the same pitiless, irrational, shameless coin.

Both deaths were senseless and preventable. That they happened at all are indicative of the irrational, pitiless and brutish place Sri Lanka is becoming.

On 25th October 2012, a businessman was hacked by two motorcyclists at a busy junction in Galle, in full view of hundreds of people. No one intervened to prevent the crime or to help the victim (until the arrival of the municipal ambulance). They just watched.

We started off by ignoring Tamil victims. Now we are indifferent to our own, including children.

How many Mel Gunasekeras and Lahiru Rathnayakes must die before we realise that we cannot remain a nation of bystanders except at our own peril?

*Courtesy: Colombo Telegraph*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
**அ.இரவி - மணி - அகிலன் மாதவன்**

கனடா
**தயா - அரவிந்தன் - சிந்து**

பொறுப்பாசிரியர்
**- கோபி -**

மக்கள் தொடர்பு
**சோபனா அருந்தவச்செல்வம்**

விளம்பரம்
**சோபனா - அஜந்தா**

அச்சு
**தர்சினி (கனடா) - சுகன்யா**

வடிவமைப்பு
**மயூ - யுகன்**

முகப்பு வடிவமைப்பு
**seven zero graphics**

விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - மாயா - சாரங்கன்**

தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**

நிதி – நிர்வாகம்
**சோபனா அருந்தவச்செல்வம்**

வழங்கல்
**உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்**



**உங்கள் தொடர்புகட்கு:**

தொலைபேசி (Tel)
**லண்டன் 020 7043 4310**
**கனடா 416 613 2850**

தொலைநகல் (Fax)
**லண்டன் 020 7043 4312**
**கனடா 416 438 7855**

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

**பணிமனை முகவரி**
**ORU PAPER**
**G11 LOMBARD HOUSE**
**2 PURLEY WAY**
**CROYDON, CR0 3JP**

மின்னஞ்சல்:
**info@orupaper.com**

இணையம்:
**www.orupaper.com**



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# தீர்ப்பு வழங்குவது வரலாற்றுக்கு மட்டுமே உள்ள கடமை

தொப்புளைப் பார்த்துக் கொண்டே தமது வரலாற்றைத் தீர்மானிக்கும் நாயகர்களாகவும், வரலாற்றை முழுமையாகவும், 'உண்மையாக வும்' எழுத அழைக்கப்பட்டிருக்கும் 'தெரிவு' செய் யப்பட்டவர்களாகவும் தமிழ் எழுத்தாளர்கள் சிலர் ஈழப்போராட்டம் பற்றி 'அறுதியான' கருத்து களை முன்வைப்பதானது நகைப்பையூட்டுவ தாக உள்ளது. இவர்களில் ஒரு பகுதியினர் போராட்டத்துடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தவர்கள். இன்னொரு பகுதியினர் உள்ளிருந்து குளிபறித்துப் பின்னர் வெளியிருந் தும் குளிபறித்துக் கொண்டிருப்பவர்கள்.

நான் 'போராளி' என்று கூறுவதும், போராட் டத்தை அழிக்கும் நோக்கில் நேரடியாகவும் வெளிப் படையாகவும் பிரகடனப்படுத்தியும் செயற்பட்டதும் எவ்வகையிலும் யாருக்கும் முரண்பாடான ஒன் றாகத் தெரியாதது ஆச்சரியமளிக்கிறது. தவறான போராட்டத்தில் தவறான முறையில் ஈடுபட்டவர் கள் யாரும் தம்மைப் அந்தப் போராட்டதின் பங் காளிகள் என்று பறைசாற்றுவதில்லை.

'புத்திசாலித்தனமான' சொல்லாடல்களையும், சந்தர்ப்பவாத 'அறிவியலையும்' மட்டுமே ஆயுத மாக்கி அரசியலோ அன்றில் வரலாறோ தீரமானிக் கப்படுவதில்லை.

பிரஞ்சுப் புரட்சி மற்றும் பரிஸ் கம்யூன் புரட்சி பற்றிய வரலாற்றாளர்கள் மத்தியில் காணப்பட்ட ஒரு முக்கிய முரண்பாடு என்னவென்றால், அவர்கள் இப்புரட்சிகளின் வரலாற்றை இருகூறுக ளாகப் பிரித்துப் பார்க்க முயன்றார்கள். அதாவது, புரட்சியின் நல்ல பக்கங்கள் என ஒரு பகுதி யாகவும், தீய பக்கங்கள் என இன்னொரு பகுதியா கவுமாக. புரட்சியின் நோக்கங்கள் நியாயமானவை யென்றும் அப்புரட்சி நடைமுறையில் பல அநீதி களைக் கொண்டிருந்தது என்றும் விவாதங்களை முன்னெடுத்தார்கள்.

விதிவிலக்கற்ற வகையில் இடதுசாரிகளாலும், கார்ல் மாக்ஸினாலும் கூட, விதந்துரைக்கப்பட்ட இப்புரட்சிகள் பயங்கரங்களையும், கொடூரங் களையும் தம்மகத்தே கொண்டிருந்தன. புரட்சி யாளர்கள் எந்த மக்களுக்காகப் புரட்சியை ஆரம் பித்தார்களோ அவர்களில் பலரையே அவர்கள் பலியாக்கினார்கள். புரட்சியின் சூழ்நிலைகள், அதன் எதிர்பாராத போக்குகள் மற்றும் உள் ளார்ந்த எதிர்ப்புரட்சிச் சக்திகள் போன்றவை அர்ப் பணிப்புமிக்க புரட்சியாளர்களை கொடூரம் விளை விப்பவர்களாகவும் மாற்றியிருந்தது. இது வர லாற்றில் யாரும் மறுக்கமுடியாத உண்மை.

இக்கொடூரங்களை முன்நிறுத்தி, இவ்விரண்டு தோல்விகண்ட புரட்சிகளையும் அதன் இலக்கு களையும் அழிக்கும் முயற்சியில் பிற்போக்குவாத, தனிப்பட்ட வஞ்சத்தைத் தீர்க்கும் நோக்கிலான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. தோற்றுப் போனவர்களின் முதுகில் சாவரி செய்வதைப் போல் இலகுவானதும் இழிவானதுமான செய லொன்று இருக்முடியாதென்பதில் இரண்டு நிலைப்பட்ட கருத்திருக்கமுடியாது.

ஆனால், காலப்போக்கில் வரலாற்றாளர்களில் மிகப்பெரும்பான்மையினர் இவ்விரண்டு புரட்சி யின் மீதும் நல்ல பக்கங்கள், தீய பக்கங்கள் எனப் பிறிதாக்கம் செய்யமுடியாதென்றும் அவற்றை ஒருமுழுமையான 'புளொக்' காக மட்டுமே பார்க்க முடியும் என்றும் இணங்கிக் கொண்டார்கள்.

பிரஞ்சுப் புரட்சியின் இரண்டாவது நூற்றாண்டு விழாக்கள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் இது மிகவும் உறுதியான முறையில் வெளிப்படுத் தப்பட்டது. வரலாறு அது நடைபெற்ற காலத்திலி ருந்து நகர்ந்து செல்கையில் அதுபற்றிய கருத்து களும் பார்வைகளும், ஆய்வுகளும் மாறுபட்டுச் செல்கின்றன. இது ஒரு தவிர்க்கமுடியாத வர லாற்று இயல்பாகும். இவ்விடயம் தனியாக பிரஞ்சுப் புரட்சிக்கும், பரிஸ் கம்யூன் புரட்சிக்கும் மட்டுமே பொதுவான விடயம் அல்ல.

பரிஸ் கம்யூன் புரட்சிவாதிகள் 26 மே 1871 ல் நடாத்திய படுகொலைகள் பாரதூரமான கொடு ரங்கள் நிறைந்தவை. இருப்பினும் கார்ல் மாக்ஸ் இந்தப்புரட்சியை தலையில் வைத்துக் கொண்டா டினார் என்பதையும் மறக்காதிருத்தல் வேண்டும். இதற்கான காரணத்தை கார்ல் மாக்ஸிடம் கேட் டறிந்துகொள்ளும் வாய்ப்புஎமக்கில்லை. அவரின் ஆவியுடன் கதைப்பவர்களில் நம்பிக்கை வைப் பதும் உவப்பான ஒன்றல்ல.

புரட்சி, போராட்டம் எனும் பரிமாணங்களுக்குள் வரலாறு நுழையும்போது வன்முறையும் கொடு ரங்களும் அனுமதியின்றியே அங்கு நுழைந்து விடுகின்றன. அநீதியின் பிரசன்னம் அங்கு தவிர்க்க முடியாததாகிறது. மனித அறிவிற்கும், விருப்பிற் குமிடையிலான முரண்பாடுகளை உளவியற் தளத்தில் அணுகுவது பற்றி நாம் கற்றுக் கொள்ள இன்னமும் ஏராளமான விடயங்கள் உள்ளன.

இவ்வகையில்தான் ஈழப்போராட்டமும் அதன் 'நல்ல,தீய' பக்கங்களும் பார்க்கப்படல் வேண்டும் எனத்தோன்றுகிறது. ஆசியக் கண்டத்தில் மிகப் பெரிய பொருளாதார மாற்றங்கள் நடைபெற்ற அல்லது நடைபெறும் ஒரு காலகட்டத்தில், உலகின் வல்லரசுகள் தங்கள் நலன்களை இக் கண்டத்தில் நிலைநிறுத்த உக்கிர முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில், ஈழப் போராட்டம் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துத் தோற்றுப்போனது. ஈழத்தில் தமிழர் களின் இருப்பு நிலைக்கும், இப்பிரதேசத்திலான சர்வதேச நலன்களுக்குமான ஒரு போராட்டமாக இந்தப் போராட்டத்தைப் பார்த்தல் உகந்தது.

அண்மைக் காலங்களில் ஈழப்போராட்டதின் இறுக்கட்ட இலக்கிய விபரிப்புகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. இறுதிக்கட்ட அவலங்க ளின் சாட்சிகள் தங்களுக்குள்ளேயே போட்டி போட்டுக்கொள்ளும் நிலைமையொன்று உரு வாகியுள்ளதாகவும் தோன்றுகிறது.

போராட்டத்துடன் நெருங்கிப் பிணைந்திருந் தவர்கள் கூட 'நான் அவனில்லை அல்லது அவளில்லை' எனும் நிலைப்பாட்டை உறுதி செய்யும் வண்ணமாகவும், 'பாம்புக்குத் தலை, மீனுக்கு வால்' என்ற நிலைப்பாட்டிலும் தான் இன்றுள்ளார்கள் எனத் தோன்றுகிறது.

ஈழப்போராட்டத்தின் சாட்சிகளின் பதிவுகள் ஆரம்ப நிலையில்தான் இருக்கிறன. இன்னமும் ஏராளமான விடயங்கள் வெளிவரவேண்டியிருக் கிறது. அதற்கான சூழ்நிலைகள் இன்னமும் உரு வாகியிருப்பதாகவும் சொல்லமுடியாது. போரில் இறந்தவர்களுக்கு வெளிப்படையாக அஞ்சலி செலுத்த உரிமையற்ற நாட்டில், போர் தொடர் பான கருத்துகளை வெளிப்படையாக முன் வைக்கும் உரிமை இருப்பதாக யாரும் அப்பா வித்தனமாகக் கருதிவிடமுடியாது.

சாட்சியங்களும் ஞாபகக் குறிப்புகளும் வரலா றாக மாற்றம் பெறுவதற்கு அது புறநிலை ஆய் வொன்றினூடாக அணுகப்படவேண்டும். குறிப் பாக அப்படியான ஒரு ஆய்வு, இவ்வரலாற்றுச் சம்பவங்களுடன் நேரடிப் பங்காற்றல் இல்லா தவர்களினால் முன்னெடுக்கப்படவேண்டும். இந் நிலைகள் சாத்தியப்படவேண்டுமானால் அதற் குக் காலம் முன்னகரவேண்டும்.

அதுவரையும் பதிவுகளையும், சாட்சியங்களை யும், ஞாபகக் குறிப்புகளையும், புனைவுகளை யும், பொய்களையும் உங்வாங்கி சலனமற்றுப் பகுப்பாய்வு செய்யும் பக்குவம் நம்மெல்லோருக் கும் வேண்டும்.

*க.வாசுதேவன்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## மதமும் தியானமும்.

ஒவ்வொரு மனிதனும், தனிப்பட்ட முறையில் தன் மேலான அறிவு நிலையை அல்லது தன் உணர் வைப் பயன்படுத்தி, தனக்குள்ளே உள்ள உண் மையை உணர்ந்து கொள்வது தான் மதம் அல்லது மதத் தன்மை. இந்த உள்ளே இருக்கும் உண் மையை, பொது அறிவாக, இந்தப் உலகப் பொருள் களில் ஒன்றாக ஆக்க முடியாது. அவர் அவர் தனித் தனியே அறியப்பட வேண்டியது. ஒவ்வொருவரும் இதைச் சந்திக்க தங்கள் அகத்தின் உள்ளே மிக ஆழமாகச் செல்ல வேண்டும்.

எங்கள் அகத்தை நோக்கிப் பார்ப்போமானால் அகத்தே உள் உலகம் மூன்று வகையான கட்டங் களில் உள்ளது. முதலாவதாக, எண்ணங்கள். இது மிகவும் மேலோட்டமானது. இரண்டாவது உணர் வுகள். இது சற்று ஆழமானது. மூன்றாவது உயிர்த் தன்மை. இதுதான் எங்களுடைய கடவுள் தன்மை. இதை எங்களுள்ளே சென்று அறிவது அல்லது அறிய முயற்சிப்பதுதான் அந்தக் கடவுள் தன்மை அடைவதற்கு சமனான நிலை.

முதல் சந்திக்கும் எண்ணங்கள் எமது மனம் தான். ஆனால் அது எங்களுடைய உண்மையான நிலை இல்லை. அது எங்கள் மூளையில் இருந் தாலும் உண்மையில் அது நாங்கள் அல்ல. எண் ணங்கள் எல்லாம் வெளியே உள்ள பொருட்க ளின் மூலம் எங்கள் மூளையில் தாக்கம் பெற்று பதிவாகிஇருப்பதுபுரியும். அதாவது அவற்றின் வேர் களின் அடிப்படை வெளியேதான் இருக்கிறது. இப்படி ஏற்பட்ட எண்ணங்களின் பிரதிபலிப்புத் தான் எங்கள் மூளையில் சேர்ந்து ஒரு பெரிய சுவர் போல் உள்ளது. நாங்கள் இந்தச் சுவரைக் கடந்து தான் உள்ளே செல்ல வேண்டும். இதற்கான வழியில எங்கள் எண்ணங்களை வெறுமனே எந்தவித விமர்சனத்திற்கும் உட்படுத்தாது அவதா னிக்க வேண்டும்.

இப்படி எங்கள் உள்நோக்கிய கவனிப்பு செம்மை யாகும்போது அதே விகிதத்தில் எங்கள் எண்ண ஓட்டங்கள் குறையும். எடுத்துக்காட்டிற்கு கவனித் தலுக்கான சக்தி 90 சத வீதமாக வெளி எண்ணங் களுக்கான சக்தி 10 சத வீதமாக இருக்கும். எப் பொழுது எங்கள் சக்தி 100 சதவீதம் கவனத்தில் உள்ளதோ அப்போது எங்கள் மனம் வெற்றிடம் ஆகும். அம்மனம் ஒன்றுமற்ற தன்மையை அடைந்துவிடுகின்றது. மேற்கொண்ட முறையைக் கடைப்பிடிப்பதுதான் தியானம். இந்த உள் மன யாத்திரை மிகவும் புதுமை உடையதாக இருக்கும். இதுதான் அவர் அவர் தனிப்பட்ட முறையில் தன் மேலான அறிவு நிலையை அல்லது தன் உணர் வைக் கொண்டு தனக்கு உள்ளே உள்ள உண் மையை உணர்ந்து கொள்ளுதல். இதை அனுபவ வாயிலாக உணர முடியும்.

ஒரு கட்டத்தில் எங்களிடமிருந்து இவைகள் மறைந்து செல்வதை உணருவோம். இப்படியாக அனைத்தும் மறையும் போது நாங்கள் எங்கள் மனத்தைக் கடந்து விட்டோம். மனத்தைக் கடந்த பின்பு, நாங்கள் எங்கள் உள்ளேயே நிசப்தமான தன்மையில் இருப்போம்.

இங்கே எந்த மனச் சலனமும் கிடையாது. இது தான் உண்மையான நாங்கள் அல்லது நாம். அது தான் எங்களின் இருப்பு நிலை. இந்த உயிர்த் தன் மையின் வெளிப்பாடுதான் உண்மை. இந்த உண் மையை அல்லது மதத் தன்மையை அடைவது தான் தியானம். இதுதான் மதங்களின் கடமை யாகவும் இருக்க வேண்டும். இதற்குத்தான் மதங் கள் உதவி செய்ய வேண்டும்.

மதம் எப்பொழுதும் தனி மனிதன் சம்பந்தப் பட்டது. அது கூட்டத்தைக் கொண்டது அல்ல. எப் பொழுது ஒரு உண்மை கட்டமைப்புக்குள் ஆக்கப் படுகின்றதோ அப்பொழுது அது இல்லாமல் போய் விடுகிறது. பின்பு அது இயக்கம், நீதி, போதனை, மகத்துவம், கொள்கை, சம்பிரதாயம், சடங்கு என்று ஆகிவிடுகின்றது. அதன் பின் அதை யாரும் அனு பவவாயிலாக அறியமுடியாது. அது ஒரு தனிமனித அனுபவம். ஆனால் நாங்கள் எல்லோரும் இந்த சடங்குகளுடன் காலம்காலமாகப் பழகிவிட்டோம். இந்த மதம் அல்லது மதத் தன்மை, தனிமத அனுபவம் ஒவ்வொருவரிடமும் தனித் தனியாகவே இயங்கும்.

இதை எங்களுடைய காதலுக்கு ஒப்பிடலாம். எந்தப் பெண்ணையும் கூட்டமாகக் காதலிக்க முடி யாது. அப்படிச் செய்தால் அதற்குப் பெயர் காதல் அல்ல. ஆனால் எங்களுடைய மதங்கள் யாவற்றி லும் இதுதான் நடக்குகிறது. அதாவது கூட்டமாகப் போய்க்காதலிக்கிறோம், மன்றாடுகின்றோம், இங்கே எங்களுக்குப் பதிலாக மதவாதிகள் கடவுளிடம் வேண்டுகிறார்கள். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் பட வேண்டாம். எல்லாம் அவர் பார்த்துக் கொள் வார். இதுதான் எல்லா மதங்களிலும் நடக்கிறது. எல்லா மதங்களுமே உண்மையைத் தேடுவதாக இல்லை. இவ்வளவு காலங்களாகியும் எந்த உண் மையை கண்டு அறிந்தார்கள் இந்த மக்கள். மதங்கள் இதுவரை மதத் தன்மையை அதிகரிக்கச் சய்யவில்லை. அப்படியாயின் என்ன செய்து கொண்டு இருக்கின்றார்கள். அதாவது மத நூல்கள் சொல்வதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு மனி தனும் தனிப்பட்ட முறையில் தன் மேலான அறிவு நிலையை அல்லது தன் உணர்வுகளைக் கொண்டு தனக்கு உள்ளே உள்ள உண்மையை உணர்ந்து கொள்வதுதான் உண்மையான மதம்.

*- ஞா.மனோகரன்*

# சிறிலங்கா அரசின் இரட்டை முகம்




**கோபி**
*ஒரு பேப்பர்*

'66ஆவது சுதந்திரதின விழாவைக் கொண்டாடும் இன்றைய நாளில், எமது மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தி, மீண்டும் மேலெழுந்துவரும் காலனித்துவ சக்திகளின் அதிகார ஆணைகளில் இருந்து விடுபட்டு, எமது எதிர்காலத்தை நாம் தீர்மானிப்போம்.' இவை சிறிலங்காவின் சுதந்திரதின நிகழ்ச்சியில் மகிந்த இராஜபக்ச ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்டவை. இவ்வுரையின் இன்னொரிடத்தில் "வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் மனித உரிமை, ஜனநாயகம் ஆகியவற்றை முன்னிறுத்திக் கொண்டே நாட்டுக்குள் உள்நுழைகின்றனர்." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக, இலங்கைத்தீவிற்கு பயணம் செய்திருந்த அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான உதவிச் செயலாளர் நிஷா பிஸ்வால், சிறிலங்காவின் பாதுகாப்புச்செயலர் கோத்தாபாயவை சந்தித்திருந்தார். அச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட கோத்தாபாய, "பிஸ்வால் அவரது அறியாமையினால் சிறிலங்காவின் மனிதவுரிமைகள் பற்றி குற்றம்சாட்டுகிறார். அவருக்கு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இங்குள்ள நிலைமையை விளக்கியிருக்க வேண்டும்" எனத் தெரிவித்திருந்தார். முன்னர் ரொபர்ட் ஓ பிளேக் வகித்த இப்பதவிக்கு கடந்த வருடம் நியமிக்கப்பட்ட நிஷா பிஸ்வால்க்கும் கோத்தபாயவிற்கும் இடையிலான சந்திப்பு சுமூகமானதாக அமையவில்லை என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு நாடுகள் மீது கண்டனம் தெரிவிப்பதும், அவர்கள் தமது நாட்டின் ஆட்புல இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டுவதும், 'நீங்கள் உதவாவிட்டால் நாங்கள் சீனாவிடம் போவோம்' என சிறிலங்கா அரசியல் தலைவர்கள் சவால் விடுவதும், புதிதான ஒரு விடயமில்லை. பின் முள்ளிவாய்க்கால் காலத்தில் இவ்வாறு நிறையவே பேசப்படுவதனை கொழும்பு ஊடகங்கள், குறிப்பாக அரச ஆதரவு ஊடகங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

உள்ளூரில் தமிழர்களினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்தை (அவர்களின் மொழியில் 'பயங்கரவாதம்') முறியடித்த தமது அரசாங்கத்திற்கு மேற்கத்தைய நாடுகளிலிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறி சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளமுடியும் என சிறிலங்கா அரசாங்கம் நம்புகிறது. இவ்விடத்தில், 'பூதம் வரப்போகிறது' எனக் குழந்தைகளைப் பயமூட்டுவதுபோல், வெளிநாடுகள் வந்து ஆக்கிரமிக்கப் போகிறார்கள் என சிங்கள மக்களைப் பயமுறுத்த முடியுமா எனச் சிலர் ஆச்சரியப்படலாம். ஆனால் சிங்களத் தேசியவாதிகளின் பொதுப்புத்தியில் வெளிச்சக்திகள் தொடர்பான அச்சம் உறைந்திருப்பது, சிங்கள ஆட்சியாளர்களுக்கு நன்கு வசதியாக அமைந்துள்ளது என்பதனை நடைமுறை உதாரணங்கள் மூலம் விளங்கிக் கொள்ளமுடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் சிங்களக் கல்வியாளர் ஒருவரது நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய சிங்கள தேசியவாதியும், பிரான்சுக்கான சிறிலங்காத் தூதுவராகக் கடமையாற்றியவருமான தயான் ஜயதிலக சிறிலங்காவிற்கு வட திசையிலிருந்து அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக்கூறி அவ்வாறான நான்கு தரப்பினரைப் பட்டியலிட்டார்.

ஒன்று இலங்கைத் தீவின் வடக்கில் உள்ள தமிழ்த் தேசிய சக்திகள், இரண்டாவது இலங்கைக்கு வடக்கில் இருக்கும் தமிழ்நாட்டில் உள்ள ஈழ ஆதரவுச் சக்திகள், குறிப்பாக மாணவர்கள், மூன்றாவது இந்தியாவின் வடக்கில் உள்ள புதுடில்லி ஆராய்ச்சி மையம், நான்காவது பூகோளத்தின் வடக்கு (Global North) என அழைக்கப்படும் வடஅமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகள் என தனது கருத்தினை வலியுறுத்தி, எவ்விதமான அச்சுறுத்தல்கள் இத்தரப்புகளிலிருந்து எதிர்பார்க்க முடியும் எனவும் விபரித்திருந்தார்.

சிறிலங்கா அரசாங்கம் மனிதவுரிமைகளை மதிப்பதில்லை, ஜனநாயகத்தைப் பேணுவதில்லை, அங்கு நல்லாட்சி நடைபெறவில்லை என்பவற்றைக் காரணங்காட்டி தமது நாட்டினை இந்நாடுகள் ஆக்கிரமிக்க முனைகின்றன. நாட்டை பிரிக்க முனைகின்றன என எதுவித ஆதாரமுமற்ற குற்றச்சாட்டுகளை சிறிலங்கா அரச தலைவர்களும், அவர்களது ஆதரவாளர்களும் முன்வைக்கும் போது அவற்றை கேள்வியின்றி ஏற்றுக் கொள்ளும் நிலையில் சிங்கள அடித்தட்டு, மற்றும் மத்திய தர வர்க்க மக்கள் இருக்கிறார்கள். கொழும்பு மேட்டுக்குடி மக்களிடம் இவ்விடயத்தில் தெளிவிருப்பினும், ஏனையவர்களுடன் முரண்பட்டு தம்மை தேசாபிமானம் குறைந்தவர்களாகக் காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

பெரிதாகச் சிந்திக்காவிடினும், இராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இன்னமும் அமெரிக்க குடியுரிமையை தக்க வைத்துக்கொண்டு எவ்வாறு அமெரிக்க எதிர்ப்புச் செய்கிறார்கள் என சிங்கள வாக்காளர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மகிந்த அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் 'இடதுசாரிக்' கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு, மகிந்த அரசாங்கம் கடைப்பிடிக்கும் திறந்த பொருளாதார முதலாளித்துவ அணுகுமுறைகள் பற்றி எதுவித கரிசனையுமில்லை. மாறாக, மிகைப்படுத்திய வெளித்தரப்பு அழுத்தங்கள் பற்றிய பரப்புரைகளுக்கு இவர்கள் துணை போகிறார்கள்.

உள்நாட்டில் மேற்கு நாடுகளுக்கு எதிர்ப்பைக் காட்டி, தேசப்பற்றாளர்களாக தங்களைக் காண்பித்து வரும் சிறிலங்கா அரசாங்கம் மறுபுறத்தில், வெளிநாட்டு வர்த்தக முதலீட்டாளர்களுக்கு செங்கம்பளம் விரித்து அழைப்பு விடுத்து வருகிறது. சிறிலங்காவின் மனிதவுரிமை மீறல்கள், போர் குற்றங்கள் போன்றவை இன்று முழு உலகுக்கும் அம்பலமான நிலையில் அங்கு நல்லாட்சி நடைபெறுவதாக யாரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதனால் வர்த்தக முதலீடுகளுக்கான வாய்ப்புகளைக் காட்டி தனது தோற்றத்தை உயர்த்திக்காட்டலாம் என சிறிலங்கா அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தனது தமது பரப்புரைகளுக்கு உதவ, இரண்டு அமெரிக்க தொடர்பாடல் நிறுவனங்களின் சேவையினை பெற்றுக்கொண்டுள்ளது. இவற்றுள் ஒன்றான Thompson Advisory Group நிறுவனத்திற்கு மாதாந்தம் 66.600 அமெரிக்க டொலர்கள் (8,337,600 ரூபாக்கள்) இலங்கை மத்திய வங்கி செலுத்தி வருவதாகத் தெரிய வருகிறது. மற்றய நிறுவனமான Majority Group அமெரிக்க அரசியல் தலைவர்களை lobby செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது.

> **மேற்கு நாடுகள் மீது கண்டனம் தெரிவிப்பதும், அவர்கள் தமது நாட்டின் ஆட்புல இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டுவதும், 'நீங்கள் உதவாவிட்டால் நாங்கள் சீனாவிடம் போவோம்' என சிறிலங்கா அரசியல் தலைவர்கள் சவால் விடுவதும், புதிதான ஒரு விடயமில்லை.**

Thompson Advisory Group நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமது பரப்புரை முயற்சிகளுக்காக சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சிறிலங்கா மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவார்ட் கப்ரால் ஆகியோர் கடந்த மாதம் அமெரிக்காவுக்கு சென்றிருந்தனர். Washington DC இல் அமெரிக்க மத்திய அரசின் நிர்வாகச் செயலகங்கள் அமைந்திருக்கும் Capital Hill பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மேற்படி இருவரும் கலந்து கொண்டு சிறிலங்காவில் காணப்படும் வர்த்தக முதலீட்டு வாய்ப்புகள் பற்றி உரையாற்றியிருந்தனர். மேற்படி கூட்டத்திற்கான அழைப்பிதழில் சர்வதேச கடற்போக்குவரத்தில் சிறிலங்காவின் கேந்திர நிலையை விளக்கும் வரைபடம் ஒன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சிறிலங்கா 'பயங்கரவாதப்' பிரச்சனைகளிலிருந்து மீண்டு அபிவிருத்தி பாதையில் முன்னேறிச் செல்வதாகவும். அங்கு சுற்றுலாத்துறை, மருத்துவம், கல்வி உட்பட பலதுறைகளிலும் தனியார் முதலிட்டு இலாபம் ஈட்டிக்கொள்ளலாம் என்று சிறிலங்கா அரசாங்கத்திற்கு வெள்ளையடிக்கும் பரப்புரைக்காக 28 நிமிட காணொளியினை Thompson Advisory Group உருவாக்கியிருக்கிறது. பெப்பிரவரி 2ம் திகதி அமெரிக்க NBC தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட இந்த விளம்பர விவரணத்திற்கு CNN தொலைக்காட்சியில் பணியாற்றிய Gene Randall குரல் வழங்கியிருக்கிறார். முன்னணி தொலைக்காட்சியில் விளம்பரமாக ஒளிபரப்பப்பட்டிருக்கிறது. என்பதிலிருந்து இத்தகைய பரப்புரைகளுக்கு பெருந்தொகை பணம் செலவழிக்கப்படுவது தெரிகிறது.

> **உள்நாட்டில் மேற்கு நாடுகளுக்கு எதிர்ப்பைக்காட்டி, தேசப்பற்றாளர்களாக தங்களைக் காண்பித்து வரும் சிறிலங்கா அரசாங்கம் மறுபுறத்தில், வெளிநாட்டு வர்த்தக முதலீட்டாளர்களுக்கு செங்கம்பளம் விரித்து அழைப்பு விடுத்து வருகிறது.**

மனிதவுரிமை, ஜனநாயகம், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பவற்றை வலியுறுத்தி வரும் மேற்குலகத்துடன், அவர்களது மூலோபாய நலனுக்கு இடமளித்து அவற்றுடன் ஒத்துழைத்து பொறுப்புக் கூறலிலிருந்து தப்பிக் கொள்ளும் முயற்சியிலேயே சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. ஆனால் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தும் விடயத்தில் இன்னமும் குறியாக இருக்கும் மேற்குலகம் மனிதவுரிமை விடயத்தை கைவிடப் போவதில்லை. இதுவே மேற்குலகத்திற்கு சிறிலங்காவிற்கும் இடையிலான இழுபறியாக அமைந்துள்ளது. இந்த முரண்பாடு தீர்க்கப்படுமாயின் தமிழர் பிரச்சனை உடப்பில் போடப்பட்டுவிடும் அபாயம் உள்ளதனை தமிழ் மக்கள் விளங்கிக் கொள்வார்கள் என எதிர்பார்ப்போமாக.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper


## ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ....... 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods.............. 020 8684 6269
Haran Bros............... 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432
Best Food ............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas...................... 020 8805 9529
Nagapoosani Temple 020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434

Most Trusted and Reliable Name in the Trade Since 1985



# GlenCarriers
Laksiri Seva

**Services We Offer;**

- இலங்கை மற்றும் உலகின் எப்பாகத்திற்கும் கடல் மற்றும் விமான மார்க்கமாக குறைந்த விலையில் பொதிகள் அனுப்பும் சேவை
- தனிப்பட்ட மற்றும் வர்த்தக சேவைகளும் உண்டு
- பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வீட்டுக்கு வீடு சேவை
- உங்கள் பொருட்களை நம்பிக்கையுடன் பாதுகாப்பாக உரிய நேரத்தில் அனுப்பி வைக்கவும் மேலும் 36 க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக நடாத்திச் செல்லப்படும் ஒரே ஒரு நிறுவனம் கிளென் கரியர்ஸ்

- Sea Freight and Air Freight
- Full Container (20ft and 40 ft)
- Pick-up and Delivery Services in UK and EU
- House Removals with FREE Survey

இலங்கையில் பொதிகளைப் பெற்றுக் கொள்ளுமிடங்கள்

Laksri Seva Customs Bonded Warehouses

Collection from £ 10 within London *

Collection from your door point in any part of UK or Europe*

2 x Tea Carton for **£ 19.50** *

* Conditions Apply

**Colombo Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
66, New Nuge Road,
Peliyagoda, Colombo
+94 1129 177 29-31

**Eastern Province Warehouse**
Laksiri Seva Pvt Ltd.
26, Hmyl Lane, Main Street,
Addappallam, Ninthavur.
T: 0672 0510 50-51

**அழையுங்கள் : 020 8743 7353**

Mon - Sat : 9:30am to 5:30pm
Sun: 10:30am to 2:00pm

Web : www.glencarriers.com email : info@glencarriers.com || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

# Basil leaf Pizzeria & Grill!


*Specialist in Halal Italian Foods*


Basil Leaf





70 க்கும் மேற்பட்ட இருக்கைகளைக் கொண்ட விசாலமான உணவகம்
( Pooja Sweetsற்கு அருகாமையில்)






*Wide variety of Pizzeria & Grill foods from 15 years experienced chef.*

**நாவிற்குச் சுவையான Spicy Pizza & Grill Foods வகைகளும் கிடைக்கும்**

164 Upper Tooting Road, London, SW17 7ER
*[ Next to Pooja Sweets ]*
Tel : **02086724193 / 0208767 9958**

**Book your Party here!**

A perfect Place to Celebrate Your kid's birth-day Party & office parties With GREAT value

**15% Discount**

**Dining**
**Takeaway**
**Delivery**

*It is not valid for any other deals or Offers*

E&OE

Valid till : 31 March 2014

Mail : info@basilleafpizza.com | Web : www.basilleafpizza.com

BAR வசதியும் உள்ளது

# வல்லரசின் சுருக்குக் கயிற்றிலிருந்து தப்பிப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபடும் அரசு



**செல்வரத்தினம் சிறிதரன்**

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்திற்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், மூன்றாவது தடவையாக அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரவுள்ள பிரேரணை பற்றியே அரசியல் வட்டாரங்களின் பேச்சாக இருக்கின்றது. இந்தப் பிரேரணை எப்படி அமைந்திருக்கும் என்பது பற்றி, பலரும் பலவிதமான வழிகளில் தமது விமர்சனங்களையும், விவாதங்களையும் கண்டுபிடிப்புக்களையும் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இந்தப் பிரேரணையானது தனிப்பட்ட அமெரிக்காவின் விடயமாக அல்லாமல், பல்வேறு நாடுகள், அமைப்புக்களின் பங்களிப்பையும், நிலைப்பாடுகளையும் கருத்திற்கொள்ள வேண்டிய ஒரு விவகாரமாகவே காணப்படுகின்றது. இலங்கையின் மனித உரிமை விடயத்தை, அதுமையப் பொருளாகக் கொண்டிருந்தாலும்கூட, அதன் பின்னணியில் பல்வேறு விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனால், இலங்கைக்கு எதிரான அல்லது தொடர் நிகழ்வையொட்டிய ஒரு சாதாரண பிரேரணை என்ற வரையறைக்குள் இதனை உள்ளடக்கி, அத்துடன் நின்றுவிட முடியாது. இன்றைய சர்வதேச மற்றும், ஆசிய பிராந்திய அரசியல், இராணுவ, பொருளாதார நிலைமைகளில் இது ஒரு ட்ரிக்கி கேம் ஆகவே அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

வெட்டொன்று துண்டு இரண்டு என்று சொல்லக்கூடிய வகையில் இந்தப் பிரேரணை அமையப்போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் தாராளமாகவே காணப்படுகின்றன. உள்ளக விசாரணையொன்றை நடத்தி இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற வகைதொகையற்ற கொலைகள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்று மீண்டும் இந்தப் பிரேரணையில் வலியுறுத்தப்படுமா அல்லது சர்வதேச விசாரணைதான் நடத்தப்பட வேண்டும் என்று அடித்துக் கூறப்படுமா அல்லது நேரடியாகவே இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் விசாரணைக்காக முன்னெடுத்துச் செல்லப்படுமா என்பது பற்றிய ஒரு தெளிவான நிலைமையைக் காண முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது. சுற்றி வளைக்கும் மாயாஜால சொற்களை உள்ளடக்கிய ஒரு சர்வதேச அழுத்தமாக இந்தப் பிரேரணை அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### ◆ அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலரின் விஜயம்

மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், மனித உரிமை மீறலுக்குப் பொறுப்பு கூறுவதில் அரசு முன்னேற்றத்தைக் காட்ட வில்லை என்பதை ஆழமாகச் சுட்டிக் காட்டியிருந்தார். அத்துடன் சிறுபான்மை இன மக்கள் மத ரீதியாக தாக்கப்படுவதையும், குற்றங்களில் இருந்து தப்பிக்கொள்கின்ற தன்மை, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பது போன்ற விடயங்கள் குறித்தும், ஒட்டுமொத்தமாக நல்லிணக்க முயற்சிகள் வெற்றியளிக்கத் தக்க வகையில் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் அக்கறையுடன் எடுத்துக்காட்டியிருந்தார்.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றபாரதூரமானமனிதஉரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும். யுத்தம் காரணமாக அரசியல் ரீதியாக துருவமயமாகியுள்ள இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்காக உள்ளூர் விசாரணைகளை வலியுறுத்தியுள்ள கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்ற கவலையையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பற்றிப் பேசிய அவர் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் அல்லது அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் பற்றி குறிப்பிடவில்லை.

இலங்கை விஜயத்தின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்கத் தீர்மானம் உள்ளக விசாரணைக்கு வலியுறுத்துமா அல்லது சர்வதேச விசாரணையொன்றைக் கோருமா என்ற கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்றும் கூறிவிட்டார். ஆயினும், இலங்கையின் உள்ளகவிசாரணையைக்கொண்டதாகஅமெரிக்காவின் பிரேரணை அமையலாம் என்ற ஊகத்தை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

இருப்பினும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் மூன்றாவது தடவையாகக் கொண்டு வரப்படவுள்ள அமெரிக்காவின் பிரேரணையானது, பொதுவான நிலைமையில் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த நெருக்கடியின் மூலம் ஏதோ ஒரு வகையில் அமெரிக்கா தன்னை ஒரு சிக்கலான நிலையில் கொண்டு சென்று நிறுத்த போகின்றது என்ற அச்சத்தை இலங்கை அரசு கொண்டிருக்கின்றது.

இதற்காக இரண்டு நோக்கங்களை முன்னிறுத்தி அது செயற்பட்டு வருகின்றது. முடியுமானால், அமெரிக்காவின் பிரேரணையை பிரவேசிக்கவிடாமல் தடுப்பது அல்லது மூன்றாவது தடவையாகவும் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டுவந்துவிட்டோம் என்று மாத்திரம் அமெரிக்கா திருப்தியடையத் தக்க வகையில் அந்தப் பிரேரணையின் வீரியத்தை எப்படியாவது குறைத்துவிடுவது என்ற வகையில் இலங்கை அரசாங்கம் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருகின்றது.

### ◆ அரசாங்கத்தின் முன்னெடுப்புக்கள்

அமெரிக்காவின் நெருக்குதல்களில் இருந்து தப்புவதற்காக அந்த வல்லரசுக்கு நெருக்கமான நாடுகள், இராஜதந்திரிகளைத் தொடர்பு கொண்டு மார்ச மாதப் பிரேரணை மீது செல்வாக்குச் செலுத்தி, அதன் வீரியத்தைக் குறைக்குமாறு ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரையில் பலரும் கோரி வருகின்றார்கள். மறுபக்கத்தில் சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டு, அமெரிக்காவின் மார்ச் மாத பிரேரணை குறித்து மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கை இராணுவத்தை இலக்கு வைத்து போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படுமேயானால், நாட்டில் ஒரு குழப்பகரமான நிலைமை ஏற்படும் என்று அவர் எச்சரிக்கை செய்திருக்கின்றார். அடுத்ததாக, நாட்டில் நல்லிணக்க நிலைமைகளை வேரூன்றச்செய்வதற்காக 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் ஐந்து வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்.

மூன்றாவதாக, இனப்பிரச்சினைக்கான முரண்பாடுகள் என்பது நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. இதில் இறுதிப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களை மட்டும் விசாரணை செய்து அதற்கான பொறுப்பைக் கூறுவதனால் பயனேதும் ஏற்படப்போவதில்லை. மாறாக இனங்களுக்கிடையிலான கசப்புணர்வு வைராக்கியமுள்ள மோசமான பகைமையை உருவாகுவதற்கே உந்துசக்தியாக அமையும். எனவே, 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட பலதரப்பினரிடமிருந்தும் பொறுப்புக் கூறுதலைப் பெற முடியும் என்று அவர் வலியுறுத்தியிருக்கின்றார். லலித் வீரதுங்க முன் வைத்துள்ள இந்த விடயங்களை முழுமையாக அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அவர் கூறியுள்ள விடயங்களில் பொதிந்துள்ள கருத்துச் செறிவினை நிச்சயம் அமெரிக்கா கவனத்திற் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.


ஏனெனில் மோசமான ஒரு யுத்தத்தின் போது இரு தரப்பிலும் இழப்புக்கள் நேர்ந்திருக்கின்றன. அதேநேரம், யுத்த வெற்றிப் பெருமிதம் கொண்ட ஓர் அணியாக இராணுவத்தினரும், அதே உணர்வுடைய ஓர் இனமாகப் பெரும்பான்மை இன மக்களும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் கடந்த நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் உருவேற்றி வைக்கப்பட் டிருக்கின்றார்கள். இந்த உருவேற்றத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் வெளிச்சக்திகளின் விசாரணைகள் மற்றும் குற்றம் சுமத்தும் நடவடிக்கைகள் மனித உரிமை மீறல்கள் என்ற பெயரில் வரும்போது, இதற்குக் காரணமானவர்கள் என சிறுபான்மையின மக்கள் குறி வைக்கக் கூடிய ஒரு நிலைமை நாட்டில் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கின்றது.

பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் பயங்கரவாதிகள் என்று நாளும் பொழுதும் ஊடகங்களிலும் மேடைகளிலும், விடுதலைப்புலிகள் ஏற்கனவே காட்டப்பட்டிருக்கின்றார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர், பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுதலைப் பெற்றுக் கொடுத்தவர்களாகவும், சிங்களவர்களைப் பாரிய யுத்த அழிவிலிருந்து, உயிர்த்தியாகங்கள் உள்ளிட்ட பல்வேறு தியாகங்களைச் செய்து இரட்சித்துக் காத்துள்ள இரட்சகர்களாகவே இராணுவத்தினர் சித்திரிக்கப்பட்டு வந்துள்ளார்கள்.

இத்தகைய ஒரு நிலையில் இராணுவத்தினருக்கு எதிராக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை, பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாத்ததற்காக, இராணுவத்தினர் மீது அபாண்டமாக, திட்டமிட்ட வகையில் அரசியல் உள் நோக்கத்திற்காக விசாரணைகள் நடத்தி குற்றவாளிகளாக்கப் பார்க்கின்றார்கள் என்ற மாயையும் அரசாங்கம் உருவாக்கியிருக்கின்றது. இந்த நிலையில் சர்வதேச விசாரணையொன்று வடபகுதி மக்கள் மத்தியில் மிகவும் மென்மையான தோர் தூண்டுதலின் மூலம், சிங்கள மக்களை இலகுவில் உசுப்பிவிட முடியும் என்பதையும், அதன் பின்னர் வருகின்ற நிலைமையை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதையும் மறைமுகமாக அரசாங்கம் அமெரிக்காவுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

சர்வதேச நெருக்குதல்களில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கான கவசமாக சிங்கள மக்களின் ஆதரவைப் பெருக்குகின்ற அதேநேரத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு எதிரான உணர்வுகளை அந்த மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற அரசியல் தந்திரத்தைப் பிரயோகிப்பதற்கான ஆரம்ப காய் நகர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இத்தகைய ஒரு பின்னணியில் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்பார்ப்புக்களை ஓரளவு கேனும் ஈடு செய்யத்தக்க வகையில் அமெரிக்காவின் மூன்றாவது பிரேரணை அமைந்திருக்குமா என்பது சந்தேகமே.

நன்றி : இது நம்தேசம்



# நான் அனுப்புவது கடிதம் அல்ல !





**சுகி**

*(ஒரு பேப்பருக்காக)*

உன் கடிதம் கிடைத்தது. உயிர் என்றால் ஆன்மா, உயிரெழுத்து, காற்று, சீவன் எனப்பல பொருள் உண்டு. என்னை உன் ஆத்மார்தமான தோழி என அழைத்திருந்தாய் நன்றி. அப்பன் இல்லாவிட்டால் தான் அப்பனின் அருமை தெரியும் என்பது போல. நீ இல்லாதவிடத்து உன் அருமை நன்றாகவே தெரிகிறது.

அது சரி உன்னை ஒன்று கேட்கவேணும் உனக்கு வரும் கடிதங்களை உன்னுடைய மனிசனும் வாசிப்பாரோ?.. நீ வாய்கிழிய கத்திய பெண் சுகந்திரத்தை கல்யாணத்தோடு தொலைத்து விட்டாயோ? குடும்பத்துக்குள் குழப்பம் கொண்டர வேண்டுமென்றில்லை சும்மா அறிந்து வைத்திருந்தால், ஒளிவுமறைவு இல்லாமல் எழுதலாம் பார் அதுதான்.

உன்னை ஏன் குழப்புவான் என்றுதான் நாங்கள் இடம்பெயர்ந்த கதையை உனக்கு எழுதவில்லை. அங்கை போட்டாலும் தம்பிராசா அண்ணை தபாலை இஞ்சை கொண்டு வந்து தருவார்தானே. இவ்வளவு நாளும் ஆமிகாரங்களுக்கு கிட்ட இருந்தது, மடியில நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்த மாதிரி இந்த இடம் இல்லை, முன்பு பேச்சு வார்த்தைக்குள்ள தங்கச்சி என்று போகேக்கில வரேக்கில கூப்பிட்டுவிட்டு இஞ்சி தின்ற குரங்கு மாதிரி இளிக்குங்கள்..பொம்பிளை பிள்ளைகள் சைக்கிளை ஊன்டி தள்ளிக் கொண்டு தலைவிதியை நொந்து கொண்டு போய்விடுங்கள். இப்ப என்னென்றால் பழையபடி பொம்பிளைகள் மேல் கை வைக்கபாக்குதுகள்.

உனக்கென்றபடியால் சொல்கிறன் நாங்கள் இடம்பெயர்ந்த விசயத்தை, அண்டைக்கு நல்ல மழை. இவள் என்ட கடைசி தங்கச்சி நல்லதம்பி மாஸ்ரரின்ட வகுப்புக்கு போயிட்டு வரேக்கில இவளோடு வாற பிள்ளைகளும் அன்டைகென்று பாத்துவரேல.உவங்கள் அவளை மறிச்சு உதென்ன என்று கேட்டு அவளின் நெஞ்சை பிடிச்சு கிள்ளியிருக்கிறான்கள். அவள் பேயடிச்ச மாதிரி வந்து நான் உலுப்ப ஓவென்று ஒரே அழுகை. வயசுக்கு வர இருக்கிற பிள்ளைக்கே இந்த நிலமை என்றால்.. மிச்ச குமர்பிள்ளைகளின் நிலை.

ஊருக்குள்ள ஒருதருக்கும் மூச்சுவிடக் கூடாதென்று அப்பாவின் ஓடர். சுடுகுது மடியைப்பிடி என்று அண்டைக்கே சாமான் சக்கட்டுகளோடு தேவி அக்கா வீட்டில இரண்டு நாள் தங்கி அப்பா முழு மூச்சாக கொட்டில் போட்டு மூன்றாம் நாள் இடம் பெயர்ந்து விட்டோம்.

எனக்கொன்றும் இரகசியமாக வைத்திருக்க விருப்பம் இல்லை. எங்களுக்கு நடக்கும் ஒவ்வொரு அநியாயங்களையும் வெளிக்கொணர வேண்டும். பெரிதாக பறையடித்து இங்கு மட்டும் அல்ல, தமிழன் வாழும் ஒவ்வொரு நாட்டிலும் அதற்காக குரல் எழுப்பி நியாயம் கேட்க வேண்டும். மறைந்து ஒளித்து வாழும் வாழ்வு வேண்டாம், தங்கச்சியை கெடுத்திருந்தால், அப்பா தூக்கில் தொக்கியிருப்பார், பாவம் கடன் தொல்லை போல என்று ஊர் சொல்லியிருக்கும்.

வெளிநாடுகளின் உள்ள எம்மவர்களால் நடாத்தப்படும் தமிழ் இணையத்தளங்கள், தமிழரை அதிரவைக்கும் விதத்தில், இப்படியான உள்ளூர் செய்திளை உடனுக்குடன் கிசு கிசு செய்தி போல கிளு கிளுப்பாகத் தராது, சமூகப்பொறுப்போடு செய்தியை ஆராய்ந்து பிரசுரித்து அது ஆங்கில பத்திரிகைகள் மனிதஉரிமை நிறுவனங்களை அடையும் வண்ணம் விளக்கமாக, சரியாக தரவுகளோடு எழுதவேண்டும். ஒரு மட்டத்தில் எல்லோராலும் பேசப்படும் விடையமாக வந்தால், அடுத்த தடவை செய்யும் போது ஒரு தடவைக்கு இரு தடவை யோசித்து செய்வார்கள், அது கோயிலை இடிப்பதாக இருந்தாலும் சரி, பலவந்தமாக கையைப் பிடித்திழுப்பதாக இருந்தாலும் சரி.

ஒரு தமிழனுக்கு ஆறு இராணுவம் என்ற ரீதியில் தமிழர் பகுதியில் போர் முடிந்த பின்னும் இராணுவம் நிலை கொண்டுள்ளது. அவங்களும் செய்ய வேலை இல்லாமல், என்ன செய்வது என்று பாயை பிராண்டிக் கொண்டு யோசித்து ஏதோ ஒன்றை செய்து கொண்டிருக்கிறான்கள். நீ பொருளியல் படித்தனி, யோசித்து பார், 400,000 ஆயிரம் சிங்களப் படைகள் தமிழ் பகுதிகளில் நிலை கொண்டுள்ளன, போர் முடிந்து விட்டது என்று இவ்வளவு சிங்கள இளைஞர்களையும் வேலை யில்லை என்று வீட்டுக்கு ஒரு சிறிய தொகையை கொடுத்து அனுப்பினால் என்ன நடக்கும், இப்ப சம்பளமும் சுளையாக எடுத்துக் கொண்டு, தமிழரிடம் இம்பளமும், பகல் கொள்ளையும் அடிக்கும் இவர்களுக்கு இனி உழைச்சு சாப்பிட உடம்பு வளையுமா? இவர்களை இவர்களின் கிராமத்துக்கு அனுப்பினால் இன்னொரு JVP தோற்றம் பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, அதனால் அரசும் இவர்களை குடும்பமாகவே தமிழர் பகுதிளை சுரண்டி அதில் குடியமர்ந்த முனைகிறது.

ஆச்சியும், அப்புவும் சுகம். அண்ணணைப் பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். உன்னைப் பற்றி சொல்லு. எப்பிடி பொழுது போகிறது. என்ன புத்தகம் வாசித்தாய்? இப்பவும் சட்டைதானா போடுகிறாய்? ஜீன்ஸ் ஒன்று கொண்டு போனால் நல்லாயிருக்கும் என்று உன்ட மாமியார் சொன்னதை கேட்டு நீயும் நானும் கடை கடையாகத் திரிந்து கடைசியாக ஒன்றை வேண்டிக்கொண்டு வந்ததும், பிறகு உன்ட மனிசன் அதைப்பார்த்து விட்டு இதென்ன தலையணைக்கு உறை போட்ட மாதிரி? குவினின் மதரும் நெடுக சட்டைதான் போட்டவ, நீர் சட்டையே போடும், காணும் என்று மறித்ததும், எனக்கு இப்ப நினைத்தாலும் சிரிப்பு.

**ஒரு தமிழனுக்கு ஆறு இராணுவம் என்ற ரீதியில் தமிழர் பகுதியில் போர் முடிந்த பின்னும் இராணுவம் நிலை கொண்டுள்ளது. அவங்களும் செய்ய வேலை இல்லாமல், என்ன செய்வது என்று பாயை பிராண்டிக் கொண்டு யோசித்து ஏதோ ஒன்றை செய்து கொண்டிருக்கிறான்கள்.**

இப்ப இரவில கொட்டில் குளிர். சில வேளைகளில் நீர் விட்டுப்போன அந்த ஜீன்ஸ்சைத்தான் சாரத்துக்குள்ள கால் குளிராமல் போட்டுக் கொண்டு படுக்கிறனான். இருட்டிக்கொண்டு வருகுது மழை பெய்யப்போகுது போல, வெளியில இருக்கிற விறகு, சுள்ளிகளை எடுத்து உள்ள அடுக்க வேணும். உன் கடிதத்தை ஆவலுடன் எதிர்பார்த்து முடிக்கின்றேன்.







# தமிழ்த்தேசிய கூட்டமைப்பிடமிருந்து தமிழ் மக்களை காப்பாற்றுவது யார் ?



**முத்துக்குமார்**

*பொங்குதமிழ் இணையதளத்தில் வெளியான இக்கட்டுரையை இடமின்மை கருதி சுருக்கமாக வெளியிடுகிறோம்.*

*- நன்றி பொங்குதமிழ்.*

அமெரிக்க பிரதிநிதி ராப்பின் யாழ் விஜயம் ஜனவரி மாத ஆரம்பத்தில் இடம்பெற்றது. ஒரு வருட காலமாக தங்களுடைய அழுத்தங்கள் பெரியளவு வெற்றியளிக்காததினால் இந்தத் தடவைசற்று அதிக அழுத்தத்திற்கான தோற்றத்தினை அமெரிக்கா கொடுக்கப் பார்க்கிறது. பிரித்தானிய பிரதமர் டேவிற் கமரூன் ஏற்கனவே பொதுநலவாய மாநாட்டினை பயன்படுத்தி இதனை தொடங்கி வைத்தார். அந்த அஞ்சலோட்டத்தின் தடி தற்போது அமெரிக்காவிடம் கொடுத்தாயிற்று. மார்ச் மாதம் ஜெனிவா நிகழ்வு முடியும் வரை அமெரிக்கா இதனை கொண்டோடும். இந்த சக்திகள் சிறிலங்கா அரசின் கழுத்தை முறிக்குமா, காதைத் திருகுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். போகிற போக்கினை பார்த்தால் இந்தத் தடவையும் காது திருகை மட்டும் தான் நடைபெறும் போல தெரிகின்றது. காதுதிருகலோடு மட்டும் விவகாரத்தை முடித்துவிடுவதற்கு இந்தியா இப்போதே செயற்படத் தொடங்கிவிட்டது.

சர்வதேச அழுத்தங்கள் எல்லாம் இந்தியாவை தாண்டி வரும்போது வீரியம் குறைகின்றது என்பது வழக்கமானதே. தமிழ்நாடு சற்று விழிப்பாக இருப்பதனால் இந்தியாவிற்கு பல சங்கடங்கள் ஏற்படலாம். இதற்குக்கூட இந்தியாவிற்கு கைகொடுப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், குறிப்பாக விக்னேஸ்வரன் எப்போதும் தயாராக இருக்கின்றார்.

தமிழர் விவகாரத்தை தமிழர்கள் சம்பந்தம் இல்லாமல் சர்வதேச சக்திகளும் பிராந்திய சக்தியும் தங்கள் நலன்களுக்காக பயன்படுத்துகின்றனர். தமிழர்களுக்கு இந்த சக்திகளின் வாயைப் பார்த்துக்கொண்டு மட்டும் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அவை மெல்லுகின்ற தீனியில் சிறிதாவது வழிந்து விழும் என்ற நப்பாசை தான் தமிழர்களுக்கு.

இந்தியாவின் அனுசரணையில் ஜெனிவாவில் அரசு கால அவகாசம் கேட்கப் போவதாக முன்மொழிந்திருக்கின்றார். ஆட்சி மாற்றம் கிட்டிய தூரத்தில் இல்லை என்பதால் சீன அகற்றுகையை நோக்கித்தான் சர்வதேச சக்திகளும் பிராந்திய சக்தியும் அதிகம் செயற்படக் கூடிய வாய்ப்பு உண்டு. காது திருகுதல் நிகழ்வு பொருளாதார தடை மட்டத்திற்காவது உயருமா என்பது சந்தேகமே.

## ◆ அனந்தி எழிலனுக்கு ‘புனர்வாழ்வு’

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி எழிலனுக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டும் என பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி சிங்கள தினசரியான மௌபிமாவில் தலைப்புச் செய்தி வெளிவந்துள்ளது. அரசாங்கத்திற்கு மட்டுமல்ல தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, இந்தியா, சர்வதேசம் என்பவற்றிற்கும் அனந்தியின் செயற்பாடுகள் ஒரு தலையிடிதான். காணாமல் போனவர்களின் விவகாரத்தை நேரடிசாட்சியாக சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதோடு சுயநிர்ணய உரிமைக்காக உறுதியாக குரல் கொடுப்பதுதான் இந்த சக்திகளுக்கு பிரச்சனை.

தமிழ்த் தேசிய ஆதரவு வாக்குகளை கவர வேண்டும் என்பதற்காகத்தான், அனந்தி மாகாண சபை தேர்தலில் களம் இறக்கப்பட்டார். அவருக்கு இவ்வளவு அதிகப்படியான வாக்குகள் கிடைக்கும் என்று சம்பந்தன் தலைமையோ, இந்தியாவோ, சர்வதேச சக்திகளோ, சிறிலங்கா அரசாங்கமோ எதிர்பார்க்கவில்லை. தேர்தல் நெருங்க நெருங்க அதிக வாக்குகளுக்கான சாத்தியம் இருந்ததினால் அச்சுறுத்தல்கள் போலி பிரச்சாரங்கள் எல்லாம் இடம்பெற்றன. ஒரு கட்டத்தில் விக்னேஸ்வரனை விட அதிக வாக்குகள் எடுக்கக் கூடும் என்ற அச்சமும் கூட்டமைப்பு உட்பட இந்தியாவிற்கும் ஏற்பட்டது. வாக்கு எண்ணிக்கையின்போது தில்லுமுல்லுகள் இடம்பெற்றன என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகளும் வெளிவந்தன.

தேர்தல் முடிந்த பின்னர், அனந்தி புத்திசாலித்தனமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்குள் நின்று செயற்படாமல் தனக்கென சொந்த நிகழ்ச்சி நிரலை உருவாக்கிக் கொண்டார். காணாமல் போனோர் பற்றிய விவகாரமே அவரின் நிகழ்ச்சி நிரலின் மையமாக இருந்தது. கணவனைப் பறிகொடுத்தவர் என்ற வகையில் அவரது செயற்பாட்டிற்கு ஒரு சர்வதேச அங்கிகாரமே உருவானது.

அரசியல் விவகாரத்தைப் பொறுத்தவரை தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படை கோட்பாடுகளில் அனந்தி மிக உறுதியாக இருந்தார். சர்வதேச சந்திப்புக்களில் இவற்றை தெரிவிப்பதில் அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. எந்த சந்தர்ப்பத்திலும் தனது கணவர் எழிலனின் பெயர் தன்னால் மாசுபடக்கூடாது என்பதில் அவர் மிகவும் கவனமாக இருந்தார்.

அனந்தியின் இந்த தனித்த நிகழ்ச்சி நிரல் தான் சம்பந்தன் தலைமை உட்பட அனைவருக்கும் தலையிடியாக இருந்தது. இதன் முதல் வெளிப்பாடு டேவிற் கமரூனின் யாழ் வருகையின் போது தெரிந்தது. கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு சவாலாக காணாமல் போனோருக்கான போராட்டத்தை ஒழுங்கு செய்தார். வெறும் 300 பேருடன் நடாத்தப்பட்ட போராட்டம், 1000 இற்கும் மேற்பட்ட மக்களைக் கொண்டு நடாத்தப்பட்ட மாவிட்டபுர போராட்டத்தைவிட சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாகியது.

சம்பந்தன் தலைமையின் பொய்த் தோற்றத்தையும் தோலுரித்துக் காட்டியது. தொடர்ந்து சர்வதேச சந்திப்புக்கள், சர்வதேச தீர்ப்பாயம் வரை அவரது செயற்பாடுகள் வளர்ந்தன.

அனந்தியினால் வருகின்ற இந்தத் தலையிடிகளை நிறுத்தவேண்டுமாயின் அவரின் தனித்த நிகழ்ச்சி நிரலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதற்கான முயற்சி தான் புனர்வாழ்வுக்கு அனுப்பப் போவதான செய்தி. அரசு மட்டுமல்ல, கூட்டமைப்பு, இந்தியா, சர்வதேசம் ஆகிய சக்திகளும் இந்த அறிவிப்பினால் மகிழ்ச்சி அடைந்திருப்பர்.

ஜெனிவா கூட்டத் தொடர் நடக்க இருப்பதால் மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் விழிப்புடன் இருக்கும். இந்நிலையில் அனந்தியை புனர் வாழ்விற்கு அனுப்புவது நடைமுறையில் இயலாத காரியம் என்பது அரசாங்கத்திற்கு தெரியாததல்ல. இங்கு அரசாங்கத்தின் நோக்கம் புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்புவது அல்ல, மாறாக அனந்தியின் நிகழ்ச்சி நிரலை கைவிடச் செய்வதே.

தமிழ்த்தேசிய அரசியலுக்கான நிகழ்ச்சி நிரலை தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்குள் முன்னெடுப்பது இன்று பலத்த விவாதப்பொருளாகியுள்ளது. கஜேந்திரகுமார் கூட்டமைப்பிலிருந்து விலகியபோது அவர்மீது பலத்த விமர்சனம் முன்வைக்கப்பட்டது. கஜேந்திரகுமார் முன்னெடுக்க விரும்புகின்ற தமிழ்த் தேசிய அரசியல் செயற்பாடுகளை கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு முன்னெடுக்கலாம் என்பது விமர்சனம் வைத்தவர்களின் கருத்தாக இருந்தது. இதற்கு கஜேந்திரகுமாரின் பதில் அது நடைமுறை சாத்தியமற்றது என்பதே.

அனந்தி இந்தப் பரீட்சையில் இறங்கியபோது ஆய்வாளர்கள் இதனை ஒரு பரிசோதனை களமாக கருதினர். அனந்தி இதில் வெற்றி பெற்றிருந்தால் கூட்டமைப்புக்குள் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கலாம் என்பது உண்மையாகியிருக்கும். தற்போதுள்ள கேள்வி, அனந்தி என்ன செய்யப்போகின்றார். தனது நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து முன்னெடுக்கப் போகின்றாரா? அல்லது கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்குள் கரைந்துவிடப் போகின்றாரா? காலம்தான் இதற்கு பதில் சொல்லவேண்டும்.

## ◆ மகிந்தவுடன் விக்னேஸ்வரன்

தெல்லிப்பளை வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவினை ஜனாதிபதி திறந்து வைத்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும், வடமாகாண அமைச்சர்களும், சில வடமாகாணசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஜெனிவாவில் இலங்கை மீது கடுமையான தீர்மானம் கொண்டு வரப்படலாம் எனக் கருதப்படுகின்ற ஒரு காலப்பகுதியிலேயே இக் கலந்துகொள்ளும் நிகழ்வு இடம் பெற்றிருக்கின்றது. இதன் மூலம் சர்வதேசத்திற்கு வழங்கப்படுகின்ற செய்தி இணக்க அரசியல் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது, இதில் நீங்கள் தலையிடவேண்டாம் என்பதே.

விக்னேஸ்வரனின் இந்த நடத்தை தமிழக சக்திகளையும் ‘டயஸ்போராவையும்’ தான் மிகவும் பாதிக்கபோகின்றது. ஜெனிவா தீர்மானம் தொடர்பாக கடுமையான அழுத்தங்களை கொடுப்பதற்கு தமிழ்நாடும் டயஸ்போராவும் இரவு பகல் பராமல் உழைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த உழைப்பில் எல்லாம் விக்னேஸ்வரன் மண்ணள்ளிப் போட்டுள்ளார்.

இந்திய தேர்தலும் நெருங்கி வருவதால் காங்கிரஸ் தலைமைக்கு இலங்கை தமிழர் விவகாரத்திலிருந்து தமிழ்நாட்டை தள்ளி வைக்கின்ற தேவை இருக்கின்றது. விக்னேஸ்வரன் இதற்கு நன்றாகவே உதவி செய்திருக்கின்றார். ஏற்கனவே விக்னேஸ்வரனின், கணவன் - மனைவி உறவுக்குள் தமிழ்நாடு தலையிடத் தேவையில்லை என்ற அறிக்கை தமிழக சக்திகளை நன்றாகவே பாதிக்கச் செய்துவிட்டது. இந்த அறிக்கை தங்களது நெஞ்சில் ஊசியால் குத்தியது போன்றிருந்தது என தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

2009 மே 17இற்கு பின்னர் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மாற்றம் மிகவும் மகத்தானது. இலங்கை தமிழ் மக்களுக்கு ஆதரவாக பொதுகருத்து அங்கு எழுச்சியடைந்திருக்கின்றது. இப் பொதுக் கருத்தினை ஏற்க வேண்டிய நிலைக்கு சகல அரசியற் கட்சிகளும் தள்ளப்பட்டுள்ளன. இது வழக்கத்திற்கு மாறாக பொதுமக்களிற்கு பின்னால் இழுபட்டுச் செல்லவேண்டிய நிலையை அரசியற் கட்சிகளுக்கு தோற்றுவித்துள்ளது.

அதேவேளை தமிழ்நாட்டு படித்த மத்தியதர வர்க்க இளைஞர்கள் கட்சி அரசியலுக்கு அப்பால் இலங்கை தமிழர் விவகாரம் தொடர்பான கவனத்தைக் குவிக்கத் தொடங்கியுள்ளனர்.

*( தொடர்ச்சி 24ம் பக்கம்)*


Kayaal IT Solution Ltd
CCTV Camera Installation & Maintenance
Friendly services by qualified Engineer.....



Special Offers !!

- 4 Cameras include night vision up to 700 TVL + DVR (500 GB HDD, H264, D1) Including online viewing. Installing & Supply £450.00 inclusive
- 8 Cameras with above specification £ 650.00 inclusive
- For Repair call out charge from £ 35.00 + Parts
- CCTV Cameras yearly maintenance from £ 130.00 + Parts up to 20 miles radius from SM5
- Portable appliance test (PAT) for House & Business
- PC & Laptop repair & upgrade

Please Contact : Jothy
Paying Method : By PayPal or Cash

Electrical & Electronic Engineer, Beng Hons
Microsoft certified for MCTC, MCP 2.0 & Guilds
Certified for PAT test

83, Roberts Bridge Road,
Carshalton,
SM5 1AH

Mob : 07859892657
E-Mail : kayaalitsolutions@hotmail.com
Web : www.kayaalitsolutionlimited.com

# கழகம் ஒரு குடும்பம்! குடும்பமே கழகம்!! கலகம்தான் கழகம்!!!



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

கருணாநிதியின் அரசியல் வாழ்வில் தடையாக வந்தவர்கள் எல்லாரையும் தூக்கி எறியத் தயங்கவில்லை. தந்தை பெரியார் திருமணம் செய்தவுடன் திராவிடக் கழகத்தில் இருந்து அறிஞர் அண்ணா தலைமையில் பலர் பிரிந்த போது கருணாநிதி தி.க.விலேயே இருந்தார். பின்னர் அண்ணாவின் திமுகவிற்கு வளரும் செல்வாக்கைக் கண்டு அண்ணாவுடன் இணைந்தார். அண்ணா மறைவிற்குப் பின்னர் தான் முதல்வர் பதவிக்கு தடையாக இருந்த இரா நெடுஞ்செழியனை எம்.ஜீ.ஆரின் உதவியுடன் விலக்கினார். பின்னர் அதே எம்.ஜீ.ஆரையும் தூக்கி எறிய கருணாநிதி தயங்கவில்லை.

### ◆ திருட்டு வீடியோக் கடை நடாத்தியவர்

கருணாநிதியின் முதல் மனைவி பத்மாவின் மகன் மு. க. முத்து பெரும் குழடிகாரனாக மாறியபோது அவரையும் குடும்பத்தில் இருந்தே விலக்கி வைத்தார். கருணாநிதியின் இரண்டாவது மனைவி தயாளுவின் மூத்த மகனும் சரித்திரம் படித்த பட்டதாரியுமான மு. க. அழகிரி பெரும் குழப்படிகாரனாக மாறிய போது அவருக்கு மதுரையில் ஒரு ஒலி-ஒளி நாடாக் கடை போட்டுக் கொடுத்து தன்னிடமிருந்து விலக்கி வைத்தார். அழகிரிக்கு மதுரையில் முரசொலி பத்திரிகை விவகாரத்தைப் கவனிக்க அனுப்பப் படுவதாகச் சொல்லப்பட்டது. மதுரைக்குப் போன அழகிரி அங்கு தனது சண்டித்தனத்தாலும் பணத்தாலும் தனக்கு என்று ஒரு பெரும் கும்பலை உருவாக்கினார். இது கருணாநிதியின் கட்சிப்பணிகளுக்கு பெரும் உதவியாக இருந்தது. இதனால் அழகிரி கட்சியில் வளர்ந்து திமுகவின் தென்மண்டலச் செயலாளரானார். அஞ்சா நெஞ்சன் என்னும் பட்டமும் பெற்றார். சிலர் அழகிரியை திருட்டு வீடியோக் கடை நடாத்தியவர் என்றும் விமர்சிப்பதும் உண்டு. மதுரைக்கு எப்போதும் ஒரு சண்டியன் தேவை. முன்பு திமுகவின் மதுரைச் சண்டியனாக மதுரை முத்து என்பவர் இருந்தார்.

### ◆ தொடரும் பங்கீடு

கட்சியில் தனது செல்வாக்கை பரப்ப முயன்ற அழகிரிக்கு தடையாக இருந்தவர் அவரது தம்பி மு. க. ஸ்டாலின் இவரும் தயாளுவின் மகன். ஆனால் அழகிரிக்கு முன்னரே கட்சிப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு தனக்கென்று திமுகவில் தனியிடம் பெற்றவர். இவரை ஓரம் கட்டி அழகிரி முன்னுக்கு வர முயன்றார். இதனால் அழகிரியை இந்தியப் பாராளமன்றத்தின் உறுப்பினராக்கி அவருக்கு மைய அரசில் அமைச்சர்ப்பதவியும் பெற்றுக் கொடுத்தார் கருணாநிதி. முரசொலி மாறன் டில்லியிலும் தான் சென்னையிலும் பதவி வகித்தது போல் அழகிரியும் ஸ்டாலினும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளட்டும் என கருணாநிதி நினைத்தார். ஆனால் ஆங்கிலமோ இந்தியோ தெரியாத அழகிரிக்கு டில்லியில் பதவி வகிப்பது அறவே பிடிக்கவில்லை. கருணாநிதிக்குப் பின்னர் தானே முதலமைச்சராக வேண்டும் என அடம் பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

### ◆ தூங்காத நகரில் ஓயாத கொலைகள்

மதுரையில் அழகிரி கும்பல் வேண்டுமென்றே நீர்த்தட்டுப்பாடு ஏற்படுத்திவிட்டு குழாய்க் கிணறுகளை விற்பனை செய்தார் எனக் குற்றம் சாட்டிய பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த தோழர் லீலாவதி என்பவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். அழகிரி-ஸ்டாலின் மோதல் தீவிரமடைந்த போது ஸ்டாலின் ஆதரவாளர் த. கிட்டினன் என்ற திமுக அமைச்சர் மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டார். இது தொடர்பாக அழகிரி கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார். திமுகவின் மத்திய குழு உறுப்பினராக இருந்தவரும் அழகிரி ஆதரவாளருமான நில அபகரிப்பு வழக்கில் கைதான பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தவருமான 'பொட்டு'' சுரேஷ் என்பவரும் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டர். கருணாநிதியின் மருமகன் முரசொலிமாறனின் குடும்பத்துப் பத்திரிகையான தினகரனில் அழகிரியிலும் பார்க்க ஸ்டாலினிற்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு இருப்பதாக கருத்துக் கணிப்பு கூறுவதாகச் செய்தி வெளிவிட்டதனால் மதுரையில் இருந்த தினகரன் பணிமனை அடித்து நொருக்கி கொழுத்தப்பட்டதால் அங்கு வேலை செய்தவர்கள் கொல்லப்பட்டனர்.

### ◆ கருணாநிதிக்கு கைகொடுக்கும் விடுதலைப் புலிகளே!!!

டில்லி பிடிக்காத அழகிரி தனக்கு சென்னை வேண்டும் என அடம்பிடிக்கத் தொடங்கியதில் இருந்து அழகிரி-ஸ்டாலின் மோதல் மீண்டும் பூதாகாரமாக வெடித்தது. இப்போது ஜெயலலிதாவின் ஆட்சி சென்னையில் நடப்பதால் யாரும் மர்மமான முறையில் கொல்லப்படவில்லை. கட்சியில் இருந்து அழகிரியின் ஆதரவாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். கருணாநிதியிடமே நேரடியாகப் போய் சண்டை போட்டார் அழகிரி. சண்டையோ சண்டை. கருணாநிதி கவலைப்பட்டு அழகிரியையே கட்சியை விட்டு விலக்கும் அளவிற்கு சண்டை இருந்தது. கருணாநிதிதான் திரைக்கதை வசனம் எழுதுவதில் வல்லவராயிற்றே. ஸ்டாலின் இன்னும் மூன்று மாதத்தில் இறந்து விடுவார் என ரெம்ப மனவருத்தப் பட்டு கருணாநிதி கருத்து வெளியிட்டிருந்தார். அவர் கூறியதில் இருந்து ஸ்டாலினை இன்னும் மூன்று மாதங்களுக்குள் போட்டுத் தள்ளி விடுவேன் என அழகிரி கூறியதைத்தான் கருணாநிதி இப்படி சொல்லுகிறார் என மாற்றுக் கட்சிக்காரர்கள் கிண்டலடிக்கின்றனர். கருணாநிதி இத்துடன் நிற்கவில்லை. தனது மகன் ஸ்டாலினிற்குப் பாதுகாப்பு அவசியம் என்பதை அவர் நன்கு உணர்ந்தார். டில்லியிலும் சென்னையிலும் அவர் ஆட்சியில் இல்லை. உடனே அவர் புலிப்புரளியைக் கிளப்பினார். தனது மகன் ஸ்டாலினிற்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆபத்து உண்டு என டில்லிக்கு கடிதம் எழுதி ஸ்டாலினிற்கு உயர் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

### ◆ மீண்டும் 2ஜீ பூதம்

கருணாநிதியின் பிரச்சனை இத்துடன் முடியவில்லை. அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சிக்காரர்கள் கருணாநிதியின் குடும்பத்தின் 2ஜீ ஊழல் தொடர்பான மேலும் ஆதாரங்களை வெளியிட்டுள்ளனர். இதைக் கேட்டு கலங்கிப் போனது கருணாநிதியின் மூன்றாம் (கணக்கு சரியா தெரியாது) மனைவியின் மகள் கனிமொழி மட்டுமல்ல முழுக் குடும்பமுமே. காங்கிரசுக் கட்சி தனது தேவைகளுக்கு ஆம் ஆத்மி கட்சியை பயன்படுத்துகிறதா என்ற ஐயம் இங்கு வலுவடைகின்றது. இந்திய உளவுத் துறையான சிபிஐ ஆம் ஆத்மி கட்சிக்காரர்கள் வெளியிட்ட ஆதாரம் தொடர்பாக உடனடியாக விசாரணை செய்யப்படும் என அறிவித்தனர். தி.மு.க.வை மிரட்டி காங்கிரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர வைக்க செய்யப்பட்ட வேலைதான் ஆம் ஆத்மி வெளிவிட்ட 2ஜீ ஊழல் தொடர்பானஆதாரம் எனப் பலரும் ஊகிக்கின்றனர். உடனே கனிமொழி காங்கிரசுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர வேறு வழியில்லை என தந்தையிடம் வலியுறுத்தினாராம். அவர் இதை இரு நோக்களுடன் செய்தார். ஒன்று தான் 2ஜீ ஊழலில் இருந்து தப்ப காங்கிரசின் ஆதரவு தேவை என்பதால். மற்றது அழகிரி கட்சியில் இருந்து ஓரம் கட்டப்பட்டதால் தன்னால் டில்லியில் ஒரு நல்ல அமைச்சுப் பதவியைப் பெற முடியும் என அவர் நம்புகிறார். ஆனால் ஸ்டாலின் காங்கிரசுடன் கூட்டணியைமறுத்துவிட்டார். இதனால் கருணாநிதியின் வாரிசுகள் மூன்று முனையில் நின்று மோதிக் கொள்கின்றனர். ஸ்டாலின் காங்கிரசுடன் கூட்டணி இல்லை எனத் தொடர்ந்து முரண்டு பிடித்தால் ஸ்டாலினிற்கு எதிராகவோ அல்லது திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான அவரது மகன் உதயநிதிக்கு எதிராகவோ ஒரு வருமான வரிச் சுத்துமாத்துக் குற்றம் தயாரிப்பது நிச்சயம் நடக்கும். இந்தியாவில் கட்சிகளின் கூட்டணியை கட்சித் தலைவர்களின் ஊழல் தொடர்பாக சிபிஐயிடம் இருக்கும் கோப்புகள் தான் முடிவு செய்யும்.

### ◆ தங்கை யாருக்காக

முரசொலி மாறனின் தம்பி முரசொலி செல்வத்தை கருணாநிதியின் மகள் செல்வி திருமணம் செய்திருப்பதாலும் தம்மிடம் இருக்கும் பணவலுவாலும் மாறன் குடும்பத்தைச் சேர்ந்த தயாநிதி பாராளமன்ற உறுப்பினராக இருக்கிறார். ஸ்டாலினும் அழகிரியும் அவ்வப்போது கனிமொழியை தம் பக்கம் இழுக்க முயற்சிப்பது உண்டு. தனது மகளுக்கு அமைச்சுப் பதவியோ அல்லது கட்சியில் தன் சக்களத்தியின் பிள்ளைகளுக்கு இணையான பதவியோ கொடுக்கப்படவில்லை என கனிமொழியின் தாய் ராஜாத்திக்கு பெரும் கவலை. இது தொடர்பாக அவர் கருணாநிதியிடம் சண்டை போடுவதும் உண்டு. அழகிரி கட்சியில் இருந்து விலக்கப்பட்ட பின்னர் அவரது ஆதரவாளர்கள் தம் பிழைப்புக்காக கனிமொழியின் பின்னால் போகத் தொடங்கியது ஸ்டாலினை ஆத்திரப்படுத்தியுள்ளது.

### ◆ கருணாநிதி குடும்பம் போராளிகள் அமைப்பல்ல

ஒருவருடன் ஒருவர் மோதுபட்டு அழிந்து போக கருணாநிதி குடும்பம் ஒன்றும் கிளர்ச்சிக் குழு அல்ல. முன்னர் முரசொலி பத்திரிகைப் பணிமனையை மதுரையில் எரிபட்டத்தைத் தொடர்ந்து கொலைகார அழகிரி என மாறன் குடும்பத்து சன் தொலைக்காட்சியும் பத்திரிகைகளும் விமர்சித்ததைத் தொடர்ந்து கருணாநிதி குடும்பமும் மாறன் குடும்பமும் பிளவு பட்டுக் கொண்டன. பின்னர் கருணாநிதியின் பேரப்பிள்ளைகள் கருணாநிதியின் மகள் செல்வி (முரசொலி) செல்வம் மருத்துவமனையில் இருந்த போது சந்தித்து எல்லாரையும் ஒற்றுமையாக்கினார்கள். அதன் பின்னர் அவர்கள் தமது இடைவெளிகள் எப்படி இருக்க வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டனர். தாம் பிளவு பட்டு இருப்பதால் இருவரது செல்வமும் தேய்ந்து போகும் என அவர்கள் நன்கு அறிவார்கள். அழகிரியையும் ஸ்டாலினையும் இணைத்து வைக்க அழகிரியின் மனைவியும் கருணாநிதியின் மகள் செல்வியும் கடுமையாக முயற்ச்சிக்கிறார்கள். அழகிரியின் மகன் முதலில் கருணாநிதியையும் ஸ்டாலினையும் தாக்கி டுவிட்டரில் கருத்துத் தெரிவித்திருந்தாலும் அவரும் இப்போது சித்தப்பாவுடன் உடன்படுவது தனக்கும் நல்லது என நினைக்கிறாராம். திரைப்படத் தயாரிப்பாளரான தயாநிதி அழகிரிக்கும் எதிராக கிரனைட் ஊழல் வழக்கு, வீட்டு மனை ஒதுக்கிய வழக்கு போன்றவற்றில் மாட்டுப்பட்டவர். இவரும் மன்னரைச் சார்ந்து ஒழுகுதலை விரும்புகிறார். ஏதாவது ஒரு குடும்ப நிகழ்வின் பின்னர் எல்லாரும் ஒன்றாகலாம். ஆனால் அஞ்சா நெஞ்சன் அழகிரி விட்டுக் கொடுக்க வேண்டும்.


**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Bookkeeping

R3
THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

# Permanent Peoples' Tribunals and the pursuit of justice in Sri Lanka



By JS Tissainayagam

*Can civil society initiatives succeed where the world's powerful governments have failed?*

Competitive, state-centred international politics are often a barrier for victims of human rights violations to find redress through global judicial institutions. To circumvent some of these restrictions the civil society-led International War Crimes Tribunal was founded by Bertrand Russell in 1967 to try the United States and its allies for war crimes against the Vietnamese people.

The Permanent Peoples' Tribunal (PPT) was established by Lelio Basso in Bologna in 1979 with similar ideals in mind. PPTs are civil society initiatives that use international legal standards, legal reasoning and procedure such as analysing evidence, but are not limited by constraints of formal judicial systems – both national and international – that bar calling certain witnesses or adopting non-legal norms.

Since PPTs are civil society initiatives they lack the rigour and legitimacy that national and international judicial institutions possess. Moreover, their verdicts cannot be enforced. But a tribunal's verdict, because it is a collective opinion of a group of judges and the product of legal reasoning, has binding moral authority.

Sri Lankan President Mahinda Rajapaksa's government has continually stonewalled calls for a genuine war crimes investigation.

The need for such tribunals for victims caught up in violent civil wars in a world mired in the national interests of powerful states can be seen in many contemporary examples. Two of those are Syria and Sri Lanka. No PPT has sat on Syria yet, while two – Dublin 2010 and Bremen 2013 – have scrutinised the 30-year civil war and ongoing violations in Sri Lanka.

In January, eminent forensic experts examining evidence from Syria between March 2011 and August 2013 concluded that Syrian government forces were guilty of war crimes from a trove of evidence that showed 11,000 prisoners had been tortured and starved before they were killed.

These revelations came out as delicate negotiations unfolded in the presence of the international community in Montreux and Geneva, principally on an interim government and whether al-Assad would be part of it. Despite the mass of evidence unearthed on what appear war crimes there is widespread belief national interests of powerful countries will trump human rights. Ben Hubbard and D. Kirkpatrick wrote in the New York Times, "While the report's authors hope it will create momentum for the prosecution of war crimes in Syria, they acknowledge that international politics are likely to block such action."

In Sri Lanka, a 30 year-long civil war between Sri Lanka government troops and Liberation Tigers of Tamil Eelam (LTTE) rebels ended in May 2009 with the military defeat of the latter. Particularly horrifying was the fate of civilians caught up in the merciless slaughter of the final few months of combat that left between 40,000 and 146,000 people dead (the exact numbers are yet to be determined). After examining evidence a UN panel of experts concluded in a March 2011 report that both government troops and rebels had committed war crimes and crimes against humanity.

Over the past four years forensic experts and human rights lawyers have gone on to corroborate the truth of these allegations by pulling together mobile phone videos, photographs and numerous eyewitness accounts, some of which appears in a three-part documentary by Britain's Channel Four, known as Sri Lanka's Killing Fields.

Worse, grave human rights violations still occur due to high levels of militarisation in areas where large numbers of Tamils live: disappearances, rape and acts of ethnic cleansing. Meanwhile political prisoners and captured LTTE cadre remain in indefinite detention and are subject to torture and rape. Mounting evidence of war crimes led to an international call for accountability by the Sri Lanka government. Colombo denied committing war crimes and refused to appoint a domestic commission of inquiry. When the international community threatened to pursue an international investigation into alleged war crimes, Sri Lanka appointed the Lessons Learned and Reconciliation Commission (LLRC). But the LLRC not only fell short of acceptable international norms of independence, but its mandate was not to investigate war crimes, but issues of why the Ceasefire Agreement of 2002 failed and preventing its recurrence.

From November 2011 onwards the international community has pursued two interrelated goals: a) that Sri Lanka appoints a credible domestic commission of inquiry and b) implementing the recommendations of the LLRC. Two resolutions at the UN Human Rights Council (UNHRC) – 2012 and 2013 – reflect these concerns.

But Colombo has continued to stonewall. Finally in October last year, UN High Commissioner for Human Rights Navi Pillay told the UNHRC, "if significant steps were not taken before … March (2014), the international community would be forced to launch its own inquiry."

In the face of the high commissioner's call civil society hoped that the international community frustrated by Colombo's stubborn refusal to implement some measure of accountability or stem the continuing impunity would move towards calling for international accountability mechanisms.

However, states began backtracking despite the mounting evidence of war crimes. The US government remains focussed on the LLRC, ignoring warnings by Amnesty International that "if international policymakers continue to treat the LLRC as a potentially credible domestic accountability mechanism capable of adequately addressing alleged violations as serious as war crimes, despite all evidence to the contrary, they contribute to dangerous delays in providing real accountability, justice and reparations for the victims."

In December 2013, US Assistant Secretary of State for South and Central Asia Nisha Biswal said, "[t]hrough the LLRC, there are a set of recommendations. I think that those are exactly the points that we'd like to see progress on, and we've encouraged them to do that." The British government declared that it would push for an international investigation only if Sri Lanka did not begin a credible internal investigation into war crimes before March 2014.

Despite four years of not only stonewalling but of a perpetuating new human rights violations, Sri Lanka still retains stature in the eyes of Britain and the US to carry out a credible war crimes investigation. The only explanation for such bizarre thinking is that, as in the case of Syria and in Sri Lanka too, western capitals want to remain engaged with Colombo because it would increase their leverage to pursue their narrowly perceived national interests rather than international law and accountability.

**Competitive, state-centred international politics are often a barrier for victims of human rights violations to find redress through global judicial institutions.**

In the face such blatant pussyfooting bodies such as the PPT perform important functions. They collect and document masses of evidence. They analyse that evidence against standards of international law. And by giving a forum to voices that realpolitik shuts out, they supplement the formal processes.

The first PPT on Sri Lanka in Dublin in 2010 established that war crimes and crimes against humanity were committed. The verdict of the second in Bremen in December said, "The panel of 11 judges unanimously found Sri Lanka guilty of the crime of genocide against the Eelam Tamil people, and that this crime continues today."

We can only hope that in the run-up to the UNHRC sessions in March and beyond, the forthright judgement of the tribunal in Bremen will establish that national interests need not only be for narrow goals of realpolitick. National interests include fighting for justice in the world. Because in the long run a just and equitable world order makes the burden of governance less onerous in all parts of the world.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design

# "This is an ongoing genocide" - landgrabs conference concludes





An international Conference on State Grabs of Tamil Land in the Island of Sri Lanka, organised by the All Party Parliamentary Group for Tamils alongside the British Tamils Forum, was inaugurated on Friday, January 31st at the House of Commons.

Various international delegates, including from the Northeast, expressed serious concern about attacks on the Tamil homeland, with many affirming that ongoing genocide against the Tamil nation is taking place in Sri Lanka.

Labour MP Siobhain McDonagh opened the conference, followed by Conservative MP Lee Scott who spoke of the importance of justice and also pointed out that Sri Lankan regimes "have tried to take land and change the demography" of the Tamil homeland.

Medha Patkar, a veteran social activist representing National Alliance of People's Movements India (NAPM India) highlighted that the colonisation taking place in "every nook and corner of Tamil land" constituted a "continued wave of genocidal attacks" and further said:

"Sri Lanka is erecting statues not to bring in diversity and religious diversity, but to impose a new culture."

The second day of the international conference took place at the Kennedy Lecture Theatre of the University College London on Saturday. It opened with a screening of 'This Land Belongs to the Army', a documentary by Tamil Nadu journalist Tamizh Prabhagaran, who was arrested and deported from the island last year. The documentary focused on the extent of militarisation in the Northeast.

Professor Oren Yiftachel of the Ben Gurion University, Israel, delivered a talk examining ethnocracies, saying that they "might have elections and citizenship on paper… but below this facade it is about the expansion of one ethnic group".

In a panel discussion, Dr Shapan Adnan from Singapore University, pointed out that "army of archaeologists were released [into the Northeast] after war ended, "rediscovering" religious sites" which espoused a "state sponsored rewriting of history". Dr David Rampton, a fellow of the London School of Economics, asserted that "the international community is only now beginning to comprehend it was Sinhala nationalism that created the dynamic for many of [the island's] problems". Dr Jochen Hippler from University of Duisburg-Essen argued that oppression is a useful tool in Sri Lanka's nation-building project. On the question of genocide, Hippler stated that "Sri Lanka is trying to turn Tamils from a nation into a minority."

In a talk entitled "President Rajapaksa – biggest mass murderer of the 21st century?" Professor Jake Lynch from the University of Sydney reiterated that the TNA's landslide victory in the Northern provincial elections was "very clear evidence of Tamil aspirations for self-determination".

In a second panel discussion, Mr K Kurunathan, a retired land commissioner in Sri Lanka, detailed the renaming of Tamil villages into Sinhalese by Sri Lanka, and the seizing of Tamil lands sometimes under the premises of preserving wildlife sanctuaries.

President of TNPF, Gajendrakumar Ponnambalam, pointed out that building military camps do not benefit the local population of the Northeast, and so acquisition of private lands served no "public purpose". Ponnambalam asserted that that the Sri Lankan constitution and legal system completed the Sinhala Buddhist nature of the Sri Lankan state and said:

"There is a clear state transfor mational process of establishing a Sinhala Buddhist ethnocracy,"

"The only barrier to that process was armed struggle of the LTTE.. Now the process is unabated,"

"In the eyes of the Tamil people the laws itself are the cause of oppression."

Ponnambalam also contested Professor Ramasamy, Deputy Chief Minister for the Malaysian state of Penang, who earlier advocated regime change, highlighting that the opposition were seen as weak for entering the ceasefire agreement, and that a regime's victory in Sri Lanka was a determined by its Sinhala ethnocratic credentials.

He also emphasised the Tamil protests during David Cameron's visit to Jaffna, which showed that the Tamil "people are willing to take risks despite oppression" and "willing to take action" but were in need of "leadership".

Anuradha Mittal of think-tank, Oakland Institute, led the final session of the day detailing that effective campaigns have been started against companies that do business in Sri Lanka.

Former UN Assistant Secretary-General, Denis Halliday built on his earlier discussion of genocide and explained that it is a "process, a strategy and a government policy" and also discussed the many genocidal processes enacted upon Tamils by Sri Lanka. Halliday also pointed out that the "LTTE was not given the chance to show their capabilities and leadership".

TNA MP Suresh Premachandran describing the strong sentiment among the Sinhala polity that the island belongs to Sinhala Buddhists,..

( Continued to Page 24)

THE FRIEND OF THE INDEPENDENT RETAILER ABRA WHOLESALE LTD ESTABLISHED 2003

**ABRA WHOLESALE LTD**
LONDON'S LEADING WHOLESALER & EXPORTER
5 PICKETTS LOCK LANE
EDMONTON, LONDON N9 0AS

proud to be a member of LANDMARK WHOLESALE
LONDON CHAMBER OF COMMERCE AND INDUSTRY

ALCOHOL - TOBACCO - GROCERY - CONFECTIONERY - SOFT DRINKS - TOILETRIES - HOUSEHOLD

**VACANCY**

**PURCHASING ASSISTANT**

Location: North London

Package: Basic £7.00 - £8.00 per hour
35 Hours per week

Purchasing Assistant to place orders with suppliers, maintain availability and perform general administration duties.

Candidates must have good verbal and written communication skill and must live locally. Previous purchasing experience and product knowledge is advantageous.

To Apply: Email your CV with detail of your current package to sales@abrawholesales.co.uk

**SCAN ELECTRONICS**

15th Year Anniversary

15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை





4 Camera CCTV System £ 499
* 4 N/V Cameras (600 TVL)
* 4 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

8 Camera CCTV System £ 749
* 8 N/V Cameras (600 TVL)
* 8 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

16 Camera CCTV System £ 1249
* 16 N/V Cameras (600 TVL)
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View)

EPOS System £ 1500

Wire Free Alarm £ 350
2 Door Contact, 2 PIR Sensor
1 Panic Button, Mobile Link

All the Prices Including Fitting and Transport

இனம்தெரியாத நபர்கள் வீட்டுக்கு வந்தால் உங்கள் கைத்தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ். மூலம் எச்சரிக்கை அனுப்பப்படும்

* All Prices within M25 Miles, Terms & Condiotions Apply

EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System



**SCAN ELECTRONICS**
UNIT - 06, Zeal House, 8, Deer Park Road,
London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com

# KIDS பேப்பர்

## Colouring - 211



## தினம் ஒரு குறள்

*பொறிவாயில் ஐந்தவித்தான்*
*பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்*
*நீடுவாழ் வார்.*

பொருள்:-மெய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் கட்டுப் படுத்திய துாயவனின் உண்மையான ஒழுக்கமுடைய நெறியைப் பின்பற்றி நிற்பவர்களின் புகழ்வாழ்வு நிலை யானதாக அமையும்.

## Fact ... Fact... !

### 'Sun Facts' for Kids

- The Sun measures 2,715,395 miles (4.730,005 kilometres) right round (circumference).

- The Sun is 92.96 million miles or 149.6 million kilometres from the Earth.

- The Sun is a star found at the center of the Solar System.

- At around 1,392,000 kilometres (865,000 miles) wide, the Sun's diameter is about 110 times wider than Earth's.

- Around 74% of the Sun's mass is made up of hydrogen. Helium makes up around 24% while heavier elements such as oxygen, carbon, iron and neon make up the remaining percentage.

- Light from the Sun reaches Earth in around 8 minutes.

- The Sun's surface temperature is around 5500 degrees Celsius.

- The Sun is only one of millions and millions of stars in the Galaxy.

கொடுத்து வாழ்....
கெடுத்து வாழாதே...
..................
நிறைய சிந்தனை செய்,
குறைவாகப் பேசு

## பொன்மொழிகள் சில

• பணத்தைக் கொண்டு நாய் வாங்கிவிடலாம்? ஆனால் அன்பைக் கொண்டு தான் அதன் வாலை அசைக்க முடியும்.

• என்ன துன்பம் நேர்ந்திருந் தாலும் சரி? எதுவும் நேராதது போல் நடந்து கொள்ளுங்கள்

• இறுதியில் கணக்கில் கொள்ளப்படுபவை, உங்கள் வாழ்வின் வருடங்கள் அல்ல, வருடங்களில் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கையே!!!

• சந்தோஷத்தைவிட கஷ்டங்கள் மனிதனுக்கு நிறைய, நல்ல படிப்பினைகளை சொல்லிக் கொடுக்கின்றன.

• நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குத் தகுதியான நண்பன் கிடைப்பது அரிது

• மணிக்கணக்கில் உபதேசம் செய்வதைவிட, ஒரு கணப் பொழு தாயினும் உதவி செய்வது மேல்

## விளையாடுவோமா சதுரங்கம் ?



*த.செல்வரத்தினம்*

*சென்ற வாரத் தொடர்ச்சி.....*

6) P: சிப்பாய்கள் எதிர்தரப்பினரின் பக்கம் நோக்கி நேர் கோட்டில் மட்டும் நகர்த்த முடியும் எதிர் தரப்பினரின் காய் களை கைப்பற்றும் போது குறுக்கு சதுரத்தில் தாக்க முடியும். சிப்பாய்கள் பின்நோக்கி நகர்த்த முடியாது. (விஷேட காய் நகர்த்தலைக் கவனிக் கவும்.)

**எச்சரிக்கை :**

எதிரியின் இராசா (K) வை கைப்பற்ற முடியாது. கைப்பற்றுவதற்கான எச் சரிக்கையாக Check என்று முன் அறி வித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் எச்சரிக்கை செய் யப்பட்ட இராசா (K) மூன்று விதத்தில் எச்சரிக்கையில் இருந்து தப்பிக்க முடியும்.

1. எச்சரிக்கை செய்யும் காயைக் கைப் பற்றலாம்.

2. இராசாவை எச்சரிக்கை இல்லாத பாதுகாப்பான ஒரு சதுரத்துக்கு நகர்த்தல்.

3. இராசாவுக்கும் எச்சரிக்கும் காயுக் கும் இடையில் உங்களுடைய ஒரு காயை நகர்த்தல்.

எச்சரிக்கையிலிருந்து தப்ப முடியா விட்டால் இது Check mate என்றும் எதிரி யின் இராசா தோற்றுவிட்டார் என்ப தனை ஒத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக இருதரப்பினரும் கையைக் குலுக்கி (Hand Shake) சிநேக பூர்வமாக விளையாட்டை முடித்துக் கொள்ள வேண்டும்.

**ஒழுங்கு முறைகள் :**

1. அமைதி பேணப்பட வேண்டும்.

2. பார்வையாளர்கள் விளையாடுப வர்களுக்கு எது விதமான உதவிகள்/ சைகைகள் செய்யப்படக்கூடாது (இது விளையாடுபவர்களின் புத்திக்கூர் மைக்கு உதவியாக இருக்கும்.)

3. அவரவர் முறைவரும் போது மட்டும் நகர்த்தப் போகும் காயைத் தொட முடியும் அப்படி. காயைத் தொட் டால் அந்தக் காயை கட்டாயம் நகர்த் தப்படல் வேண்டும். இது Touch move எனப்படும்.

(இரு உங்கள் நோக்கம் என்ன என் பதனை எதிராளி முற்கூட்டியே உணர்ந்து அதற்காக தனது ஊகத்தை (Strategy) வெளி செய்ய முடியும்.)

**விஷேட காய் நகர்த்தல்**

1. ஒரு பகுதியில் உள்ள சிப்பாய் (P) மற்றைய பகுதியின் அடித்தளத்தை அடையும் கட்டத்தில் அந்தக்காய்க்கு பதவி உயர்வு (Promotion) கொடுக்கப் படும். பொதுவாக பலம் வாய்ந்த இராணியாக மாற்றுவதே புத்திசாலித் தனமாகும்.

2. Castleing : இராசாவுக்கும், கோட் டைக்கும் (R) இடையில் ஒரு காய் களும் இல்லாத வேளையில் இராசா இரண்டு சதுரம் கோட்டையை நோக்கி நகர்த்த, கோட்டை அதன் அருகில் நகரும். இது ஆங்கிலத்தில் Castleing என்று அழைக்கப்படும்.

*முற்றும்.*

## What are Rainforests?

WHAT ARE RAINFORESTS?

Tropical rainforests are forests with tall trees, warm climate, and lots of rain. In some rainforests it rains more than one inch every day all year!

Rainforests are found in Africa, Asia, Australia, and Central and South America. The largest rainforest in the world is the Amazon rainforest.



RAINFORESTS Location; Brazil, Congo, Democratic Republic, Peru, Indonesia, Colombia, Papua New Guinea, Venezuela, Bolivia, Mexico, Suriname


## முத்துக் கதை நற்செயல், நற்சிந்தனை !

எல்லோருக்கும் உதவக்கூடியவர் ஒரு பெரிய மனிதர் வழமைபோல தன் வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்தார். அவர் எதிரே வந்து நின்ற ஒருவன் அவரிடம் 'ஐயா நான் வேறு இடத்தி லிருந்து வருகிறேன். சில ஆண்டுக ளுக்கு முன்னரும் நான் உங்களிடம் வந்து எனது பிரச்சினைகளைக் கூறிய போது ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, எனது கஷ்டத்தை நிவர்த்தி பண்ணி யிருந்தீர்கள்' என்று கூறி வணங்கி நின் றான்.

அதற்குப் பெரியவரும் 'அடடா இப்படி நன்றி சொல்வதற்கா இவ்வளவு தூரம் வந்தாய் அப்படி வந்திருக்க வேண்டுமென்றில்லை' என்று கூறி னார். ஆனால் வந்தவனோ அதற்காக இல்லை ஐயா. இப்பவும் அப்படி ஒரு உதவியைச் செய்தால் எனக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதற்காகத் தான் வந்தேன் என்றான். அதற்கு எந்தப் பதிலுமே சொல்லாத பெரியவரும் 'உன்னை விடவும் கீழ் நிலையில் எத் தனைபேர் வாழ்கிறார்கள் நான் தந்த ஆயிரத்தை வைத்து உழைத்து அவர் களுக்கும் நீ உதவியிருந்தால், இப்போ நீ கேட்காமலே பத்தாயிரம் தந்திருப் பேன்' அவர்களைப் பற்றிச் சிந்தித் தாயா? என்ற பாவனையில் தனது கவனத்தை வேறிடம் செலுத்தினார்.

வீட்டு முற்றத்தில் இருந்த பெரியவர் யாரென்று தெரிகிறதா? அவர்தான் கடவுள். கடவுளின் நிலையும் இன்று இப்படித்தான் இருக்கிறது. அவர் எம் மை எந்தக் குறைபாடுமின்றிப் படைத் தமைக்காக அவருக்கு நன்றிசொல் லாமல், நாம் சம்பாதித்ததில் தான தர்மம் செய்யாமல், மீண்டும் மீண்டும் ஏதாவது அற்ப வேண்டுகோளுடன் தான் அவரை நாடுகின்றோம்.

நோய் காரணமாக நோயாளி டாக்டரி டம் போகிறான். டாக்டரும் மருந்து கொடுத்து நோய் சுகமாகிறது. அதற் காக காய்ச்சல், தலைவலிக்கு டாக் டரிம் போக நினைத்தால் டாக்டர் கோபப்படமாட்டாரா? இன்று ஆலயங் களுக்குச் செல்வோரில் பலபேர் இந்த நோயாளியைப் போன்றுதான் இருக்கி றார்கள்.



## Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER. you could be the lucky winner Gift from Orupaper Gift Team.

நீங்களும் ஒரு பேப்பர் வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

**Visit our Web: www.facebook.com/ orupaper**



## Issue 210 Winner
## K . Varjitha



**K. Varjitha**



**R. Sujenthiny**

## தம்பி தங்கைகளே.....

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள், குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும், விடுகதைகள், பழமொழிகள் என்று எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள். அனுப்பும் போது உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள்.

**G11, Lombard House, 2, Purley Way, Croydon, CR0 3JP**

## Tips of the Week



ஹலோ குட்டீஸ் இந்த வாரம் http://www.sivasiva.dk என்ற இணையத் தளத்தை சும்மா ஒரு தடவை தட்டித்தான் பாருங்களேன். பிடிச்சா அடிக்கடி தட்டுங்கோ, பிடிக்காட்டி அடுத்த வாரம் வேற ஒன்டை சொல்லுறம். உங்களுக்கு தெரிஞ்சதையும் எங்களுக்கு சொல்லுங்கோ.

சிவமயம்







## சரவணை திருவருள் மிகு நாவலடி

# ஸ்ரீ ஞான வைரவ சுவாமி திருக்கோவில்

### புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(பெரும் சாந்தி விழா)

**காலம் - 12.02.2014 புதன்கிழமை**

**நேரம் காலை 9.10 முதல் 9.40 வரையுள்ள மீனலக்கினம்**

## வைரவ சுவாமிப் பெருமான் அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும், தமிழும் கலையும், கலாசாரமும் பின்னிப் பிணைந்து காணப்படும் சைவ மக்கள் செறிந்துவாழுகின்றஊராம்சரவணைப்பகுதியிலேகாவல்தெய்வமாகஇருந்துஎம்மையெல்லாம்பரிபாலித்துக்கொண்டிருக்கின்ற ஞான வைரவ சுவாமிப் பெருமானுக்கும் மற்றும் விநாயகர், பாலமுருகப் பெருமான் உற்சவமூர்த்தி வைரவசுவாமி முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுந்தரக் மணிக் கோபுரத்திற்கும், நிகழும் மங்களகரமான விஜய வருஷம் தைத்திங்கள் 30ஆம் நாள் (12.02.2014) புதன்கிழமை வளர்பிறை திரயோதசித் திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.10 மணிக்கு மேல் 9.40க்குள் வரும் மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் **‘மஹா கும்பாபிஷேகம்’** நடைபெற திருவருள் கைகூடி இருப்பதால் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு ஞானவைரவ சுவாமிப் பெருமானின் திருவருள் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ்வார்களாக.

பிரதிஸ்டா பிரதமகுரு
கிரியா பூஷணம், கிரியா திலகம் வாசுதேவ சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ கா.புவனேஸ்வரக் குருக்கள்**
(நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் பிரதமகுரு)

கும்பாபிஷேக குருமார்கள்
சிவாச்சார்ய திலகம் செ.சுகுமாரக்குருக்கள் (ஏழாலை)
சிவாச்சார்யமணி சிவஸ்ரீ.ஸ்ரீ.சாரங்கக்குருக்கள் (கல்வியங்காடு)
சங்கீதசாகரம் சிவஸ்ரீ. சி.மங்களேஸ்வரக்குருக்கள் (அரியாலை)
கிரியாகலாமணி சிவஸ்ரீ.பா.ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் (கந்தர்மடம்)

11.02.2014 அன்று 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்.

கும்பாபிகேத்தை தொடர்ந்து மண்டாபிஷேகம் பன்னிரண்டு தினங்கள்
நடைபெற்று 23.02.2014 நிறைவு பெறுவதோடு காலை 10.00 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

அடியார்கள் அபிஷேகத்துக்குரிய பால், தயிர், இளநீர் போன்றவற்றையும் ஹோமத்துக்குரிய நெய், தேன், சமுத்து, தானிய வகைகள் போன்றவற்றையோ உபகரித்து பெருமானின் திருவருளை மென்மேலும் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்

**“ இறைபணியில் இடப்படும் மூலதனமானது மறுபிறவியிலும் மாற்றப்படக் கூடிய காசோலையாகும் ”**

**‘மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்’**

## சரவணை மேற்கு, வேலணை

**இறைத் திருத்தொண்டில் செல்லையா சிவபாதசுந்தரம் குடும்பத்தினர்**


www.poojasweets.com
Best Quality Vegetarian Food for Any Occasions!
5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!
...tempting?
discover a new heaven on earth:
ORDER ON LINE
FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*
We also do International deliveries*
*Terms apply. See online for details
POOJA
SWEETS & SAVOURIES
The Taste That You Will Love, The Quality That You Can Trust
TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com
KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com


SRI STORE
உங்களுக்குத் தேவையான தரமான தாயக, இந்திய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடல் உணவுகள் மற்றும் அனைத்துப் பொருட்களையும் நியாயமான விலையிலும் தரமான
சேவையுடன் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்.
* Fresh Vegetable & Fruits * Asian, English, Europian, Afro Carribean Foods
குறைந்த செலவு... தரத்தில் நிறைந்த மகிழ்வு... இங்கு மட்டுமே
TelePhone : 020 8553 7737
396-400, ILford Lane, ILford, Essex, IG1 2NB
E-mail: sristore@yahoo.co.uk

# தந்தை தாய் பேண்



தந்தை சொல் மிக்கதோர் மந்திரமுமில்லை, தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை முத்தான வாக்கியங்கள் கேட்பதற்கு அருமையாக இருந்தாலும் நடைமுறையில் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகிறது என்பதே கேள்வி. பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகள் தன்னை விட மேலாக சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென்பதே ஒவ்வொரு தாயின் கனவாக இருக்கும். அதற்காக எந்தச் சுகத்தையும் இழக்கவும், தாங்க முடியாத துன்பங்களைத் தாங்கவும், எந்த நிமிடமும் தயாராக இருப்பதை உலகமே அறியும். அதனால் தான் தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை எனப் போற்றப்படுகின்றனர்.

தந்தை ஸ்தானத்தில் இருப்பவர், தனது பிள்ளைகள் நல்வழிகளில் ஒழுகி சமுதாயத்தில் நற்பெயர் வாங்க வேண்டுமென்பதில் அக்கறையாக இருப்பதினால் பிள்ளைகளை நல்வழிப்படுத்த அவ்வப்போது சிறந்த அறிவுரைகளைக் கூறுவது இயல்பு தந்தை கூறும் நல்லுரைகளை அலட்சியம் செய்யாமல், மந்திரமாகக் கடைப்பிடித்து ஒழுகினால் அப்பிள்ளை சமுதாயத்தில் நல்லதொரு குடிமகனாகவோ அல்லது குடிமகளாகவோ வளர நிறைய வாய்ப்பு இருப்பதாக அறிவிற் சிறந்தோர் கூறுகிறார்கள்.

இத்தகைய அர்ப்பணிப்புடன் வாழும் தாய், தந்தையரை அவர்கள் வயது முதிர்ந்த காலத்தில் சுகநலம் குன்றிய காலத்தில் வருமானம் போதியளவு கிடைக்காமல், தளர்வடையும் காலத்தில், அவர்களைப் பேணிக் காக்க வேண்டியது பிள்ளைகளின் கடமையென அறிவுறுத்துவதே ஔவையார் கூறி வைத்த தந்தை தாய் பேண் எனும் நல்வழியாகும். புலம்பெயர் நாடுகளில் வாழும் பெற்றோர்கள் அனேகரின் கதைகளைக் கேட்டால், பிள்ளைகள் தாய், தந்தையரைப் பேணுவதைவிட, பெற்றோர்கள் பிள்ளைகளைப் பேணுவதுதான் சாதாரண சம்பிரதாயமாக மாறி விட்டதை எமக்கு கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. நல்லவேளையாக, இந்த நாடுகளில் எல்லாம் வயது முதிர்ந்தவர்களைப் பராமரிக்கும் வசதிகள் கிடைப்பதினால் தந்தை, தாய் இருவரையும் பிள்ளைகள் பேணாவிட்டாலும் அரசினர் பேணிப் பாதுகாக்க வசதிகள் கிடைப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

புலம்பெயர்ந்த நாடுகளில் கிடைக்கும் வசதிகள் போன்று இந்தியா, இலங்கை போன்ற இடங்களிலும், முதியோரைப் பாதுகாக்கும் இல்லங்கள் முளைக்கத் தொடங்கிவிட்டதினால், தந்தை தாயைப் பேணுவது இலகுவாகி விட்டதை இளைய தலைமுறையினர் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

## உடலில் கடியா கண்ணாடியில் தடவு

இப்படியும் ஒரு கண்டுபிடிப்பா? இது என்ன பரிசோதனை என்றெல்லாம் குழம்பவேண்டாம். ஆனால் அதுதான் நிஜம். மூளைக்கு கிடைக்கும் பொய்த்தோற்றம் (Illusion) உடலில் உண்டாகும் வலியையும் போக்கக் கூடிய வல்லமை உண்டு என்பதை நிரூபிப்பதே இக் கண்டுபிடிப்பு.

ஜேர்மனியிலுள்ள லூபெக் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிறிஸ்ரொப் ஹெல்சென் என்பவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட ஆய்வில், உடலில் எப்பாகத்தில் வலி அல்லது கடி உண்டாகினாலும் அந்த உடற்பகுதியின் தோற்றத்தை எதிரே இருக்கும் ஒரு கண்ணாடியில் விழச் செய்து வலி காணலாம். அதே இடத்தில் மெதுவாகத் தடவியோ அல்லது சுரண்டியோ சைகை செய்யாமலே நிஜமான வலியுள்ள இடத்தில் அதன் வலி இல்லாமல் போவதை பரீட்சைகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

இந்த ஆய்வில் 26 ஆண் தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களின் கைகளில் செயற்கை முறையில் வலியை ஊசி மூலம் செலுத்தி ஆய்வாளர்கள் நடாத்திய பரிசோதனையில், கண்ணாடியில் தோற்றமளித்த பிம்பங்களில் சுரண்டியபோது, வலி தானாகவே நீக்கிவிட்டதாக ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர்களின் ஆராய்ச்சிப்படி நேரடிப் பார்வைகள் மூலம் மூளைக்குச் செலுத்தப்படும் செய்திகள் தான் உடலில் உண்டாகும் வலியை குறைக்கவோ கூட்டவோ செய்வதாகக் கூறுகின்றனர். தகுந்த மருத்துவ அதிகாரமில்லாமல் தயதுசெய்து இப்பரீட்சையில் இறங்க வேண்டாம். வேண்டுமானால் முயற்சித்துப் பார்க்கலாம். என்ன காசா கொடுக்கப் போறம்.

## காலம் கடந்த ஞானம்

யாழ்.மாவட்ட செயலகத்தினால் கடந்த 29.01.2014 ஆம் திகதி நல்லூர் ஆலய முன்றலில் நிறுவப்பட்டுள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட தைப் பொங்கல் விழா நிகழ்ச்சியில், தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவா நாணயக்காரா அவர்கள் கலந்து கொண்ட செய்திகள் அறிந்தோம்.

மொழியால், கலாசாரத்தால் தமிழர், சிங்களவர் வேறுபட்டிருந்தாலும் அவர்கள் பேசும் மொழி, அவரவர்க்கு தாய்மொழி என்பது உண்மை. இவ்விரு மொழிகளையும் தாய்மொழியாக ஏற்றுக் கொண்டு இவ்விரு இனத்தவரும் ஒருவரோடு மற்றவர் இணைந்து பரஸ்பரம் இரு மொழிகளையும் கற்றுக் கொள்வதால், இலங்கையில் இன ஒற்றுமை மீளப்பெறுமென அமைச்சர் தனதுரையில் வலியுறுத்திக் கூறியுள்ளார். அத்துடன் அவர் ஆரம்பித்து வைத்த இரு மொழிகளுக்கான பயிற்சி நிலையத்தை வட பகுதி மக்கள் நன்கு பயன்படுத்த வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பத்து மாதம் சுமந்து பெற்ற பிள்ளைகள் தன்னை விட மேலாக சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென்பதே ஒவ்வொரு தாயின் கனவாக இருக்கும்

1956ஆம் ஆண்டு, இலங்கை நாடாளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதின் பின் ஆரம்பிக்கப்பட்ட இனப்பாகுபாடு இன்றுவரை ஓய்ந்தபாடில்லை. ஒரு மொழி என்றால் இரு நாடு, இரு மொழிகள் என்றால் ஒரு நாடு என உரத்த குரல் கொடுத்த காலஞ்சென்ற சிங்களப் பிரமுகர் கொல்வின் ஆர்.டி. சில்வா கூட இலங்கை அரசியல் சாசனம் 1970 இல் திருத்தப்பட்டபோது, முந்திய அரசியல் சாசனத்தில் சிறுபான்மை இனத்தவருக்கு வழங்கப்பட்ட அற்பசொற்ப சலுகையான 29ஆம் சரத்துக்குட்பட்ட பாதுகாப்பையும் அகற்றிவிட்ட சாணக்கியம் நாமறிந்த உண்மை. இச் செயலுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர் உருவாக்கிய அதே பட்டறையில்தான் வாசுதேவ நாயக்காரா அவர்களும் இளைஞராக இணைந்து கொண்டது மறுக்கமுடியாத சரித்திரம்.

இவர்களையெல்லாம் நம்பி, ஈழத்தமிழர்கள் இன்னமும் ஏமாறுவார்கள் என்பது மூடத்தனம். அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், உதித்திருக்க வேண்டிய ஞானம், இப்போது மீண்டும் தலை தூக்குவது எதனால் என்பதை அறிய முடியாத ஈழத்தமிழர்கள் முட்டாள்களும் அல்லர். முடியுமானால் இதே போன்ற ஒரு பயிற்சி நிலையத்தை தெற்கில் திறந்து வைக்க அமைச்சர் முன் வருவாரா? யாருக்கு இவர்கள் காது குத்துகிறார்கள்.


11+ Exam Centres

Local Exam Centre: Walthamstow

Date: Saturday 1st March 2014, Time: 10:00am
At Walthamstow Tamil School
Willow Field College, Clifton Avenue
Walthamstow, E17 6HL

*Your Local Coordinator Kuhan Mob: 07961 158453*

Local Exam Centre: Southall

Date: Saturday 15th March 2014, Time: 10:30am
At Southall Tamil Kalvi Koodam
North Primary School
Meadow Road, Southall, Middlesex, UB1 2JE

*Your Local Coordinator Selvam Mob: 07448 116826*

*CEM MODEL*

*Paper One*
- Verbal Reasoning
- Short Mathematics
- Comprehension

*Paper Two*
- Longer Mathematics
- Data Handling
- Non Verbal Reasoning
- Cloze Passage

We do CEM and MCQ Model Papers

Monthly mock exams at a centre near you in Harrow, Southall & Walthamstow


Visit our website and register your child TODAY for FREE!!!

www.11plusexamcentres.co.uk


Or call us on 07740 468051

*A proven way to help pass the 11 plus entrance exam*

Be Prepared! Be Successful!!! Be Ready!!







பராமரிப்பாளர் தேவை...

84 வயது வயோதிப பெண்மணியை பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.



வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும், வாரத்தில் 6 நாட்கள் வேலை, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. NI Number அவசியம்

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 01923861679

SRI KANTH & CO SOLICITORS



We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

# இரசியா உக்ரேயினை ஆக்கிரமிக்குமா ?



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

இரசிய அதிபர் விளடிமீர் புட்டீன் பதவிக்கு வந்ததில் இருந்து இரசியாவின் பாதுகாப்புச் செலவு இருபது மடங்காக அதிகரிக்கப்பட்டது. அவர் இரசியா மீண்டும் உலக அரங்கில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற தொலை நோக்குடனேயே இதைச் செய்தார். இரசியாவின் வருமானம் உலகச் சந்தையில் எரிபொருள் விலை ஏறியதால் மிகவும் அதிகரித்தமை அவருக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. உலகின் இரண்டாவது பெரிய எரிவாயு உற்பத்தி நாடாகவும் உலகின் மூன்றாவது பெரிய திரவ எரிபொருள் நாடாகவும் இரசியா இருக்கின்றது.

### ◆ யூரோ ஆசிய ஒன்றியம்

இரசியாவின் படைத்துறை வலு அதிகரிப்பு அது மீண்டும் சோவியத் ஒன்றியம் போல் ஒரு கூட்டமைப்பை உருவாக்கும் நோக்கம் கொண்டது. அது மீண்டும் ஆர்மேனியா, பெலரஸ், கஜக்ஸ்த்தான், கிர்கிஸ்த்தான், தஜிகிஸ்த்தான் ஆகிய நாடுகளை இணைத்து யூரோஆசிய ஒன்றியம் என்னும் பொருளாதாரக் கூட்ட மைப்பை உருவாக்க முயல்கின்றது. இந்த ஒன்றியத்தில் உக்ரேயினும் இணைவது மிக முக்கியமாகும்.

### ◆ உக்கிரமடைய வைக்கும் ஜோன் கெரி

ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் இணைந்து உக்ரேயின் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும், செழிப்பாகவும் வாழும் முயற்ச்சிக்கு உதவி செய்யும் என்றார் ஜோன் கெரி. ஜோன் கெரி இப்படிச் சொன்னதுடன் நிற்கவில்லை ஜேர்மனியில் உக்ரேயின் எதிர்க் கட்சியைச் சேர்ந்த மூவரைச் சந்திக்கவும் செய்தார். உக்ரேயின் மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு அமெரிக்கா உதவி செய்யும் எனவும் ஜோன் கெரி உறுதி அளித்தார்.

### ◆ எந்தக் கூட்டுடன் கூடுவது

உக்ரேயின் நாடும் ஐரோப்பிய ஒன்றியமும் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடாத்தி வந்தன. இரு தரப்பும் Ukraine-EU Association Agreement என்னும் உக்ரேய்ன் - ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தம் கைச்சாத்திட முயன்றன. இதை விரும்பாத இரசியா ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரேயின் இணைவதை உக்ரேயின் அதிபர் மீது அழுத்தம் கொடுத்துத் தடுத்தது. உக்ரேயின் நாடு தனது எரிவாயுத் தேவைக்கு இரசியாவிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இரசியா உக்ரேயினுக்கு பத்து மில்லியன் டொலர்கள் நிதி உதவியும் குறைந்த விலையில் எரிவாயு வழங்குவதாயும் உறுதி வழங்கியது. அத்துடன் இரசியா உக்ரேயினைத் தனது யூரோ ஆசிய பொருதார சமூகத்தில் இணையும் முடிவை எடுக்க வைத்தது. இதற்கு உக்ரேயினில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. உக்ரேயினில் மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். 2013-ம் ஆண்டு நவம்பர் தொடங்கிய ஆர்ப்பாட்டம் இன்று வரை தொடர்கின்றது.

### ◆ ஆத்திரமடையும் இரசியா

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளும் நட்பு நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது இரசியாவைக் கடும் ஆத்திரமடைய வைத்துள்ளது. இரசியா இதை ஒரு ஜேர்மனிய ஆக்கிரமிப்பாகவே கருதுகிறது. போல்ரிக் நாடுகளான எஸ்தேனியா, லத்வியா, லித்துவேனியா ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தமை இரசியாவை ஆத்திரப்படுத்தியது. 01-07-2013இல் இருந்து குரோசியாவும் 28வது நாடாக ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தது.

### ◆ தூபமிடுவது யார்?

உக்ரேயின் அதிபர் விக்டர்யனுக்கோவிச் தேர்தலில் ஊழல் செய்து ஆட்சிக்கு வந்து ஊழலுடன் ஆட்சி செய்து கொண்டிருப்பவர் என்பது மேற்கு நாடுகளின் கருத்தாக இருக்கிறது. தேர்தலின் போது விக்டர் யனுக்கோவிச் வெற்றி பெற இரசியா முன்னூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் உக்ரேய்னில் செலவு செய்ததாக குற்றம் சுமத்தப்படுகின்றது. அத்துடன் பல இரசியர்கள் உக்ரேயின் சென்று தேர்தலின் போது செயற்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது. இரசியா இதே கைங்கரியங்களை அஜர்பைஜான், பெலரஸ் ஆகிய நாடுகளிலும் செய்ததாகவும் கருதப்படுகின்றது. இந்த நாடுகளிலும் இரசியாவின் ஒரு பகுதியான செஸ்னியக் குடியரசிலும் இரசியாவிற்கு சார்பான வேட்பாளர்கள் வெற்றி பெறச்செய்ய வாக்குப் பெட்டிகளுக்குள் கள்ள வாக்குகள் திணிக்கப்பட்டதாக பரவலான குற்றச்சாட்டு நிலவுகின்றது. இரசியாவிற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உக்ரேயின். இரசியாவைப் பொறுத்த வரை உக்ரேயின் அதன் பாதுகாப்பிற்கு முக்கியமான ஒரு நாடாகும்.

உக்ரேயின் நாடு இரசியாவுடன் இல்லாவிடில் இரசியா தனது வல்லரசு நிலையை தக்க வைத்துக் கொள்ள முடியாது என்பது படைத்துறை ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது. இரசியா ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யும் எரிவாயுவில் 90 விழுக்காடு உக்ரேயினூடாகச் செல்லும் குழாய்களூடாக விநியோகிக்கப்படுகின்றது. இரசியாவின் கருங்கடல் கடற்படைப் பிரிவு உக்ரேய்னிடமிருந்து குத்தகைக்கு இரசியா எடுத்த செவெஸ்டப்போல் துறைமுகத்திலேயே இருக்கிறது. உக்ரேய்ன் இரசியப் பிடியில் இருந்து விலகி நேட்டோ படைத்துறைக் கூட்டமைப்பில் இணைந்தால் இரசியாவிற்கு ஆண்டு ஒன்றிற்கு பத்து பில்லியன் அதாவது நூறு கோடி அமெரிக்க டொலர்கள் வருமான இழப்பீடு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உக்ரேயினியப் பொருளாதாரம் இரசியாவிற்கு செய்யும் ஏற்றுமதியில் இருந்து வருமானம் ஈட்டுகிறது.

### ◆ தமது நாட்டின் ஒரு பகுதி உக்ரேயின்.

இரசிய மக்களிடையே உக்ரேய்ன் தொடர்பாக இரசியா கடும் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வருகின்றது. அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் இரசியர்கள் உக்ரேய்னைத் தமது நாட்டின் ஒரு பகுதி என்ற மனப்பாங்குடன் இருக்கின்றனர். உக்ரேய்ன் மக்கள் செய்யும் எழுச்சி வெற்றி பெற்றால் அது இரசியாவிலும் மக்களாட்சி முறைமையை வேண்டி நிற்கும் பெரும் தொகையான மக்களுக்கு ஓர் உந்து வலுவாக அமையலாம் என்பதை இரசிய அதிபர் விளடிமீர் புட்டீன் நன்கு அறிவார். இதனால் இரசியா கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் என நம்பலாம்.

### ◆ திருப்தியடையாத ஆர்ப்பாட்டக்காரர்கள்

உக்ரேய்னின் தலைமை அமைச்சரும் அமைச்சரவையும் பதவி விலகி ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான சட்டம் அரசால் திரும்பப் பெறப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் திருப்தியடையவில்லை. உக்ரேய்ன் அதிபரும் பதவி விலகி புதிதாகத் தேர்தல் நடாத்த வேண்டும் அரசமைப்பு மாற்றப் படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். உக்ரேய்னில் அவசர காலச் சட்டம் கொண்டுவரப்பட்டு படைத் துறையினர் களத்தில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்பவர்களை விரைவில் அடக்க விரைவில் முயலலாம். ஜனவரி 31-ம் திகதி உக்ரேய்னின் படைத் துறையினர் நாட்டில் அமைதி உடனடியாக நிலை நாட்டப்பட வேண்டும் என்றனர். சுகயீன விடுப்பில் சென்ற உக்ரேயின் அதிபர் 03-02-2014இல் இருந்து மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளார்.

### ◆ கிளர்ச்சியும் பிளவும் இணைபிரியாதவை.

உக்ரேயினிலும் கிளர்ச்சிக்காரர்களிடை பல பிரிவிகள் உண்டு. இரசியாவுடன் உக்ரேயின் இணையக் கூடாது என ஆர்ப்பாட்டம் செய்பவர்களில் ஒரு பிரிவினர் உக்ரேயின் எந்த ஒரு நாட்டுடனும் இணையக் கூடாது என நிற்கின்றனர். இன்னொரு பிரிவினர் உக்ரேயின் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய வேண்டும் எனப் போராடுகின்றனர். வலதுசாரிகள் குழு என்னும் தீவிரவாத அமைப்பும் செயற்படுகின்றது. காவற்துறையினர் ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்க வரும்போது காவற்துறையினர் மீது இவர்கள் போத்தல் எரிகுண்டுகளை வீசுவார்கள்.

### ◆ உக்ரேயின் அதிபர் இறங்கியதால் ஆத்திரமடைந்த இரசியா

உக்ரேயின் அதிபர் விக்டர் யனுக்கோவிச் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்த ஒத்துக் கொண்டதையும் தலைமை அமைச்சரும் அமைச்சரவையும் பதவி விலகியதையும் உக்ரேயின் விட்டுக் கொடுப்புச் செய்ததாக இரசியா கருதியது. ஆத்திர மடைந்த இரசியா உக்ரேயின் பொருட்களை இரசியாவிற்கு ஏற்றிச் சென்ற பார ஊர்திகளை தனது நாட்டு எல்லையில் வைத்து சோதனை என்ற பெயரில் தடுத்து வைத்தது. இதனால் உக்ரேயின் ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் இழப்பீடு ஏற்பட்டது. இரசியா உக்ரேயினிற்கு வழங்க இருந்த 15பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கடன் பொதியை இடை நிறுத்தியது.

### ◆ மோசமடைந்த உக்ரேயின் பொருளாதாரமும் கைகொடுக்க வரும் மேற்கும்

உக்ரேயினின் நடக்கும் எழுச்சியால் அதன் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அதன் நாணயப் பெறுமதி பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இரசியா தனது உக்ரேயினிற்கான கடன் பொதியை இடை நிறுத்தியது நிலமையை மேலும் மோசமாக்கியது. உக்ரேயினிற்கு பயணம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத் துறை ஆணையாளர் கத்தரின் அஸ்டன் ஐரோப்பாவும் அமெரிக்காவும் பன்னாட்டு நாணய நிதியமும் உக்ரேயினிற்கு என ஒரு பொருளாதாரப் பொதியை வழங்குவதாக உறுதி அளித்தார். ஆனாலும் உக்ரேயினின் உடனடித் தேவையை அது பூர்த்தி செய்யுமா என்பது ஐயமே. முன்பு ஒரு தடவை உக்ரேயின் அதிபர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதாகக் கூறிப் பின்னர் மனம் மாறி இரசியாவின் பொருளாதாரக் கூட்டமைப்பில் இணைய முயன்றதால் ஏமாற்றம் அடைந்த ஐரோப்பிய ஒன்றியம் இம்முறை கவனமாகக் காய்களை நகர்த்துகின்றது.

### ◆ உக்ரேயினிலும் 'வெள்ளை வான்'

உக்ரேயினிலும் குடிமக்கள் போல் உடையணிந்த பாதுகாப்புத் துறையினர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்வது, காணாமற் போகச் செய்வது பரவலாக நடக்கின்றது. இந்தக் கடத்தற்காரர்களை plain-clothed kidnappers என மக்கள் அழைக்கின்றனர்.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் உக்ரேயின் எதிர் கட்சியினருகு உதவி செய்தால் உக்ரேயினில் இப்போது நடந்து கொண்டிருக்கும் எழுச்சி பெரும் உள்நாட்டுப் போராக வெடிக்கலாம். அல்லது ஜோர்ஜியா நேட்டோப் படைத்துறைக் கூட்டமைப்பில் இணைய முயன்றபோது இரசியா 2008-ம் ஆண்டு அதை ஆக்கிரமித்தது போல உக்ரேயிலும் செய்யலாம்.

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..

உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna

• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for

• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics



LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

# சட்டன் தமிழ் பாடசாலையின் புத்தாண்டு விழா














## ஏய் மனிதா நில்லு... சொல்லு...

ஏய் மனிதா நில்லு
உலகம் படைச்சது
எதற்காக
நீ... உலோகம் கொண்டு
எல்லையிடவா..??!

ஏய் மனிதா சொல்லு
இவள் பிறந்தது எதற்காக
நீ.. கம்பி வேலியிட்டு
அடைத்து வைக்கவா..??!

ஏய் மனிதா சொல்லு
ஒற்றை மலலாவுக்கு
குண்டடி என்றதும்
பதறுவது எதற்காக..
நீ – இவளை
முட்கம்பியால் கட்டி
வைக்கவா...??!

ஏய் மனிதா சொல்லு
உன் குழந்தைக்கு
ஐபாட்டும்.. ரெடிபெயரும்
எதற்காக
நீ – இவள் போல்
எண்ணற்ற குஞ்சுகளை
வதைப்பதை
மறைக்கவா..??!

ஏய் மனிதா சொல்லு
யுனிசெப் என்ற ஒன்று
எதற்காக..
நீ – உள்வீட்டுப்
பிரச்சனைகளில் உளவு
பார்க்கவா..??!
ஏய் மனிதா சொல்லு
மனித உரிமைகள்
யாருக்காக..
நீ –வெள்ளைத்தோலால் உலகை
ஆள்வதற்கா..??!
ஏய் மனிதா சொல்லு..
இந்த வேசங்கள் எதற்காக
நீ – அழிவைத் தேடிச்
செல்வதாலா..??!

ஏய் மனிதா சொல்லு...
இந்தப் பிஞ்சின் கண்ணில்
கண்ணீர் எதற்காக
நீ... அவள் வலியில்
வாழ்வதற்காகவா..!

ஏய் மனிதா நில்லு..
உன்னிடம் ஆயுதம் எதற்காக..??!
உன் உரிமைக்காக.
அதுவே மற்றவரிடமும்.. அவர்
உரிமை காக்க.
நீ.. அதையே பயங்கரவாதமும்
ஆக்காதே.

ஏய் மனிதா நில்லு..
அடுத்தவனை திட்டுவது
எதற்காக..??!
நீ – முதலில் உன் செயல்
எண்ணிப்பார்...!!!!

ஏய் மனிதா நில்லு
இனியும் வேண்டாம் இந்த
வேற்றுமைகள்
நீ – ஒன்றில் திருந்து அல்லது
திருத்தப்படுவாய்...
கடவுளால் அல்ல இவள் போல்
சக மனிதனால்..!!!!

நெடுக்காலபோவான்
(யாழில்)






ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




# லண்டனில் நடைபெற்ற நில அபகரிப்பிற்கு எதிரான மாநாடு












பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட கடந்த அறுபத்தாறு ஆண்டுகளில் தமிழ் மக்களின் தாயக நிலப்பரப்பு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமும், நீர்ப்பாசன அபிவிருந்தித்திடடங்கள் என்ற போர்வையிலும் அபகரிக்கப்பட்டு வருகின்றது. போரின் முடிவிற்குப்பின்னர், இராணுவ முகாம்களின் விரிவாக்கம், இராணுவத்தினரின் குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டங்களை அமைத்தல் என முன்னெப்பொழுதிலும் இல்லாதளவு நிலப்பறிப்பு நடாத்தப்பட்டு வருகிறது. உலகின் மற்றைய நாடுகளில் நடைபெறும் நிலப்பறிப்புடன் இணைத்து இவ்விடயங்களை சர்வதேச சமூகத்தின் கவனத்தில் கொண்டுவரும் முகமாக பிரித்தானிய தமிழர் பேரவை, தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவினருடன் இணைந்து லண்டனில் மாநாடு ஒன்றை நடாத்தியிருந்தது. மாநாடும் மாநாட்டை ஒட்டிய கூட்டங்கள் என மூன்று தினங்களாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்திருந்த கல்வியாளர்கள், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் எனப்பலரும் பேரராளர்களாக கலந்து கொண்டார்கள்.

## முதலாம் நாள் நிகழ்வு

முதலாம் நாள் நிகழ்ச்சி பிரித்தானியப் பாராளுமன்ற வளாகத்தில் ஜனவரி 31ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமானது. பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களான சிவோன் மக்டொனா லீ ஸ்கொட் ஆகியோர் உரை நிகழ்த்தியதைத் தொர்ந்து இந்தியாவிலிருந்து வந்திருந்த சமுகப் போராளியான மேதா பட்கர் இலங்கையில் ஆரம்பம் முதல் தமிழர்கள் அனுபவித்து வரும் கொடுமைகள் மற்றும் அவர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டு தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து சுட்டிக்காட்டி தமது உரையை நிகழ்த்தினார். மேதா தமது உரையில் புத்த தர்மத்தையும் தர்மத்தின் ஊடான சமாதானத்தின் பாதையையும் மேற்கோள் காட்டியிருந்ததுடன் எவ்வாறாயினும் புத்த தர்மத்தை பின்பற்றும் இலங்கை அரசும் பெரும்பான்மை சமுகத்தினரும் அதன்படி ஒழுக தவறி விட்டதாகவும் குற்றம் சுமத்தினர்.

அடுத்ததாக Oakland Institute நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டால், மலேசியா பீனங் மாநில துணை முதல்வர் பேராசிரியர் ராமசாமி, இஸ்ரேலிய பேராசிரியர் Oren Yiftachel சிட்னி பல்கலைக்கழகத்தின் சமாதானக் கற்கை நெறிகளுக்கான இயக்குனர் பேராசிரியர் Jake Lynch, ஐ.நா. இன் துணைப் செயலாளராகக் பணியாற்றிய Denis Halliday, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறீதரன், அரிய நேந்திரன், நாகேஸ்வரன், நவசமசமாஜக் கட்சியின் உறுப்பினர் றனத் ஆகியோர் உரை நிகழ்த்தினர்

## இரண்டாம் நாள் நிகழ்வு

மறுநாள் பெப்பரவரி முதலாம் திகதிய நிகழ்வு துறைசார் வல்லுனர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வியாளர் மாநாடாக நடைபெற்றது. மூன்று அமர்வுகளாக நடைபெற்ற இவ்வுரைகளுக்கு முன்னதாக இளம் ஊடகவியலாளர் தமிழ் மகா பிரபாகரனால் தயாரிக்கப்பட்ட "This Land Belongs to Army" எனும் ஆவணப் படம் காண்பிக்கப்பட்டது. யுத்தத்திற்கு பிந்திய இன்றைய காலகட்டத்தில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் எவ்வாறு பேரினவாத அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டுள்ளன என்பதை காட்சிகள் சித்தரித்திருந்தன.

முதலமர்வினை பிரித்தானிய தமிழர் பேரவையின் செயற்குழு உறுப்பினர் இராஜ்குமார் நெறிப்படுத்தினார். இஸ்ரேலியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் Oren Yiftachel அவர்களது முதன்மை உரையுடன் ஆரம்பமானது. நில உரிமைத்துவம் மற்றும் மனித உரிமை சார்ந்த விடயங்கள் குறித்து தெளிவுபடுத்தினார் குறிப்பாக இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் நில அபகரிப்பின் ஊடாக தமிழர்களது உரிமைகள் எவ்வாறு மீறப்படுகின்றன அவற்றிற்கு தீர்வு காணும் வகையில் அல்லது தடுக்கும் வகையில் சர்வதேச சமுகத்துடன் இணைந்து எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பது குறித்தும் தெளிவுபடுத்தினார்.

சர்வதேச தரத்திலான தரவுகள் சட்டம் மற்றும் கோட்பாடு ஆகியவற்றை ஒப்பிட்டு இலங்கை விடயத்தில் எவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் போன்றவற்றையும் அறிவுறுத்தினார். சேபியா, ஈரான், எஸ்தோனியா, சூடான் மலேசியா துருக்கி இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகளில் மக்கள் எதிர் கொண்டிருந்த இவ்வாறான பிரச்சினைகளை உதாரணமாக எடுத்துரைத்து இதன் மூலம் பாதிக்கப்படும் தமிழ் தாயக மக்களை எவ்வாறு காப்பாற்ற முடியும் அல்லது நீதியை பெற்றுக் கொடுக்க முடியும் என்பது குறித்தும் அவர் பரிசீலித்தார். பேராசிரியர் Jochen Hippler சிங்கப்பூர் பல்கலைக்கழகப் பேராசிரியர் Shapan Adnan மற்றும் லண்டன் பொருண்மியக் கல்லூரி பேராசிரியர் David Rampton ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இரண்டாவது அமர்வினை செல்வி கிறிஸ்ரினா வில்லியம்ஸ் நெறிப்படுத்தினார். முதன்மை உரையினை பேராசிரியர் ஜேக் லிஞ்ச் தமிழர் உரிமைகளுக்கு ஆதரவான குரல் மற்றும் சுதந்திரம் என்ற தலைப்பில் நிகழ்த்தினார். 21 ஆம் நூற்றாண்டில் இலங்கை அதிபர் மகிந்த யுத்த குற்றவாளியாக இனங்காணப் படுவாரா? என ஆரம்பித்தது. இறுதி யுத்தத்தின் போது யுத்தக் குற்ற செயல்களில் ஈடுபட்டமைக்கு சான்றான ஆதாரங்களாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரக இரகசிய தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்த ஆவணத்தின் மூலம் பெயர்த் தெடுக்கப்பட்டதுடன் 2011 இல் ஐநா அதிகாரிகளின் அறிக்கையில் பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட்டிருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே பெருந்திரளாக மக்களை கொன்று குவிப்பதற்கு காரணம் என்ன என வினா தொடுத்த அவர். சர்வதேச ரீதியாக இடம் பெற்ற முந்தைய உதாரணங்களை ஒருங்கிணைத்து விளக்கமளித்தார். இந்த நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை சர்வதேச ஆர்வலர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டு அவர்களது கவனத்தையும் ஈர்த்துள்ளது என குறிப்பிட்டார்.

இவரது உரையைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் நில ஆணையாளர் திரு குருநாதன், பேராசிரியர் ராமசாமி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தனதுரையில் நில உரிமைகளுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அவை காலத்தை வீணடிக்கும் செயலாகவே உள்ளன என சுட்டிக்காடடினார்.

இறுதியமர்வினை ஊடகவியலாளர் நிர்மானுசன் பாலசுந்தரம் நெறிப்படுத்தினார்.

Oakland Institute ஐ சேர்ந்த அனுராதா மிற்றல் முதன்மைப் பேச்சாளராக உரை நிகழ்த்தினார். யாழ்ப்பலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன் குமாரவடிவேல் காணொளி மூலமாக உரையாற்றினார்.

ஜெர்மனியில் நடைபெற்ற மக்கள் தீர்ப்பாயத்தின் தலைவராகக் கடைமையாற்றிய Denis Halliday மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## மூன்றாம் நாள் நிகழ்வு

மூன்றாம் நாள் நிகழ்ச்சி ஹரோவில் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper

**Challenger Services** | **Group Holiday and Tour Service**
**Tours for 2014**

April 19th 2014
Bulb Fields Holland Two Nights £255.00

May 2014 £60.00
one day trip to Benneux, Belgium (24th to 26th )

May 2014
three days Two nights Landsend, cornwall outing Two nights half board £260.00

9th June 2014 : China
சீனா, பேஜிங் (உலக அதிசய சீனப் பெருஞ்சுவர்) சியோன்

July 2014:- 24th - 29th Lourdes (£280) BY Coach
லூர்த்து மாதா யாத்திரை

Sep 2014:- 7th - 10th Lourdes (£360) (BY AIR)
லூர்த்து மாதா யாத்திரை

March 2014 - £1999.00
Bangkok ,Chaing Mai, Malayasi & Bali

September 19th 2014
North India (£1450)Varnasi
வட இந்திய காசி யாத்திரை டெல்லி, ஹரித்துா, ரிசிகேஸ், காசி விஸ்வநாதன், தாஸ்மஹால், ஜெய்ப்பூர் அரண்மனைகள்

Sep/Nov2014
Main Jothylinga Program 18 Days £2450.00
முக்கிய 12 ஜோதிலிங்க யாத்திரை

March 2014:- Vietnam
Vietnam,Cambodia & YANGON (£2399.00)

A.E.Joseph 62, Canadian Avenue, Catford, London, SE6 3BP.
Tel/Fax: 020 8697 1608 Mobile: 07940782282 Email: aejoseph90@hotmail.com

**குழந்தை பராமரிப்பாளர் தேவை**

Little Chalfont, Buckinghamshire இல்
வீட்டு வேலை செய்யக்
கூடியவராகவும், குழந்தைகளை
(18 மாதம் மற்றும் 3 வயது)
பராமரிப்பதற்கும் உதவியாளர் தேவை



Interested Candidates please send their details to
lanifer_17@yahoo.de

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேசக் கூடியவராக இருக்கவேண்டும்

**Contact Tel - 07818505502**

# சிறிலங்காவின் சுதந்திரமும் நாமும்

**பாகம் 147**

சிறீலங்கா தனது 66வது சுதந்திர தினத்தை பெப்ரவரி 4ம் திகதி கொண்டாடியது. இனப்படுகொலைக்காளான தனது சொந்தங்களை நினைந்து வேதனையில் தமிழீழத் தாயக மக்கள் ஐநாவிடம் நீதிகேட்டுக் கதறும் வேளையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுமாறு வலுக்கட்டாயப்படுத்தப் படுகின்றனர். **முன்னேயிருக்கும் சிறுபான்மை மக்களை மிரட்டுகின்ற பாவனையில் வாளேந்திய சிங்கம் நிற்கும் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தித் தலைவணங்கி நிற்கவேண்டுமென்று இலங்கைத் தீவிலுள்ள சிறுபான்மையினர் கட்டாயப் படுத்தப்படுகின்றனர்.** சுதந்திர தினத்தின் போது தமிழர்தாயகமெங்கும் ஆயுதப்படைகளின் ரோந்தும் அடக்குமுறையும் முடுக்கிவிடப்பட்டுச் சுதந்திரதினத்தை அனைவரும் கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டுள்ளனர். இவ்வளவுபலாத்காரமாக எந்த நாட்டிலும் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் திணிக்கப்படுவதில்லை. சிறீலங்கா வெட்கங்கெட்ட தனமாக அதைச் செய்கிறது.

## சுதந்திரதினத்தைக் கொண்டாட விருப்பமின்றி, அதனை ஜனநாயக ரீதியில் பகிஷ்கரிப்பதைத் தவறென்றுகூற எந்த நீதிமானுக்கும் உரிமையில்லை.

உண்மையில் சுதந்திரதினமென்றாலென்ன? அந்நிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டவோர் தேசத்தின் மக்கள் தங்களுக்குக் கிடைத்த சுயாட்சியுரிமையை மகிழ்வோடு நினைவு கூரும் தினம் அது. நாம் அதை மகிழ்வோடு கொண்டாடுகிறோமா? இல்லவேயில்லை. மனவெறுப்போடு எம்மை ஆளும் பெரும்பான்மையினரின் இம்சை தாங்கமுடியாமல் தேசியக்கொடி ஏற்றுகிறோம், கொண்டாடுவதுபோலப் பாசாங்கு செய்கிறோம். அரசாங்கத்துடன் அல்லது ஆயுதப் படைகளுடன் ஒத்துழைத்துக்கொண்டு தமது சுயநலன்களுக்காக எம்மினத்தைக் காட்டிக்கொடுக்கும் கோடரிக்காம்புகளின் மனச்சாட்சிகூட நாம் சுதந்திரம் மறுக்கப்பட்டு அடக்கப்பட்ட இனத்தினர் என்பதை உள்ளூர ஏற்றுக்கொள்ளும்.

**சுதந்திரம் ஒருவரது பிறப்புரிமை அதேபோல நாம் சுதந்திரமாக இருக்கிறோமா இல்லையா என்பதை முடிவுசெய்யும் பொறுப்பும் எமது பிறப்புரிமை. வேறுயாரும் வந்து நீங்கள் சுதந்திரமாக வாழ்கிறீர்களென்று எமக்குச் சொல்லித்தர முடியாது.** பொற்கூண்டிற்குள் கிளியை அடைத்து அதற்குப் சுவைமிக்க பழங்களையும், விதைகளையும் ஊட்டினாலும் அது வானத்தை அண்ணாந்து பார்த்து அங்கே சுதந்திரமாகப் பறக்கும் தன் இனத்தவரிடம் தனது பரிதாபநிலையை கீ கீயென்று முறையிட்டுக் கொண்டுதானிருக்கும். ஐந்தறிவும் முழுமையாக இல்லாத ஜந்துக்களுக்கே அப்படியோர் விடுதலைத்தாகம் இருக்கும்போது ஆறறிவு ஜீவன்களான மனிதர்களுக்கு அந்த வேட்கை எவ்வளவு இருக்கும்?

சுதந்திரம் பெற்ற ஒருநாட்டின் தேசிய சிறுபான்மை இனத்தின் மீது இனக்கொலை முயற்சி மேற் கொள்ளப்படுவதில்லை, துப்பாக்கிகள் குறிவைக்கப்படுவதில்லை. அரசை ஆதரிக்கும் பேரினவாத வெறியர்களின் மிரட்டல் திணிக்கப்படுவதில்லை. தேசிய இனங்கள் வாழும் பிரதேசங்களில் பலாத்கார குடியேற்றங்கள் நடைபெறுவதில்லை. இரவும் பகலும் இராணுவரோந்து ஊர்களெங்கும் நடைபெறுவதில்லை. வக்கிர புத்தி கொண்ட ஆயுதப் படையினர் ஆண்களில்லாத வீட்டுக்கதவுகளைக் காம நோக்கத்தில் தட்டுவதில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் நிர்வாக செயற்பாடுகள் முடக்கப்படுவதில்லை. இவையெல்லாம் எங்கள் தாயகப் பிரதேசங்களில் நடைபெறும்போது எப்படி நாம் சுதந்திரத்தை அனுபவிக்கிறோமென்று கூறமுடியும்? எமது மக்கள் சுதந்திரதினத்தைக் கொண்டாட வேண்டுமென்று பெரும்பான்மைச் சமூகம் எப்படி எதிர்பார்க்கமுடியும்.

துரதிஸ்ட வசமாக இலங்கையென்னும் சிறு தீவில் தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டுமென்னும் மனச்சாட்சியின் புரிதலோடு பெரும்பான்மையினர் யாரும் செயற்படுவதாகத் தெரியவில்லை. ஏன் தமிழர்கள் சுதந்திரம் பெற்றவர்களாகத் தம்மைக் கருத வேண்டுமென்பதற்குச் சரியான காரணங்களைச் சொல்வதற்கு யாருமில்லை. சிங்கள பௌத்த, கிறிஸ்தவமதகுருமார்களாற்கூட தமிழ் மக்களையணுகி அவர்களைத் தம்வசப்படுத்த முடியவில்லை. அவர்கள் எதைச் சொல்லித் தமிழர்களைச் சாந்தப்படுத்த முடியும்? அவர்களால் கூறக்கூடியது ஒன்றேயோன்றுதான். அது: “இதுவோர் 80வீதம் சிங்களப் பெரும்பான்மையினரைக் கொண்ட பௌத்த சிங்கள நாடு ஆகவே சிறுபான்மையினர் அனைவரும் சிங்களவர்களின் ஆளுகைக்குட்பட்டு அவர்கள் தரும் சலுகைகளை அல்லது பிச்சையை வாங்கிக்கொண்டு பேசாமலிருங்கள். நீங்கள் எல்லோரும் சுதந்திரம் பெற்றவர்களாக எண்ணிக்கொண்டு அல்லது கற்பனை பண்ணிக் கொண்டு எங்களோடு சேர்ந்து சுதந்திர தினத்தைக் கொண்டாடுங்கள்.” என்பதைத் தவிர வேறு எதுவாக இருக்கமுடியும்?

**உண்மையில் சமய சமூக ரீதியில் மதிக்கப்படும் பெரும்பான்மையினப் பெரிய மனிதர்கள் தேசிய இனச் சமூகங்களின் விரக்தியைச் சரியாகப் புரிந்துகொண்டு, அச்சமூகங்கள் திருப்தியடையத்தக்கவோர் சூழல் ஏற்படும்வரை அவர்களைச் சுதந்திரதினத்தைக் கொண்டாடுமாறு ஆயுதமுனையில் வற்புறுத்தாதீர்களென்று அரசுக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும். அதுதான் உண்மையான தர்மம்.** விருப்பபட்டாத ஒரு விடயத்தைக் கொண்டாடுமாறு வற்புறுத்துவதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பது அவர்களின் ஒருபக்கச் சார்பான நீதியற்ற நிலைப்பாட்டையே காட்டுகின்றது.

இலங்கையில் ஆயுதப்போரொன்று நடைபெற்றபோது அதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சமயத் தலைவர்கள் விரும்பியதில் தவறில்லை. நாட்டைப் பிளவுபடுத்தக்கூடாது என்று விரும்புவதிலும் தவறில்லை. ஆனால், **தமிழ்மக்கள் தங்களுக்கு உரியசுதந்திரம் கிடைக்கவில்லையென்று சுதந்திரதினத்தைக் கொண்டாட விருப்பமின்றி, அதனை ஜனநாயக ரீதியில் பகிஷ்கரிப்பதைத் தவறென்றுகூற எந்த நீதிமானுக்கும் உரிமையில்லை.**

யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட முப்பதினாயிரத்திற்கும் அதிகமான படையினரின் பிரசன்னத்தோடு சுதந்திரதினத்தை வலுக்கட்டாயமாகக் கொண்டாடியிருப்பது நாட்டிற்கே அவமானகரமான செயலாகும். ஒருநாட்டின் சுதந்திர தினத்தில் முப்படைகளின் அணிவகுப்பும் நடைபெறுவது ஒன்றும் புதிய விடயமல்ல ஆனால் **மக்களின் முழுமையான பங்களிப்பும் மகிழ்ச்சி ஆரவாரமுமின்றி வெறுமனே துப்பாக்கி முனையில் சுதந்திரதினம் கொண்டாடப்படுவது வெட்கக்கேடு.** மக்கள் இராணுவ நெருக்குவாரமின்றி சுதந்திரமாக விடப்பட்டால் யாழப்பாணமெங்கும் தேசியக்கொடிகளுக்குப் பதிலாகக் கறுப்புக்கொடிகளும் தேசிய கீதத்திற்குப்பதிலாகச் சோககீதங்களும்தான் ஒலித்திருக்கும். அத்தகைய அவலச்சூழலில் யாழ் மக்களையும் பிரதேசத்தையும் வைத்துக்கொண்டு அவர்களின் வெறுப்பின் மத்தியில் ஓர் சுதந்திர தினக்கொண்டாட்டம் அரசுக்குத் தேவையா?

எதைச்சொல்லி தமிழர்களாகிய நாம் சுதந்திர தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவது? நமக்கு என்ன கிடைத்ததென்று பெருமைப் படுவது? சர்வசன வாக்கெடுப்பு முறையினால் 80 வீதப் பெரும்பான்மையினரிடம் 20 வீதச் சிறுபான்மையினரை ஒப்புக்கொடுத்த சோல்பரி ஆணைக்குழு 1948 இல் சுதந்திரத்தை எமக்கு வழங்கியபோது சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக விட்டுச்சென்றது அப்போதைய அரசியல் அமைப்பின் 29 வது சரத்தாக எஞ்சியிருந்த பிரித்தானிய மகாராணியின் தலைமையிலான பிரிவிக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் முறைமையைத்தான். அந்தச் சலுகையும் பின்னர் பதவிக்கு வந்த சிறீமா அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் அகற்றப்பட்டது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அதற்குமுன்னர் இனரீதியாகச் சிறுபான்மையினருக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டால் இங்கிலாந்திடம் முறையிட்டு நீதி தேடக்கூடிய வழியொன்று இருந்தது. அந்த வழியும் எண்பது வீத பெரும்பான்மைச் சமூகத்தின் வாக்குப் பலத்தினால் அடைக்கப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்காக திருகோணமலையைச் சேர்ந்த கோடீஸ்வரன் என்னும் தமிழ் அரச அலுவலர் பிரிவிக் கவுன்ஸிலுக்குச் செய்த மேன்முறையீடு வெற்றிபெற்றதால் ஆத்திரமுற்ற பெரும்பான்மையினரும், அக்காலத்தில் ஆட்சிபுரிந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசும், கம்யூனிஸ்டுகள், சமசமாஜிகள் போன்ற இடதுசாரிகளையும் துணைக்கழைத்துக்கொண்டு தமிழர்களுக்குச் செய்த அநீதியினால் எமக்கிருந்த எல்லா நீதிக்கான வழிகளும் அடைக்கப்பட்டுச் சிறிலங்கா சோசலிசக் குடியரசு என்னும் சிறையில் நாம் நிரந்தரக் கைதிகளாய் வாழவேண்டியதாயிற்று. **இருந்த கொஞ்சநஞ்ச சுதந்திரமும் பறிபோய்விட்ட அந்தக் காலத்திற்தான் தந்தை செல்வா என்னும் அரசியற் தீர்க்கதரிசி “இனிமேல் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.’ என்ற வரலாற்றில் பதியப்பட்ட வார்த்தையை உதிர்த்தார்.**

அதுவரை சுதந்திர தினத்தைப் பெரிதாக மனமுவந்து கொண்டாடாவிட்டாலும் மனம் வெறுத்து நாம் ஒதுக்கவில்லை. சுதந்திரம் தான் போனது பரவாயில்லை. நாட்டில் நீதித்துறையாவது இருக்கிறது, அதுவாவது நம்மைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையும், பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் என்ற அரசின் அநீதியினால் துடைத்தெறியப்பட்டது. முற்றாகக் கைவிடப்பட்டு அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டபோது அடிமடியில் கைவைப்பதைப்போல எமது கல்வியையும் சிதைக்க முற்பட்ட பிற்பாடு தான் இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கினார்கள்.

## முன்னேயிருக்கும் சிறுபான்மை மக்களை மிரட்டுகின்ற பாவனையில் வாளேந்திய சிங்கம் நிற்கும் தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தித் தலைவணங்கி நிற்கவேண்டுமென்று இலங்கைத் தீவிலுள்ள சிறுபான்மையினர் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

இன்றுவரை வெள்ளைக்காரர்களிடம் நாமிழந்த சுதந்திரம் நமது கைக்குக் கிட்டவில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எமது நிலத்தில் எமது அரச தலைமைகளின் ஆட்சியில் சுதந்திரமானவர்களாக வாழ்ந்த நாம் 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியர் எம் தாய்நிலத்தைக் கைப்பற்றி ஆளத் தொடங்கியபிறகு ஆளப்படும் அடிமைகளானோம். அந்த அடிமை வாழ்வு இன்றுவரை தொடர்கின்றது.

*என்றெமக்கு வாழ்வு வரும்?*

*எப்போது தாயகத்தை வென்றெடுப்போம்?*

*எங்கள் விடுதலையில் நாம் மகிழ்வோம்?*

*துப்பாக்கி காட்டிச் சுதந்திரத்தைக்*
*கொண்டாட*

*முப்படைகள் நின்று முறைப்போடு*
*வற்புறுத்தல்*

*எப்போது நீங்கும் எமது மனம் மகிழ்வில்*

*நாமும் சுயாதீன நாடொன்றின் புத்திரர்கள்*

*தாமென்றகந்தையொடு தாரணியில்*
*கோஷமிட*

*ஆமென்றுலகமதை அங்கீகரிக்கின்ற*

*காலம் வந்தாலொழியக் கனக்கின்ற*
*எம்நெஞ்சின்*

*ஓலம் ஒழிந்திடுமா?*

*உள்வெதும்பல் தீர்ந்திடுமா?*

தொடருவம்...

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates’ & Crown Court Representation

**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

**அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்**

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418



Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# இரவல் திருமணம்

- பசுந்திரா சசி

எனக்கு வீதியால் நடந்து போகும் போது செருப்பு அறுந்தால் - அதைப் போல ஒரு வெட்கக்கேடு இல்லை. அறுந்த செருப்ப தூக்கி பார்க்க வெக்கம், ஒரு செருப்போட நடக்க வெக்கம், இரண்டு செருப்பையும் விட்டுப் போட்டு நடக்கவும் வெட்கம், இவ்வளவு ஏன் குனிந்து செருப்பை பார்க்கவே வெக்கம், போன் பண்ணி அம்மாவை புதுச் செருப்பு வேண்டி வரச் சொல்லி போட்ட பின்புதான் அவ் இடத்தை விட்டு நகர்வேன். இதை பெண்மையின் சிறப்பு என்றனர் பலர். எனக்கு இது ஒரு பருப்பாகவும் தெரியவில்லை. ஆனாலும் வெக்கத்தை விட முடியவில்லை. இப்படிப்பட்ட நான் ஒருநாள் பிச்சைக்காரர்களின் திருமணத்திற்கு போக வேண்டிய நிலை வந்து விட்டது.

♦ ♦ ♦ ♦

அம்மா ஒரு திருமணத்திற்கு போக வேண்டும் என்றால் முதல் வாரமே ஆயத்தம் செய்ய ஆரம்பித்து விடுவார். சங்கிலி காப்பில் இருந்து பூ பொட்டு வரை மிக நுணுக்கமாக அவதானித்து ஆயத்தம் செய்வார். ஒரு நகை காணாது என்றால் இரவு இரவா போய் -நண்பர்கள், உறவினர்களிடம் இரவல் வேண்டி வந்து விடுவார். “ஏனம்மா இரவு இரவா இரவல் வேண்டித் திரியிறாய்? ” என்றால் . “இரவில வேண்டினால் தான் அது இரவல்” என்று பதிலும் வைத்திருப்பார். - பகல்ல வேண்டினா நாலு பேருக்கு தெரிஞ்சுபோகும் என்பதற்கான பம்மாத்து பதில் அது. நான் இலகுவில் அவாவ வெல்ல விட மாட்டன் . “அது எப்படி ... இரவில வேண்டினா இரவல். அப்ப பகல்ல வேண்டினா ‘பரவல்’ ஆ ?” என்பேன் . “பரவலா தெரியும் என்றதால அது பரவல் என்றும் அழைக்கப்படும். ‘இரவல்’ இதை பிரிச்சா - இரவு-அல். அல் என்றால் என்ன ?” என்று என்னையே கேட்டுவிட்டார் . பாடப்புத்தகத்தில படிச்சது ஞாபகம் வந்தது ‘அல்’ லும் பகலும் தண்ணீர் ஊற்றி ஐயா வளர்த்த தென்னை, ஆடு மாடு திரத்தி எண்கள் அம்மா வளர்த்த தென்னை... “அல் என்றாலும் இரவு என்றேன். அப்ப -இரவல - பிரிச்சா இரவு இரவு என்று இரு முறை வருதா இல்லையா ?” என்றார் அம்மா . சரியாப்போச்சு போ.. எனக்கு இருந்த கொஞ்ச நஞ்ச அறிவும் கலங்கி போயிற்று . “நீ சாமம் சாமமாய் திருஞ்சு சாவலும் வேண்டித் திரி ஆளை விடு” என இருந்து விடுவேன். அம்மா இப்படி குண்டக்க மண்டக்க விளக்கம் நிறைய வச்சிருக்கிறா. அதால தான் சனம் இவாவ நம்பி நகை அடைவு பிடிக்குதுகள். ஆனாலும் சும்மா சொல்லக்கூடாது சீமாட்டி வெளிக்கிட்டு வீதிக்கு வந்தால் வீதி தக தகக்கும் அத்தனை அழகாய் இருப்பார். ஏறக்குறைய நானும் அவாட மகள் மாதிரித்தான் நடை உடை பாவனையில் மாறிக்கொண்டிருந்தேன்.

“நாளைக்கு சுன்னாகத்தில் ஒரு வெளிநாட்டு கலியாண வீடு உன்னையும் வரச்சொன்னதுகள்” என்று அம்மா காலையில் சொன்னதில் இருந்து எனக்கும் ஒரே குழப்பம் . எதைப் போடுவது எதை தவிர்ப்பது என்ற போராட்டம் மாலை வரை நீடித்தது. ஒரு தருணத்தில் “இரண்டு சட்டை போடக் கூடிய மாதிரி இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்” என எண்ண தலைப்பட்டேன். இறுதியில் எந்த முடிவும் எடுக்காமல் தூங்கிவிட்டேன்.

அம்மாவின் ஒப்பாரி அலறலாய் காதில் விழுந்தது. “அலுமாரிக்குள்ள இருந்த நகை நட்டு ஒன்றையும் காணவில்லை யாரோ கதவுப் பூட்டை உடைச்சு எடுத்துக்கொண்டு போய்விட்டாங்கள்” என கதறிக் கொண்டு இருந்தார். “என்ர நகை எண்டால் பறவாய் இல்லை . அடைவு பிடிச்ச நகையும் போய் , நாளைக்கு கலியாணத்திற்கு எண்டு வேண்டின இரவல் நகையும் போயிற்று. படுபாவியள் காசு, நகை எண்டு ஒண்டையும் விட்டு வைக்க இல்ல” என தலையில் அடித்துக்கொண்டு ஓலமிட்டார். நானும் வெளிச்சம் புக முடியாத இருட்டு ஒன்றுக்குள் எதிர்காலம் இழுபட்டுக்கொண்டு போவதை உணர்ந்தேன். ஆனாலும் அதை காட்டிக்கொள்ளாமல் அம்மாவை தேற்றி சமாதானம் செய்தேன்.

அப்பா விபத்தில் இறந்ததால் கொடுத்த காப்புறுதிக் காசை - அம்மா வட்டிக்கு கொடுத்து காசுப்பெறுமதிக்கு மேலாக பொறுப்பு நகை வேண்டி அலுமாரியில் வைத்திருந்தார். அது போக அக்கம் பக்கம் முதற்கொண்டு அம்மாவிடம் நகை அடைவு வைத்து இருக்கிறார்கள். போதாக்குறைக்கு இந்த அம்மா மனிசி அயல் அட்டையில் இருந்தும் இரவல் வேண்டி கள்ளனிட்ட குடுத்திட்டு இருக்கு . விசயம் தெரிந்தால் காலையில் வீட்டை முற்றுகையிட்டு உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள். சொந்த காணி பூமியும் இல்லை. எனக்கு இப்பதான் 15 வயது இன்னமும் பத்தாம் ஆண்டு பரீட்சை கூட எழுதவில்லை எங்கே போய் என்ன வேலை தேடுவது. என்னால் எதிர்காலத்தை ஏன் நாளையை கூட நினைத்துப்பார்க்க முடியவில்லை. சல்லிக்காசு விடாமல் திருடர்கள் வருடி இருந்தார்கள். கையில காதில இருந்ததுகளையும் களட்டி நாளைய கலியாணத்திற்காக கழுவி மினுக்கிபோட்டு இரவே அலுமாரியில வைச்சதால அதுகளும் போச்சு. நாளைக்கு வேற முதலாம் திகதி வீட்டு வாடகை கொடுக்கவும் காசு இல்லை.

அம்மாவின் அழுகை நியாயமானது ஆனாலும் அழுது என்ன பலன்? ஒன்றில் இருவரும் தூக்குப் போட வேண்டும் அதுவும் விடியமுன் இல்லையேல் ஊரை விட்டு இரவோடு இரவாக எங்காவது கண்காணா தேசத்திற்கு ஓட வேண்டும்.

அம்மாவை சமாதானமாக்கி என் யோசனையை சொன்னேன். இரண்டாவது யோசனைக்கு உடன் பட்டார். இரவோடு இரவாக ஊரை விட்டு கிளம்பினோம். எங்கே போவது என்று தெரியவில்லை. ஆனால் இங்கிருந்து போயாக வேண்டும். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இரவு மூன்று மணிக்கு ஒரு பஸ் கொழும்புக்கு புறப்படத் தயாராக நின்றது. என் கொம்பாசுக்க இருந்த காசில் “அனுராதபுரம் வரையே போக முடியும் 50-ரூபா மிச்சம் வரும்” என பஸ் நடத்துனர் சொன்னார்.

காலை அனுராதபுரம் வந்து சேர்ந்தோம். அனுராதபுரம் பெரிய நகரம் தப்பித்தவறி யாராவது தெரிந்தவர்கள் கண்ணில் பட வாய்ப்பு உள்ளது என்று என்மனம் சொன்னது . அங்கிருந்தும் எங்காவது செல்லவேண்டும் என சிந்தித்தபோது ‘கெக்கராவ’ என்ற பெயர் பலகையோடு ஒரு பஸ் புறப்படத்தயாராக நின்றது . முதல் முதலாக அப்போதுதான் அந்த ஊரின் பெயரையே தெரிந்துகொண்டேன் . அதில் ஏறிக்கொண்டோம். நாங்கள் போகவேண்டிய திருமண வீட்டின் தாலி கட்டும் மூகூர்த்தம் நெருக்கிக் கொண்டிருந்தது. நாம் கெக்கிராவ கிராமத்தின் பஸ் நிலையத்தில் நின்றோம். இனிப் போக மனமும் இல்ல பணமும் இல்லை .

இரண்டு நாட்கள் இறுகிய முகத்துடன் குளறிய வயிற்றுடன் அந்த கெக்கராவ பஸ் நிலையத்தை சுற்றி சுற்றி வந்தோம். இரவும் சில பிரயாணிகள் வண்டிக்காக காத்திருந்ததால் எங்களையும் பிரயாணிகள் என்றே நம்பினார்கள். பிச்சைக்காரர்கள் எம்மை சுற்றிச் சுற்றி வந்து கை நீட்டினார்கள். பின் ஒரே நபரிடம் மீண்டும், மீண்டும் நீட்டுவதாக எண்ணி விலத்தி நடந்தார்கள். சிலர் பழக்கமாகினார்கள். நாம் இரண்டு நாட்களாக சாப்பிடவில்லை என்பதும் எங்கும் போகாமல் ஒவ்வொரு மூலையில் குந்திக் குந்தி எழும்புவதையும் அவதானித்து விட்டு பிச்சைக்காரர்களே பிச்சை போட முன் வந்தார்கள். அம்மாவின் உதட்டில் அழகை அதிகரித்து குறைந்தது. இன்னும் அவரை அழவும் சூழ்நிலை அனுமதித்திருக்கவில்லை. அழுவதற்கும் சிரிப்பதற்கும் நாலு பேர் தேவையாய் இருக்கிறதே. இங்கு யாரவது செத்தால்தான் அவரால் தன் சோகத்தையும் அழுது தீர்க்க முடியும். மனம் விட்டு எதையும் பேசவும் முடியாமல் இருந்தார். விருப்புக்கும் வெறுப்புக்கும் சிறு இடைவெளியே இருக்கின்றது என்பது போல் வாழ்வில் உயர்வுக்கும் தாழ்வுக்கும் கூட சிறு நூல் இடைவெளியே என்பதை நான் கண்டு கொண்டேன். அம்மாவால் அதை ஜீரணிக்க முடியவில்லை. தற்கொலை செய்ய வேண்டாம் எப்படியாவது பிழைத்துக் கொள்ளலாம் என்று கூறியவரும் அவரே. ஆனாலும் ஏனோ இன்னமும் அந்த யாழ் நல்லூரடி வாடகை வீட்டில் இருந்து அவரால் வெளிவர முடியாமல் இருந்தது. இப்படி 15 வயது பெண் பிள்ளையை நடுத் தெருவில் கொண்டு வந்து விட்டோமே -என என்னைப் பார்க்க பார்க்கவே - அம்மாவுக்கு வேதனை அதிகரித்தது.

கூடப்பிறந்த வயிற்றின் கொடும் பசியால் இரண்டு நாட்கள் பிச்சைக்காரர் தயவில் வயிறு கழுவினோம். இறுதியில் அவர்களாகவே எமக்கு ஒரு இடத்தை ஒதுக்கி அமரவைத்து. “நீங்கள் ஒன்றும் கேட்கத் தேவை இல்லை இந்த தட்டை உங்கள் முன் வைத்து கொண்டு இருக்க வேண்டும். தட்டை வெறுமையாக வைத்திருக்கக் கூடாது.” என ஏடு தொடக்குவது போல் முதல் இரு சில்லறைக் குற்றிகளை போட்டு தொழிலை ஆரம்பித்து வைத்தார்கள். அவர்களின் கைராசி அன்றே எங்களது வயிற்றை தேற்றக்கூடிய காசு கிடைத்தது. வேறு என்ன வேண்டும். அம்மா என்னை அந்த நிலையில் பார்க்க முடியாமல் மறைவாக முடக்கில் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டார். இரவும் பகலும் அந்த இடமே எழும்பிப் போக எந்தக் தேவையும் இல்லை . மழை வந்தால் மட்டும் - பாலத்தின் கீழ் , கடையோர தாவாரம் , அடுக்குமாடிக் கடைகளின் படி , ஓய்வெடுக்கும் பஸ் வண்டிகள் - என ஒதுங்கிக் கொள்வோம். சிலசமயங்களில்? “ஓடு, வெளிய போ, பிச்சைக்கார நாய்கள் ” என உதறியும் கலைக்கப்படுவோம். எதையும் கண்டுகொள்ளக்கூடாது . அழுவது போல் நடிக்க வேண்டும் நிஜத்தில் அழுவதை நினைத்தும் பார்க்கக்கூடாது. இரங்க வைக்க வேண்டும் ஏங்கக்கூடாது. உடுப்பு ஊத்தையாக நிறம் மங்க மங்க எங்கள் தட்டு கனத்தது. இரக்கவாளிகளால் மட்டுமே வயிறு நிரம்பியது. ஆனால் மறு பக்கத்திலோ எம்மை கீழ்தரமானவர்கள் என்ற பலர் எங்களின் நிலைக்கு வந்து விடக்கூடாது என ? இரக்கமில்லாதவர்களாகவும் , இரக்கமில்லாதவர்களிடம் வேலை செய்து கை ஏந்தி புளுங்கிப் புளுங்கி காலத்தை தள்ளிக் கொண்டு இருந்தார்கள். இருந்தும் சிலர் எம்மை விட மோசமான நிலையில் இருந்தார்கள். அவர்களைப்பற்றி ஆங்காங்கே தற்கொலை என்று செய்திகள் மட்டும் தலையங்கங்களாக வந்துகொண்டிருந்தன. இன்னும் சிலர் உடலை விற்று வயிறு வளர்த்தார்கள். என்னையும் அம்மாவையும் கூட தங்களுடன் சேர்ந்து கொள்ளுமாறு அழைத்தார்கள். பின் தங்கள் பிழைப்பை விட இதுவே மேலானது என்று விட்டு விட்டார்கள்.

வீடு, பாடசாலை, உணவு, உறக்கம் என்று இருக்கும் வரை இந்த உலகம் எங்கே மறைந்திருந்தது என வியப்பாக இருந்தது எனக்கு. இப்போதுதான் உண்மையான மனித நடமாட்டத்தின் சத்தங்களில் உள்ள ஊனக்கால்கள் தெரிகிறது. ஒரு வேளை அப்பா இறந்தபோது அந்த காப்புறுதிப் பணம் வந்திரா விட்டா இந்த வாழ்வை நாம் என்றோ ஆரம்பித்திருப்போம். இன்று அந்த கொள்ளையர்களால இது கைவரப்பொற்றிருக்கிறது. “ஒருகணம்...,ஒரேஒருகணம்.., அட நாம் இப்படி திருடினால் விதவைப் பெண்ணும், விடலைப்பொண்ணும் சோற்றுக்கு என்ன செய்வார்கள் ?... எங்கே போய் மானத்தை மறைப்பார்கள்?. என்று யோசனை செய்திருந்தால். அவர்களால் இந்த காரியத்தை செய்திருக்க முடியுமா ? எம்மை கொன்று விட்டாவது எடுத்துக்கொண்டு போக்ககூடாதா ” என அம்மா ஒப்பாரி வைத்து....

- தொடர்ச்சி 28ம் பக்கம்

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# சட்டம்பியாரும் சரவணமுத்து மாமாவும்

போராட்ட காலம் முன்வரை கிராமிய மணம் அப்பிக் கிடந்தது நான் பிறந்த பன்னாலையூரும் சுற்று ஊர்களுமாகும். அந்த ஊரின் பழமை மாறாத கோலத்தோடு நிலைத்த மூத்தோர்களில் என் நினைவில் இன்றும் தெறிப்பவர்கள் சட்டம்பியார் என்கின்ற வேலுப்பிள்ளையர், அவருடைய தம்பியார் சரணவமுத்து மாமா ஆகிய இருவரும். இவர்கள் எங்கள் உறவினர்களல்லர். ஆனாலும், உறவினர்களுக்கும் மேலாகப் பழகிய உற்றார்கள். பண்பிலும், கடும் உழைப்பிலும் கிராமியக் கோலத்தோடு மிளிர்ந்தவர்கள்.

இவர்களில் மூத்தவர் வேலுப்பிள்ளை சட்டம்பியார் என் பேரனார் தம்பு வாத்தியாரின் நண்பர். அவருக்கு பதினைந்து வயது இளையவர் சரவணமுத்து மாமா. அவர் என்னுடைய தந்தையாரின் நண்பர். நீண்ட காலம் தொடர்ந்து எங்கள் கொத்தனங்கிணத்தடி எல்லைக் காணி மற்றும் அம்பனைச் சந்திக்கு அப்பால் இருந்த தோட்டக் காணி ஆகிய இரு காணிகளையும் பயிர்ச்செய்கை பண்ணியது அவர்கள் தான். அவர்கள் குத்தகைக்காரர்களல்ல. ஆனாலும் நட்பியல் ரீதியாக பண்டமாற்று முறையில் அவர்களது வருவாய்கள் எங்களுக்குக் கிடைக்கும்.

பன்னாலை பள்ளிக்கூட கிழக்கு எல்லையில் இருந்தது இவர்களுடைய குடிசை வீடு. அப்பால் எல்லை வேலி இல்லாத அப்பரின் வீடு. அந்தப் பகுதியில் குடியிருந்த நான்கு ஐந்து குடும்பங்களுக்கு பொதுக் கிணறும் அந்த முடக்கில் தான் இருந்தது. பெண்கள், ஆண்கள் எல்லோருடைய குளிப்பு, முழுக்கு, தோய்ப்பனவு எல்லாம் அந்தப் பொதுக் கிணற்றில் பகிரங்கமாக நடக்கும். எனக்கு விபரம் தெரிந்த நாள் முதல் சட்டம்பியார் தனிக்கட்டை தான். மனைவியை இளம்வயதிலே நோய்க்குப் பறிகொடுத்த அவர் தன் ஒரே மகள் பரமேஸ்வரி அக்காவோடும், தம்பியாரோடும் வாழ்ந்தார். அவர்கள் இருவரும் சேட்டு போட்டதை நான் காணவில்லை.

நாலு முழ வேட்டி, அது பழுப்பு நிறமாக இருக்கும், சால்வை தோளில் தொங்கும். பின்புறம் முடிந்த குடும்பி. நரை தவழுகின்ற இடையிடையே சவரம் காணுகின்ற முகம். பாக்கு வெற்றிலை சப்பியே பழுத்துப் போன பல்லு. மண்ணோடு கால் உரஞ்சும் நடை என்பது சட்டம்பியாரின் கோலம். அவர் உபாத்தியாராக இருந்தவர். ஆனாலும் மூன்று பவுண் தான் சம்பளம். மூன்று பவுண் என்பது அவர்கள் பாசையில் முப்பது ரூபாவைக் குறிக்கும்.

இதனைவிட தோட்டத்தில் உழைக்கலாம் என்று வேலையை விட்டுவிட்டார். ஆனாலும் சட்டம்பியார் என்கின்ற பெயர் நிலைத்து விட்டது. அவருடைய தம்பியார் சரவணமுத்து கடும் உழைப்பாளி, கட்டுமஸ்தான உடல் அமைப்பைக் கொண்டவர். ஆள் கறுவல் தான், நெஞ்சில் ரோமம் நிரம்பியிருக்கும். அழகாக தலை மயிரை வாரி இழுத்திருப்பார். தோட்ட வேலை செய்வதால் எந்நேரமும் வில்லுக் கத்தி வைத்திருப்பார். அழகான தோற்றமுடையவர், இனிமையான சினிமாப் பாடல்களை வாயால் விசில் அடித்துப் பாடுவார். இரவில் இரண்டாம் காட்சி பார்த்து விட்டு வந்தாலும், படுத்து விடியற்காலை சந்தைக்கு புறப்பட்டு விடுவார். தன் பெறாமகளுக்காக திருமணம் செய்யாமல் இருந்து பின்னைய வயதில் தான் பலாலியில் திருமணம் செய்து, தன் உழைப்பால் கடுமையாக முன்னேறி நல்லாக வாழ்ந்த ஒருவர்.

அவர் சேட்டுப் போட்டது திருமணநாள் அன்று தான். ஆனாலும் தனக்கு ஏதோமாதிரி இருக்கிறது என்று தாலி கட்டி முடிய சேட்டைக் கழற்றி விட்டார். திருமணத்தின் பின் அவரை சேட்டோடு இடையிடையே பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டின் தலைவாசலில் இருந்த கொட்டில் தான் இவர்களுடைய தோட்டச் செய்கையினுடைய சேகரிப்புகள் இடம்பெறும். ஒரு கூடார வண்டிலும் எங்களிடம் இருந்தது. பேரனாரின் விருப்பத்திற்குரிய வாகனம் அது. முன்புறம், பின்புறம் தொப்பி போல வளைவு கொண்ட வெள்ளை வர்ணம் பூசிய வண்டில் அது. சரவணமுத்து மாமா மாடுகள் கொண்டு வருவார். எங்கள் குடும்பத்தை கோயில், திருவிழாக்கள், வெளியூர் என்று எங்கும் கொண்டு திரிவார். அவர்களுடைய மகள் பரமேஸ்வரி அக்காவும் இந்த கோஷ்டியில் இணைந்து கொள்வார். திங்கள், புதன், வெள்ளி என்று சுன்னாகம் சந்தைக்கு தங்கள் தோட்ட விளைவுகளை கொண்டு செல்வதும், இடையிடைய இந்த வண்டிலில் தான். வெற்றிலை மட்டும் தான் என்றால் பெரிய கரியர் பூட்டிய சைக்கிள் வண்டிலில் சரவணமுத்து மாமா வெற்றிலைக் கட்டை கொண்டு சென்று விடுவார்.

வெற்றிலைத் தோட்டத்தில் கிள்ளிய வெற்றிலைகளை பெரிய பனையோலை கூடை ஒன்றிலே எடுத்து வருவார்கள். அதை எங்கள் தலைவாசல் கொட்டிலில் இருந்த பெரிய வாங்கிலில் கொட்டி, அதில் வைத்துத் தான் அடுக்குவார்கள். வாழை மடலில் அளவாக, அழகாக வெற்றிலைகள் அடுக்கப்படும். இவ்வாறான கட்டுகள் பலவற்றை முழு வாழை இலையில் முட்டைக்குள் கட்டி அடுத்தநாள் விடியற்காலை சந்தைக்கு ஆயத்தமாகி விடுவார்கள். புளியம்பழம், பழப்பாக்கு, நொங்குப்பாக்கு என்று எங்கள் வீட்டில் தங்கள் தோட்டத்தின் விளைவுப் பொருட்கள் எல்லாவற்றையும் சரவணமுத்து மாமா தான் வண்டிலில் எடுத்துச் செல்வார்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

உற்பத்திகளை விற்பனை செய்து விட்டு தேவையான சாமான்களை வாங்கி வருவதும், சரவணமுத்து மாமா தான். வெற்றிலைக்கட்டு, தலைவாசல் மேய்தல் மற்றும் வேலைகளை செய்வதற்கு இவர்கள் பலவகையில் உதவுவார்கள். என்னுடைய தந்தையார் அப்புத்தளையிலிருந்து வரும்பொழுது தெல்லிப்பளை ரயில் நிலையத்தில் எங்களுடைய வண்டிலைக் கொண்டு சென்று அழைத்து வருவதும் எங்களது சரவணமுத்து மாமா தான். முகம் சுழிக்காமல் எல்லோருக்கும், எல்லா உதவிகளும் செய்பவர் சரவணமுத்து மாமா தான்.

வடலிகள், பனையோலைகளை வெட்டி ஆடு, மாடுகளுக்கு குழையாக்குவதும், அதற்காக ஈக்கிளை வடலியோடையால் பிரித்து எடுப்பதும் அந்த நாட்களில் ஒரு வேலை. அது கூட எங்கள் தலைவாசல் கொட்டிலில் தான் நடக்கும். இவ்வாறாக இவர்கள் கடும் உழைப்பாளிகளாக, விவசாயிகளாக எளிமையிலும், செளிமையாக வாழ்ந்தவர்களாக இருந்தார்கள். பின்னைய நாட்களில் வெற்றிலைத் தோட்ட வருவாய் குறைய இவர்களும் வறுமைப் பிடியில் வாடினார்கள். ஆனாலும், யாரிடமும் கையேந்தாமல் தன் மானத்தோடு வாழ்ந்தவர்கள். அரசாங்கத்தின் உதவிப் பணம் தான் சட்டம்பியாரின் ஒரேயொரு வருமானம். பெட்டி, பாய், கடகம் என்று இளைத்து விற்று தந்தையும், மகளுமாக வாழ்க்கையை ஓட்டினார்கள். சரவண முத்து மாமாவின் உதவிகளும் தொடர்ந்து இவர்களுக்குஇருந்தது.

இவ்வாறான பழைய பெரியவர்களை கிராமிய பண்பாடோடு வாழ்ந்தவர்களை இன்று இங்கிருந்து நினைக்கும் போது, அவர்கள் நெஞ்சில் நிறைந்தவர்களாக அத்தகைய எளிமையிலும் வருவாய் குறைந்த நிலையிலும் எவ்வாறாக செளிப்பாக வாழலாம் என்ற உதாரணப்புருஷர்களாக இன்றும் உதிக்கின்றார்கள்.

# கோர்த்து விடும் செய்திகள்

## ■ இந்தியா பார்த்து கொண்டே இருக்கட்டும்

இலங்கை, பங்களாதேஸ், மியன்மார், பாகிஸ்தான் மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளில் பல உட்கட்டமைப்பு பணிகளை சீனா மேற்கொண்டு வருவதை தாம் உன்னிப்பாக அவதானிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். ஆம் நீ பார்த்துக் கொண்டே இரு சீனா இந்தியாவை ஒரு கை பார்க்கும் வரை.

## ■ மங்கள சமரவீரவிற்கு மங்களம்

நாட்டில் தனக்கு எதிரான அரசியல்வாதிகளே இருக்கக் கூடாது எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் மஹிந்தருக்கு பெரும் தலையிடியாய் இருப்பவர் மங்கள சமரவீர. தனது கருத்துக்களை ஆணித்தரமகவும் ஆதாரங்களுடனும் மக்களுக்கு எடுத்துச் சொல்லும் திறனுடையவர்.

இவர் மஹிந்தவின் வெளிநாட்டமைச்சராக இருந்த போது மஹிந்தவின் பன்னாட்டுக் கொள்கையும் அணுகுமுறையும் சரிவராது என அடித்துச் சொல்லியவர். இவரை இப்போது எப்படி பிரச்சனையில் மாட்டி சிறைக்குள் தள்ளி விடலாம் என மஹிந்தர் திட்டமிடுகிறாராம்.

## ■ காற்சட்டையை கழற்றி விட்டுத் தான் ஜெனிவாவிற்கு போகவேண்டும்

இலங்கை அரசு சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவரை மார்ச் மாதம் ஜெனீவாவில் நடக்க விருக்கும் மனித உரிமைக் கழகக் கூட்டத் தொடருக்கு செல்லும் படி பணித்த போது அவர் அதை மறுத்து எமது நாட்டில் மனித உரிமை மீறல் இல்லை எனச் சொல்ல ஜெனிவா போவதாயின் காற்சட்டையைக் கழற்றி வைத்து விட்டுத்தான் போகவேண்டும் என்றாராம்.

## ■ அம்பலாங்கொட கற்பழிப்பு அம்பலம்

அம்பலாங்கொடவில் கற்கை ஆய்விற்குப் போன ஒஸ்ரேலிய மாணவியை கற்பழித்தவரை மஹிந்தரின் வலது கரமான வாஸ் குணவர்த்தனவின் வீட்டில் மறைந்திருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று அம்பலப்படுத்தியுள்ளது. ஒஸ்ரேலிய-இலங்கை நல்லுறவு வாழ்க.

## ■ பிச்சை வேண்டாம் நாயைப் பிடி

நாம் தமிழர் கட்சித் தலைவர் தோழர் திருமாவளவன் ராகுல் காந்தியை ஈழப் பிரச்சனையில் தலையிடும்படி வேண்டு கோள் விடுத்துள்ளார். அப்பன் தலையிட்டு நாம் அனுபவித்தது போதும் ஐயா.

அவர்களுக்கு கருணை இருக்குமானால் நிர்பந்த வாக்கு மூல அடிப்படையில் கொலைத் தண்டனை பெற்ற பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோருக்கு கொள்ளி வைக்காமல் இருக்கட்டும்.

*- ஊருளவாளி*






சாரதிகள் அறிமுறைப் பரீட்சைக்கான பயிற்சிப் பட்டறை
Driving theory test preparation workshop

இதுவரை தமிழ் மொழி மூலம் நடைபெற்ற சாரதிகள் அறிமுறைப் பரீட்சை இவ் வருடம் ஏப்ரல் 6 இன் பின்னர் நடைபெறாது. அதற்கு முன்னர் நீங்கள் தமிழ் மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

நீங்கள் பரீட்சைக்குத் தயாராவதற்கான பயிற்சிப் பட்டறைகள் விரைவில் ஆரம்பமாகின்றன.

இலகுவான பயிற்சி | துரிதமான கற்கை | அதி நவீன தொழில் நுட்பம்

உடன் பதிவுசெய்து உங்கள் இடங்களை உறுதிப்படுத்துங்கள்.

தயவு செய்து உங்கள் செய்தியை குரல் அஞ்சலில் பதிவு செய்யுங்கள்.

Smart Driving School
077 688 244 67

# எருதின் புண்

**சிறுகதை**

ஞாயிறு அன்று 12 மணிவரை தூங்குபவன், ஆனால் எட்டு மணிக்கே எழுந்து சிவஞானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆழ்வார் திருநகர் பக்கம் நீங்கள் வந்து இருந்தால் அச்சு அசப்பில் ஒரே மாதிரி இரண்டு வீடுகளைப் பார்த்து இருக்கலாம். அந்த இரண்டு வீடுகளின் சொந்தக்காரர்தான் சிவஞானம்.

நான் அந்த வீடுகளில் ஒன்றில் குடித்தனம் இருப்பவன். அனேகமாக வீடு வாடகையை ஏற்றத்தான் வருகின்றார் என யூகித்து இருந்தேன். சென்ற ஆண்டு ஆயிரம் ரூபாய் ஏற்றினார்.

“முரசொலி படிச்செல்லாம் அறிவை வளர்த்துக்க முடியுமா என்ன?” என்ற வழமையான குசும்புடன் வெளி இரும்புக்கதவை உள்ளே தள்ளியபடி வந்தார் சிவஞானம். அவரின் கையில் இருந்த தினமலரை வாரமலருக்காக பெற்றுக்கொண்டேன்.

சிவஞானம் என்ற பெயரை, அவரின் பெற்றோர்கள் சிலம்புச்செல்வர் ம.பொ.சி நினைவாக வைத்தனர் என கேட்காமலேயே அடிக்கடி சொல்லுவார். ம.பொ.சி அவரின் நெருங்கிய சொந்தக்காரர் எனப் பெருமை சொல்லிக்கொள்வதற்காக அவர் போடும் முதல் வரி என்பது நீண்ட நாட்கள் கழித்துத்தான் புரிந்தது. திமுக என்றால் அவருக்கு ஆகாது, கலைஞர் என்றால் அவருக்கு அப்படி ஒரு வெறுப்பு.

“என்ன உங்கத் தலைவர் டெசோ கிசோன்னு எதுவும் வேலை ஆரம்பிக்கலியா ? எலக்‌ஷன் டைம் வேற நெருங்கிடுச்சு”

மனைவியிடம் கூட கிண்டலுக்கு பதில் நக்கல் அடித்து விடலாம். ஆனால் வீட்டு உரிமைக்காரர்களிடம் ஸ்ட்ரிக்ட் நோ நோ....

ஆக, கலைஞர், பாராட்டு விழாக்களில் ஒரு ஓர சிரிப்பு சிரிப்பாரே, அதைப்போல சிரித்துக் கொண்டேன்.

“தமிழ்த்தலைவன்னு சொல்லிட்டு, சிங்களத்தமிழர்களுக்கு இப்படி துரோகம் செஞ்சிருக்கக் கூடாதுப்பா..”

ஆத்திரம் வந்தது. கலைஞரை கேலி செய்ததற்காக அல்ல. சிங்களத்தமிழர்கள் என்றதற்காக... அம்மு நான் ஆத்திரப்படும்பொழுது எல்லாம் சரியாக கண்டுபிடித்து விடுவாள். ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தி நான் சிரிக்கும் பொழுது அது மிஸ்டர் பீன் சிரிப்பைப்போல இருக்குமாம்.

என் மிஸ்டர் பீன் சிரிப்பை ஆமோதித்தலாக நினைத்துக் கொண்டு கலைஞரை தொடர்ந்து வசைப் பாடிக் கொண்டிருந்தார். எனக்கு மனம் எவ்வளவு வாடகை ஏற்றப்போகிறார் என்பதில் இருந்தது.

“சரி, தம்பி, இந்த மாசத்தில இருந்து வாடகை 2000 ரூபாய் எக்ஸ்ட்ரா கொடுத்துடுங்க” என்றார்.

தனிவீடு, கார் பார்க்கிங் இப்படி ஒரு வீடு சென்னையில் கிடைப்பது சிரமம் என்பதால், 2000 ரூபாய் ஏற்றம் அதிகம் என்றாலும் ஏற்றுக்கொண்டேன். காப்பி, மிக்சர் உபசரிப்புகள் முடிந்தவுடன், வாரமலரில் சினிமா கிசுகிசு செய்திகளின் சுவாரசியத்தினால், வாரமலர் இணைப்பை மட்டும் என்னுடன் வைத்துக்கொண்டு தினமலரை அவரிடம் திருப்பிக் கொடுத்தேன்.

வீட்டு வாசற்படி சென்றவர், திரும்ப வந்தார். “யோகநாதாராசா வீட்டிற்கும் போறேன். நீங்களும் கூட வர்றீங்களா” எனக் கூப்பிட்டார்.

யோகநாதராசா இன்னொரு வீட்டின் குடித்தனக்காரர். ஈழத்தமிழர். தன் மனைவியுடன் இங்கு வசிக்கின்றார்.

அவரின் மகன்கள் பிரான்சில் புகலிடம் விண்ணப்பம் கொடுத்து நீண்ட நாட்களாகக் காத்திருப்பதால் எப்பொழுதும் மென்சோகத்துடன் தென்படுவார். கள்ள முகவர்கள், எப்படி , அவரின் மகன்களை பிரான்சு என சொல்லி உருகுவேயில் இறக்கிவிட்டதையும் அங்கு கையில் சல்லிக்காசு இல்லாமல் கஷ்டப்பட்டதையும் சொல்லும்பொழுது, கடினமான உள்ளம் படைத்த காரியகார என்னையும் உலுக்கும்.

நான் கலைஞரின் ரசிகன் என்றாலும் யோகநாதாராசா “என்னய்யா , உங்க அய்யா எங்களை ஏமாத்திட்டாரே” சொல்லும்பொழுது மனதைப்பிசையும். நேரிடையாகப் பாதிக்கப்பட்டவர்களிடம் அறிவுபூர்வ அரசியல் பேசுவது அழகல்ல என்பதால் பதில் சொல்ல மாட்டேன். அவர் பேசுவர் நான் கேட்பேன்.

புலிவேசம் போடாத புலியாக இருந்தபோதிலும் சகோதர யுத்தம் தொடங்கி ராஜபக்சவை வெற்றியடையச் செய்தது வரை புலிகளின் அரசியல் தடுமாற்றங்களைச் சொல்லுவார். பல சமயங்களில் கேட்டல் வழி வரலாறு ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றை விட உண்மையாக இருக்கும்.

பாரிசில் இருந்து எனக்கு ஏதாவது தேவையா எனக் கேட்பார். நான் வேண்டாம் என மறுத்துவிடுவேன். பாரிசில் அலுவலக விசயமாக ஆறு மாதங்கள் இருந்திருக்கின்றேன். தூங்க கூட நேரமில்லாமல் தட்டுக்கழுவி குருவியாய் ஈழத்தமிழர்கள் எப்படி காசு சேர்ப்பார்கள் என்பதை கண்ணால் பார்த்து இருக்கிறேன். குருவிகளிடம் பங்கு கேட்கும் கோட்டானாக ஆக நான் விரும்பியதில்லை.

“ உங்களுக்கு இதில எந்த கஸ்ரமும் இருக்காது. மகன்மார் எல்லாரும் வெளிநாட்டில தானே இருக்கிறாங்க.. இந்த மாசத்தில இருந்து வாடகைய அஞ்சாயிரத்தால கூட்டலாம்னு இருக்கேன். ஈரோல பாத்தா கொஞ்சம் தான் வரும். அத சொல்லலாம் எண்டு தான் வந்தனான்’

இமிடேடட் ஈழத்தமிழில் சிவஞானம் யோகநாதராசாவிடம் பேசினார். சிவஞானம் யோகநாதராசாவிடம் நெருக்கம் காட்டுவதற்காக ஈழத்தமிழில் பேசுகின்றார் என்பது என் அவதானம்.

யோகநாதராசா முகத்தில் சலனமின்றி சரி எனத் தலையாட்டினார். பார் கண்ணா பார், உனக்கு நான் மற்றவரை விட குறைவாக வாடகைக்கு வீடு தந்து இருக்கின்றேன் என தனது பெருந்தன்மையை பறைசாற்றிக் கொள்வதற்காகத்தான் சிவஞானம் என்னை உடன் வரச்சொன்னார் என்பது புரிந்தது.

“பிறகு, மகன்மார பிரான்ஸில இருந்து நல்ல வைன் போத்தில் ஒண்ட அனுப்ப சொல்லிவிடுங்களேன்?”

யோகநாதராசா அதற்கும் சரி என்றார். சிவஞானம் விடை பெற்றுக்கொள்ள யோகநாதராசா என்னை இருந்துவிட்டு போக சொன்னார்.

“மகன்மாரோட விசா வரிஜெக்ட் பண்ணிட்டாங்க கார்த்தி, எப்ப கலைச்சுவிடுவாங்கன்னு பயந்துகொண்டு கள்ளமா இருக்கிறாங்க. இதுல. போன ஒரு வருசத்தில நாலு தரம் வாடகைய கூட்டிறாங்க , என்ன செய்றதுன்டு தெரியல்ல.‘ யோகநாதராசாவின் கண்கள் கலங்கின.

*- வினையூக்கி*

# தமிழ்த்தேசிய...

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

அணி அணியாக போராட்டங்களிலும் ஈடுபடுகின்றனர். இது தாயகத்தில் எண்பதுகளின் நிலையைபோன்றது. இக்காலத்தில் தான் திரள் திரளாக விடுதலை இயக்கங்களில் மத்தியதர வர்க்க இளைஞர்கள் சேர்ந்தனர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்த புதிய பரிணாமம் இந்திய மத்திய அரசாங்கம் முற்றிலும் எதிர்பார்க்காதது. கடந்த மாணவர் போராட்டத்தில் இந்த போக்கு வெளிப்படும்போது இந்திய மத்திய அரசாங்கம் மட்டுமல்ல, அமெரிக்கா கூட அதிர்ச்சியடைந்ததாக தகவல்கள் வெளிவந்தன.

இதன் பின்னர் தான் தேசிய இனப்பிரச்சினையின் கனதியை அனுபவரீதியாக அவை புரிந்துகொண்டது. போரை முன்நின்று நடாத்திய காங்கிரஸ் கட்சி இன்று தமிழ்நாட்டில் முழுமையாக தனிமைப்பட்டுவிட்டது. அதனுடன் கூட்டணி சேர்வதற்கு சிறிய கட்சிகள் கூட இன்று தயாராக இல்லை.

ஈழத்தமிழர் விவகாரத்தில் தமிழக சக்திகள் சில வெற்றிகளையும் அடைந்துள்ளன. இந்தியா, அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவாக ஜெனிவாவில் வாக்களித்தமையும், மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டிற்கு வராமையும் அவர்களுக்கு கிடைத்த வெற்றிகளே. அவர்கள் இப்போது கூறுவதெல்லாம் தமிழ்த் தேசிய தணலை அணையவிடாது பாதுகாத்துக் கொள்ளுங்கள், இந்திய மத்திய அரசினை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் என்பதே.

டயஸ்போராவும் தமிழ்நாடு போன்று தான் கடுமையாக உழைக்கின்றது. அவர்களுக்கிடையே சில பிரிவுகள் காணப்பட்டாலும் ஜெனிவா விவகாரம் தொடர்பாக அனைவரும் ஒரே இலக்கில் செயற்படுகின்றனர். தமிழ்நாட்டை போலவே அவர்களும் பல வெற்றிகளை கண்டுள்ளனர். அதில் பிரமிக்கத்தக்க வெற்றிதான் சர்வதேச தீர்ப்பாயம் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என் தீர்ப்பளித்தமையாகும்.

தமிழ்நாடும் டயஸ்போராவும் மேற்கொள்ளும் இந்த அரிய முயற்சிகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கவிழ்த்துக்கொட்டிவிடுகின்றது என்பது தான் தற்போது தமிழ்த்தேசிய சக்திகளுக்குள்ள மிகபெரும் கவலை. தற்போதைய காலம் என்பது தமிழ் மக்களுக்கான காலம். வரலாறு இக் காலத்தை எப்போதும் தரப்போவதில்லை. அந்த காலத்தை ஒழுங்காக பயன்படுத்தாவிட்டால் வரலாறு ஒரு போதும் தமிழ் மக்களை மன்னிக்காது.

# "This is an ongoing genocide"...

*(Continued from page 14)*

implored the European Union to lay down preconditions before giving any sort of assistance to Sri Lanka.

In a video recording, Jaffna University Lecturer and civil society activist Kumaravadivel Guruparan explained that the Sri Lankan state “wants to redesign and reclaim the Northeast, to make it part of its Sinhala Buddhist state” and also said:

“The narrative of a potential liberal space in Sri Lanka denies the constitutional reality of the Sinhala-Buddhist state,”

“Tamils have spent all these years trying to show attempts within the Sri Lankan state have been truly exhausted”.

Miriam Rose from Foil Vedanta spoke on sea grabs and explained that restricting access to areas of the sea were detrimental to livelihoods.

Suresh Premachandran MP, addressing a question from the audience on the TNA’s stance on genocide, said:

"I think TNA has a clear view. Me, Sampanthan and Sumanthiran have all spoke in parliament and said there is genocide."

The conference was concluded by Dennis Halliday stating “this is a genocide. This is an ongoing genocide.”

*Courtesy: TamilGuardian*


SREE KANAGA DURGA
ASTROLOGY CENTER





Pandit : SAHA DEVA RAJ
Indian Astrologer & Herbal Ayurvedic Specialist
15 Lee High Road, London, SE13 5LD
[Near Sivan Temple - Opposite Nando’s]

பிரபல மந்திரிமார்களுக்கும் நடிகர் நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கவிருப்பவற்றைச் சொல்லுவார்.

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், கணவன் மனைவி காதலர் ஒற்றுமை பிணக்குகள், குழந்தை, சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி முன்னேற்றம், லட்சுமிகடாட்சம், வாகன மனைப் பொருத்தங்கள், விசாப் பிரச்சினைகள், கோட்டு வழக்கு, ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும் பேய் பிசாசு, தொந்தரவா ?, எதிரியால் தொந்தரவா ? கண்திருஷ்டி, நாக தோசம் உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தீர்த்து வைப்பார். Lottery Luck பற்றியும் சொல்லுவார்.

அனைத்து விதமான நோய்களுக்கும் அற்புதமான மூலிகை சிகிச்சை வழங்குகிறார்கள். நாடி பிடித்து நோய்கள் கண்டறிவதில் வல்லுனர்

Tel : 07472 566 541 , 07448 859 930

Take Right Decision at Right Time

Solves problems related to getting your love back, Getting good job, Husband & wife problems, stop depression & stress etc…

SUGGESTION : Relationship, Love, Money, Health, Business, Job, Depression, Stress, Family Arrangements, Misunderstandings etc.



Destroy your problems before they destroy you and have a little happiness, peace and prosperity, like millions of people across the world

Our Future is a life ship in which we are passengers.
Please come and check out what life holds for you

Any Problems clear within 9 days | Famous through 7 Generation
Office Housr : 7 Days a Week 10 AM to 8:00 PM

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 35 வயது, 5'7" Residing in India, graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4814
2. 27 வயது, 5'8" British citizen working as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4811
3. 32 வயது, 5'6" Travel Document, working as a customer service in Airport தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4808
4. 41 வயது, 5'9" British citizen doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4807
5. 29 வயது, 5'7" PSW visa, working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4804
6. 29 வயது, 6'0" Residing in Srilanka, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4802
7. 50 வயது, 5'8" British citizen, widowed, working as an Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4662
8. 37 வயது, 5'4" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4797
9. 34 வயது, 5'6" Accountant born and brought up in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4788
10. 55 வயது, 5'6" Permanent resident divorced software engineer in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4787
11. 41 வயது, 5'8" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4786
12. 39 வயது, 5'9" British citizen, self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4782
13. 27 வயது, 5'8" Graduate, working in Colombo தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4784
14. 34 வயது, 5'11" Divorced born and brought up in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4781
15. 36 வயது, 5'5" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4792
16. 30 வயது, 5'3" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4775
17. 34 வயது, 5'6" Permanent residence in uk doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4598
18. 41 வயது, 5'8" British citizen working in a IT department in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522
19. 29 வயது, 5'6" British citizen working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195
20. 48 வயது, 5'8" Permanent residence divorced accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422
21. 33 வயது, 5'7" working in a company in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4737
22. 31 வயது, 6'1" Graduate student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4732
23. 38 வயது, 5'9" work permit visa working as a cashier in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4412
24. 30 வயது, 6'0" Graduate, civil engineering in Australia, Australian citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4783
25. 47 வயது, 5'11" British citizen working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4755
26. 23 வயது, 5'5" Residence permit for 5 years self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4752
27. 32 வயது, 5'11" Permanent residence in france working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4746
28. 27 வயது, 5'5" Graduate student visa working as a web developer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4745
29. 26 வயது, 5'10" Graduate German citizen working in company in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4744
30. 34 வயது, 5'1" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4733
31. 33 வயது, 5'8" Permanent residence in uk software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4503
32. 25 வயது, 6'0" British citizen graduate working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4743
33. 42 வயது, 5'7" Permanent residence shop keeper தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4742
34. 29 வயது, 5'8" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4740
35. 30 வயது, 5'2" Teacher in srilankan தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4009
36. 21 வயது, 5'5" Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4701
37. 40 வயது, 6'1" Divorced Graduate working in a Administrative service தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1684
38. 33 வயது, 5'7" German citizen working as a health care assistant in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4757
39. 26 வயது, 5'10" Permanent visa working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4722
40. 42 வயது, 5'8" British citizen woking in Investment Bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558
41. 30 வயது, 5'6" British citizen doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3272
42. 35 வயது, 5'4" PSW visa graduate working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4730
43. 31 வயது, 5'6" Australia citizen working as a system engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4729
44. 31 வயது, 5'7" Geman citizen manager in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4615
45. 33 வயது, 5'8" divorced work permit visa graduate doing business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4713
46. 30 வயது, 5'8" Born and brought up in uk working as a IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4710
47. 31 வயது, 6'3" Permanent residence in Singapore Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4708
48. 40 வயது, 5'3" British citizen working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4706
49. 45 வயது, 5'6" German citizen Living in UK, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4660
50. 26 வயது, 6'1" Born and brought up in uk working as a Software engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4699

## மணமகன் தேவை

1. 40 வயது, 5'5" Graduate, Working as an Accounting executive in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4809
2. 40 வயது, 5'4" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4806
3. 34 வயது, 5'4" Permanent residence, divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4798
4. 40 வயது, 5'5" Asylum seeker in france தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4795
5. 30 வயது, 5'4" British citizen divorced graduate working as a IT consulant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4793
6. 28 வயது, 5'2" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4789
7. 22 வயது, 5'3" British citizen working as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4785
8. 45 வயது, 5'5" in srilanka working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4772
9. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770
10. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766
11. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756
12. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754
13. 34 வயது, 5'0" Graduate working in a IT field in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4749
14. 24 வயது, 5'3" Graduate working in a Bank in uk French citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4161
15. 43 வயது, 5'3" Graduate British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731
16. 38 வயது, 5'3" Graduate British citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4646
17. 43 வயது, 5'2" German citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4666
18. 29 வயது, 5'5" Residing in Srilanka, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4519
19. 31 வயது, 5'4" Canadian, Residing in Canadian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4527
20. 39 வயது, 5'2" Born and brought up in uk working as a Project manager in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4704
21. 35 வயது, 5'5" divorced british citizen working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4709
22. 24 வயது, 5'8" German citizen graduate working in a private sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4702
23. 38 வயது, 5'3" German citizen working as a graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132
24. 27 வயது, 5'2" Born and broughtup in uk nurse தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4681
25. 28 வயது, 5'6" PSW visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4673
26. 29 வயது, 5'6" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4659
27. 27 வயது, 5'1" medical student living in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3350
28. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414
29. 27 வயது, 5'3" Permanent residence working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243
30. 28 வயது, 5'3" British citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4629
31. 21 வயது, 5'3" born and brought up in Norway student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4607
32. 35 வயது, 5'5" working as a manager in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591
33. 39 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660
34. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584
35. 44 வயது, 5'2" divorced, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4576
36. 25 வயது, 5'3" Permanent residence working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606
37. 30 வயது, 5'3" British citizen Engineer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4562
38. 32 வயது, 5'10" srilanka, graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4552
39. 32 வயது, 5'3" British citizen working in a company as a manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4539
40. 24 வயது, 5'4" born and brought up in uk working as a financial investment in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3504
41. 33 வயது, 5'5" Accountant in Singapore தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3947
42. 40 வயது, 5'3" divorced German citizen living in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4542
43. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357
44. 33 வயது, 5'2" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4513
45. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102
46. 39 வயது, 5'3" widowed living with children d in netherland wishes to move to uk accountant working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4511
47. 28 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4496
48. 22 வயது, 5'3" British citizen accountant தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4491
49. 34 வயது, 5'4" PR in Uk divorced working in a factory தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4489
50. 21 வயது, 5'8" PR in Uk student graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4488
51. 26 வயது, 5'0" PR in Uk graduate working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4487
52. 27 வயது, 5'2" British citizen Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4485
53. 25 வயது, 5'6" PR in Uk working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4484
54. 29 வயது, 5'7" born and brought up in Uk graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4483
55. 34 வயது, 5'5" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4473
56. 24 வயது, 5'7" born and broughtup graduate working in a company தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4481
57. 27 வயது, 5'2" British citizen graduate working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4477
58. 23 வயது, 5'2" British citizen graduate student தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4471
59. 37 வயது, 5'5" Accountant working in srilanka தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 4465
60. 40 வயது, 5'4" Doctor work permit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4455
61. 32 வயது, 5'0" working in pharmacy US citizen living in US தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4398
62. 29 வயது, 5'2" British citizen graduate working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388
63. 28 வயது, 5'8" British citizen working in a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# விடிவெள்ளி




**மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

கதிரவனையும் நிலவையும் தவிர்த்து வான் பொருட்களில் எம் கண்களுக்கு ஒளிப் பொலிவு அல்லது பிரகாசம் கூடுதலாய்த் தரும் பொருள் எதுவென்று கேட்டால் நாம் தயக்கம் இன்றி விடிவெள்ளி என்று கூறலாம். கதிரவனை இரண்டாவதாக வலம் வரும் சுக்கிரனே இந்த விடிவெள்ளியாகக் காட்சி தருவது. வெள்ளி என்ற சொல்லே சுக்கிரனைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. இது எப்பவுமே விடிவெள்ளியாக மட்டும் தோன்றுவதில்லை. மாலை வெள்ளியாகவும் தோன்றுகிறது. அது தொடர்பான சிறு தகவல் அடங்கியதே இக்கட்டுரை.

எமது பூமி மூன்றாவது கோளாகவே கதிரவனை வலம் வருகிறது. அது வலம் வரும் நீள் வட்டப் பாதையின் சராசரி நீளமாகிய 93 மில்லியன் மைல் தூரத்தை ஒரு வானியல் அலகு என்பார்கள். இந்த ஒழுங்கில் முதலாவதாக வலம் வரும் புதன் .3 அலகு தூரத்திலும் இரண்டாவதாக வலம் வரும் வெள்ளி .7 அலகு தூரத்திலும் வலம் வருகின்றன. எம்மில் அநேகமானோர் எங்கள் கண்களுக்குப் புலப்படும் இவற்றை அவதானித்தாலும், அவை வானில் தென் படும் ஆயிரக் கணக்கான விண்மீன்களில் இரண்டு என்று எண்ணுவோமே அன்றி எமது கோள்களில் இரண்டு என்று இனம் கண்டு கொள்ள மாட்டோம். இவை இரண்டையும் போல் மேலும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய மூன்று கோள்களும் கண்ணுக்குப் புலப்படும் பொலிவுடன் காட்சி தருகின்றன. இவை ஐந்தையும் நாங்கள் எளிதாக விண்மீன்களிலிருந்து பிரித்து இனம் கண்டு கொள்ளலாம். விண்மீன்கள் எம்மைப் பார்த்து இடைவிடாது கண்சிமிட்டிக் கொண்டு இருப்பவை. இவை ஐந்தும் நிலவைப் போல எந்த அசைவுமின்றித் தண்ணொளி தந்து கொண்டிருப்பவை.


கதிரவன், நிலவு, ஐந்து கோள்கள், ஆயிரக் கணக்கான விண்மீன்கள், வால் வெள்ளி போன்ற மற்றைய வான் பொருட்கள், ஆகியவற்றின் தோற்றப் பொலிவை வைத்து அவற்றிற்கு பொலிவு அலகு கொடுத்துள்ளார்கள்.

பூசம் என்ற சொல் எம் அநேகரின் காதுகளில் பலமுறை விழுந்த சொல். அப்படிப் பூசத்தை நேரில் காணாதவர்கள் ஒரு பூச நட்சத்திர நாளன்று நிலவைப் பாருங்கள். அங்கு பூசம் தன் சகாவான புனர்பூசத்துடன் வானுக்கு மேலும் அழகு ஊட்டிக் கொண்டு நிலவுக்குப் பக்கத்தில் ஒளிப்பதுடன் உங்களைப் பார்த்துக் கண்ணும் சிமிட்டும். பூசத்தை முதலாம் பொலிவு அலகு கொண்ட ஒரு தாரகைக்கு எடுத்துக்காட்டாக நாம் உள்ளத்தில் பதியலாம். அதன் பொலிவு அலகு 1.14. ஒளி குறைந்து மங்கல் அடைய அடைய இரண்டு மூன்று என்று அலகு எண் உயர்ந்து கொண்டே போகும். அலகு 6 க்கு மேல் உள்ள விண்மீன்கள் வெற்றுக் கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு மங்கலாகி விடும்.

அலகு எண் கூடி மங்கலாகி விண்மீன்கள் கண்ணுக்கே புலப்படாது என்றால் ஒளி கூடக் கூட அலகு எண் குறையத்தானே செய்யும். ஆம் அப்படித்தான். ஒன்று அடுத்து சைபர் அடுத்து சய ஒன்று என்ற ஒழுங்கில் எம் நிலவின் பொலிவு அலகு சய 12.7 எம் கதிரவனின் பொலிவு அலகு சய 26.72. விண்மீன்களிலேயே பிரகாசம் கூடிய சீரியஸ்சின் பொலிவு அலகு சய 1.46. இடப ராசியின் நடசத்திரம் ரோகினியின் பொலிவு அலகு .85. சோதிடப் பட்டிக்குள் அடங்கும் 27 நட்சத்திரங்களுள் பிரகாசம் கூடியது இதுதான். சூரிய சந்திரரைவிட்டு மற்றைய எல்லா வான் பொருட்களையும் விஞ்சியதுதான் விடிவெள்ளி. அதன் பொலிவு அளவு சய 4.4. இது ஒரு குட்டிச் சந்திரன். இதுவும் பிறை வடிவம் தருவது. தூரம் காரணமாக பிறை வடிவை எம்மால் பகுத்துப் பார்க்க முடிவதில்லை. கோள்களில் அடுத்ததாக வியாழன் சய 2.7. அடுத்து வரும் செவ்வாயை, இதுதான் என்று காட்டத் தேவையில்லை. அதன் செந்நிறமும் -2 பொலிவும் அதனை அடையாளம் காட்டிவிடும். புதனின் பொலிவு அலகு .0. கடைசியில் சனி. அதன் கரிய நிறம்மீது பட்டு வரும் அழகிய ஒளியும் அதன் .7 பொலிவும் ஒரு தனி அழகைக் கொடுக்கிறது.

ஒரு சில்லின் முனையின் ஒரு புள்ளியில் ஒரு மின் குமிளையோ அல்லது தீப் பந்தத்தையோ ஒரு இரவில் எரியவிட்டு அந்தச் சில்லையும் சுழல செய்து கொண்டு சில்லுச் சுழலும் எதிர் திசையில் அதாவது சில்லுக்கு செங்கோணமாக நின்று பார்ப்போமானால் பந்தம் வட்டமாகச் சுழல்வது எமக்கு எவ்வளவு தொலைவில் நின்றாலும் தெரியும். இதையே நாங்கள் சில்லுச் சுற்றும் அதே திசையில் தொலைவில் நின்றுபார்ப்போமானால் அந்தப்பந்தம் மேலும் கீழும் போய் வருவது போல் தெரியுமே அன்றி அது உண்மையில் போகும் வட்டப் பாதை எமக்குப் புலப்பட மாட்டாது. இதே நிகழ்வுதான் இந்த இரு கோள்கள் விடயத்திலும் நிகழ்கிறது. நாம் இவை இரண்டையும் அவை சுற்றும் அதே திசையில் நின்று பார்ப்பதால் எங்கள் கண்களுக்கு அவை சில காலங்களில் மேலும் சில காலங்களில் கீழும் நிற்பதுபோல் தென்படுகின்றன. அதுதான் அவை இரண்டும் சில காலங்களில் கதிரவனுக்கு முன்னும் சில காலங்களில் கதிரவனுக்கு பின்னும் உதிப்பதுபோன்ற தோற்றத்திற்கான காரணம்.

இந்தத் தோற்றம் எமது நவக்கிரக நிலை சோதிடக் குறிப்புகளிலும் பிரதிபலிக்கிறது. .3 வானியல் அலகு தூரத்தில் அதாவது 28 மில்லியன் மைல் தொலைவில் சுற்றும் புதன் எப்பவுமே கதிரவனை விட்டு ஒரு ராசிக்கு கூடுதலாகப் பிரிந்து செல்ல முடியாத கைதிபோல் செயற்படுகின்றது. அதேபோல் .7 வானியல் அலகு தூரத்தில் அதாவது 65 மில்லியன் மைல் தொலைவில் சுற்றும் சுக்கிரனும் கதிரவனுக்கு இரண்டு ராசிக்கு அப்பால் செல்ல முடியாத கைதிதான்.




சுக்கிரன் எமக்கும் கதிரவனுக்கும் இடையில் நிற்கும் சமயங்களில் 28 மில்லியன் மைல்கள் வரை அண்மிக்கும் சாத்தியமும் உண்டு. மறு பக்கம் நிற்கும்போது 150 மில்லியன் மைல்களுக்கு அப்பால் செல்லும் சாத்தியமும் உண்டு. ஆனால் அண்மையில் நிற்கும் போது கூடிய ஒளியை வீசும் என்று தப்புக் கணக்குப் போடக் கூடாது. தூரம் முக்கியம் இல்லை. பிறை வடிவங்கள் அதற்கு உள்ளதால், சிறு பிறையாக காட்சி தரும்போது ஒளி குறைவாகத்தானே அதிலிருந்து வர முடியும். அமவாசை நாளில்தான் நிலவு பூமிக்கும் கதிரவனுக்கும் இடையில் வந்து கதிரவனை மறைத்து சூரியகிரகணம் நிகழ முடியும். அதுபோல் சுக்கிரனும் பூமிக்கும் கதிரவனுக்கும் இடையில் வந்து கதிரவனை மறைக்கும் சந்தர்ப்பங்களும் வருவதுண்டு. அது கிரகணமாக மாறாது. சூரிய வட்டத்தின் மேலிருந்து ஒரு புள்ளி கீழ் நகருவது போன்ற ஒரு காட்சி நிகழும்.

# இரவல் திருமணம்

*( 24ம் பக்கத் தொடர்ச்சி)*

ஊமையாய் அழுதது என் காதுகளுக்குள் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது. எனக்கு எதிர்காலம் பற்றி ஒரே ஒரு கவலைதான். அம்மாவோ நானோ இறந்தால். உடலை எங்கே எப்படி அடக்கம் செய்வது என்பதே அது. அதற்கும் விடை தெரிந்து விட்டால் நான் போல் ஒரு இளம் முதிர் ஞானி, எல்லாம் துறந்த ஆனந்த துறவி எங்கும் இருக்க முடியாது. 'குடி போடும் உணவு , குப்பை போடும் உடை , படிபோடும் படுக்கை, பாவங்கள் இல்லாத இருக்கை' என இன்பக்கவி பாடி . எம்மாலும் ஒரு கள்ளனை வாழ வைக்க முடிந்ததே என்ற திருப்தியுடன் வாழ்ந்து விடுவேன். அயல் பிச்சைக்காரரிடம் என் கவலையைகேட்டேன். "மாநகர சபை அனாதைப் பிணம் என்று அடக்கம் செய்வார்கள் " என்றார். அப்போதும் யாரும் அழவோ , இந்த உடல் கடந்து வந்த பாதைகளை நினைக்கவோ, இப்படி ஒரு பிறவி வாழ்ந்து போகும் படி எம் நாடு பேறுபெற்றிருக்கிறது எனவோ கூட சிந்திக்கமாட்டார்கள். ஒரு பிச்சை ஒழிந்தது என்ற உற்சாகமே அவர்கள் மனதில் நிலைகொண்டிருக்குமாம். சமூகமும் , விலைவாசியும் எத்தனை பிச்சைகளை வீட்டில் இருந்து வீதிக்கு வீசிக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அறியமாட்டார்.

இது என்ன ஆச்சரியம் ! ஒரு சந்தோசமான செய்தி !! இப்போதுதான் கேள்விப்பட்டேன். எமது வரிசையில் உள்ள ஒரு பெண்ணுக்கும் வேறொரு இடத்தில் இதே பகுதியை சேர்ந்த ஒரு இளைஞனுக்கும் திருமணம் செய்து வைக்க பேச்சு நடந்து கொண்டிருக்கிறதாம். ஆகா.. ஆகா.. இங்கும் மனித வாழ்வின் விழுமியங்கள் பேணப்படுகிறது என நினைக்கும் போது எனக்கும் கலியாண வெக்கம் வரும் போல் இருக்கிறது. " வாழ்வை அறிந்து கொள்ள வழங்கப்பட்ட சந்தர்ப்பமே வாழ்க்கை" என்று சொன்ன கவிஞன் கவிக்கோ நினைவில் வந்தான். இந்த இழி நிலையிலும் வாழ்வை தேடும் அந்த இரு உள்ளங்களை மனதால் வாழ்த்தினேன். காசு, காணி, நகை, வீடு வளவு, வேலை, சேலை சட்டை, சாதி சமயம், எது பற்றிய பேச்சும் இன்றியும் ஒரு திருமணப்பேச்சு ! உலக வரலாற்றில் பதியப்படவேண்டிய ஒரு பேச்சுவார்த்தை அங்கே கேட்கப்பட்ட ஒரே ஒரு கேள்வி "பிடித்திருக்கிறதா.. ?" என்ற மகா உன்னத சிறு கேள்வி . பல திருமணங்களில் கேட்காமலே போகும் கேள்வி, பல உயிர்களை ஏப்பமிட்டும் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் கேள்வி, பல வேளைகளில் விடையை விரும்பாத கேள்வி. எந்த வித ஆலாபனையோ, அலங்காரிப்போ, போலிப் பிரச்சார காலிவார்த்தைகளோ, கண்சிமிட்டும் பேச்சுக்களோ, கட்டுப்பூக்கொத்துகளோ இன்றி அமைதியாக கேட்கப்பட்டது . இருவரும் சம்மதம் சொன்னார்கள். என் புழகாங்கிதத்திற்கு எல்லையே இல்லை . அட்டா இப்படி ஒரு திருமணத்தை பார்க்காமலே போயிருப்பேனே. "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே.. இருங்கடல் வையத்து - முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை" இப்படி ஒரு பெண்ணம் பெரிய திருமணத்தை காண என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று. கற்ற தேவாரம் என் கண்ணை திறக்க மனம் பரவசமடைந்தது. இங்கே யாரும் யாருக்கும் உறவுக்காரர் இல்லை. மாமனாக நின்றவர் மனைவிமாமி இல்லை. மணமகன் பிறப்பிடம் மாமாவிற்கே தெரியாது. யாரோ குப்பையில் கிடந்த குழந்தையாம் என்று ஒரு தாடிக்கார தாத்தா எடுத்து வளர்த்திருந்தார் மணமகனை . மணமகளுக்கு சற்று வயது அதிகமாக தெரிந்தது ஆனால் அதுவும் இங்கே பேசு பொருள் இல்லை. யாரோ கொழும்பில் இருந்து அனுராதபுரம் வரும் புகை வண்டியில் கடலை விற்றவர் "யார் பிள்ளையோ.. தெரியாது ? அனாதையாக அழுது கொண்டு கடற்கரையில் கிடந்த போது தான் எடுத்து வளர்த்தது, இப்போது தன்னால் அதை காப்பாற்ற முடியவில்லை என்று இங்கே கொண்டு வந்து விட்டு விட்டுப் போனார்" என்பதே ஆதிவாசியான தாடிக்கார தாத்தாவின் ஞாபகத்தில் உள்ள மணமகள் பற்றிய சுய விபரம்.

திருமண நாள் குறிக்கப்பட்டது. "வருகிற புதன் கிழமை முழுமதி தினத்தில் கெக்கராவ பஸ் நிலையத்தில் கரம் பிடித்துக் கொடுக்கப்படும்". என பெரியோரால் நிச்சயிக்கப்பட்டது. வாழ்வு இழந்தவர்கள் தான் இங்கே வருவார்கள் என்றால் இங்கேயும் புது வாழ்வு ஆரம்பித்து வைக்கப்படுவதை காணப்போகிறேன்.

திருமணத்தை ஒட்டி அரசு - பொது விடுமுறை தினமாக - அறிவித்தது பயணிகள் வருகையை குறைத்து மண்டபத்தை முழுமையாக பயன்படுத்த இலகுவாக இருந்தது. போயாதினம் என்று பல கடைகள் மூடப்பட்டது வசதியாக இருந்தது. திருமண வீட்டாரில் சில அங்கவீனர்களை தவிர எல்லோரும் சுகதேகிகளாகவே இருந்தனர். யாரும் ஓடி ஓடி இரவிரவாக வேலை செய்யவில்லை. இருந்த இடத்திலேயே இருந்தனர் அம்மா உட்பட . "திருமணம் எப்படி இருக்கும் ?" என கற்பனை உலகில் இருந்த வேளை யாரோ எனது தட்டில் சில்லறை காசு போட்ட சத்தம் கேட்டு நினைவு திரும்பினேன். என்னிடம் சேர்ந்த காசை எல்லாம் சேர்த்து திருமணத்தம்பதிகளுக்கு ஏதாவது பரிசுப் பொருள் கொடுக்க வேண்டும் என எண்ணி என் யோசனையை அருகில் இருந்த பாட்டியிடம் சொன்னேன். அவரின் பதில் என்னை தூக்கி வாரிப்போட்டது . "நாம் பிச்சை எடுப்பது வயிற்றுக்காகவே அன்றி பரிசுக்காக அல்ல அவர்கள் கையிலும் தட்டு இருக்கிறது". என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் என் காதுகளில் கேட்டது . அந்த பாட்டி முதிர்ந்த தீர்க்க தரிசி போல என் கண்ணுக்கு பட்டார். அங்கே ஒரு நாய் எனக்கு பழக்கமானது. பிச்சை எடுக்காத ஒரு ஜீவன் எனக்கு நட்பாய் இருந்ததில் சற்று ஆறுதல் கிடைத்தது.

திருமணநாளும் வந்தது . மணமகளை ஒரு வயதான பாட்டி அழைத்து வந்தார். மணமகன் அந்த தாடிக்காறதாத்தாவுடன் வந்தார். என் அம்மா ஒரு மூலையில் இருந்தார். அவர் என்னையே பார்த்தபடி யோசனையில் இருந்தார். எனக்கும் சிலசமயம் இப்படித்தான் நடக்கும் என்பதே அவர் யோசனை. அம்மாவை நினைக்க ஒரு புறம் கவலையும் மறு புறம் வேடிக்கையுமாக இருந்தது. ஊரில் ஒரு திருமணமென்றால் அம்மாவை கையில பிடிக்க ஏலாது. காப்பில தான் பிடிக்க வேண்டும் . அவ்வளவு காப்பு கை நிறைய அடுக்கி வைத்திருப்பார். முக்காவாசி காப்பு இரவலாக இருக்கும். இப்போது - நான் போட்டிருக்கும் சிவப்பு இறப்பர் வழையல் கூடப் போடாமல் - வெறும் கையோடு இருந்தார். "எனக்கு இன்னமும் இந்த பிச்சைக்கார வாழ்வை பற்றிய இழிவை உணர வயது போதவில்லையாம் இன்னமும் சின்னப் பிள்ளையாக இருக்கிறேனாம். அதனாலேயே நான் இதையெல்லாம் இலகுவாக ஜீரணிக்கிறேனாம்" என்பது அவரின் தொடர் வாதாட்டம் . வயதான அந்த பாட்டி மணமக்கள் இருவர் கையையும் இணைத்து வைத்து திருமணத்தை நிறைவேற்றினார். எல்லோரும் கைகளை தட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தோம். ஊரில் சொல்வது போல் செல்வங்களான - ' 1. துதி (புகழ்), 2. வாணி(கல்வி), 3.வீரம், 4.விசயம் (வெற்றி), 5. சந்தானம் (பிள்ளைப்பேறு) ,6.துணிவு, 7.தனம் (செல்வம்), 8.அதிதானியம்,9.சௌபாக்கியம், 10. போகம், 11.அறிவு, 12. அழகு, 13.புதிதாம்பெருமை (புதுச்சிறப்பு), 14.அறம் குலம், 15.நோயின்மை ,16.பூண்வயது (நீண்ட ஆயுள்) இப் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க !' - என்று அந்த காளமேகக் கண்டுபிடிப்பை சொல்லிக்காட்டவா முடியும். எனது நாயுடன் நான் சிவரோமாக இருந்து விட்டேன். அம்மாவுக்கு என்னை தனியே விட்டு விட்டு அங்கு இருக்க மனம் இல்லை . அருகில் வந்து தன்னுடனே வருமாறு என் கையை பிடித்து இழுத்தார். "விடுங்கோ அம்மா நான் வர இல்லை" என்று கையை இழுத்தேன்.

"எழும்பிக்குளிச்சுட்டு வெளிக்கிடு பாப்பம் ! மணி ஏழாகுது ஒம்பதுக்கு தாலி கட்டு யோசின இல்லாம படுத்திருக்கிறா..." என்று என்னை இழுத்து எழுப்பி கட்டிலில் குந்தவைத்தார். கண்ணை வடிவா கசக்கிக்கொண்டு பார்த்தேன். மணமக்களையும் காணவில்லை ! நாயையும்காணவில்லை !!. "இறந்துபின் உயிர் பெற்று எழுந்ததுக்கு சமனான கனவை நினைத்து வியந்தேன் . - ஊராவீட்டு நகையை போட்டுக்கொண்டு வந்தா நான் ஊரைவிட்டு போவேன்- என்ற என் முடிவை அம்மாவிடம் சொல்ல தயாராகிக்கொண்டுதேகம் பிசுபிசுக்க நெடுநாளாய் குளிக்காதவள் போல் குளியலறை நோக்கி நடக்கையில் வங்கிக்கணக்கு திறக்க வேண்டும் என்ற எண்ணமும் வந்து போனது . "வெளிநாட்டுக்கார மாப்பிள எடுத்த மாத்துக் கூறை மட்டும் மூண்டு லட்சமாமடி...' என்ற அம்மாவின் குரல் குளியல் அறை வரை கேட்டது.

— முற்றும் —

# எங்களை விற்கவும் வாங்கவும் யாரையும் அனுமதிக்க முடியாது


'White Van Stories'



மாலதி மைத்ரி

லீனா மணிமேகலை என்ற பெண் சென்னையைச் சேர்ந்த ஒரு ஆவணப்பட இயக்குனர். சிறிது காலம் பாரதிராஜாவுக்கு துணை இயக்குனாராகப் பணியாற்றியிருக்கிறார். தமிழ் தேசிய எதிர்ப்பாளராக தன்னைக் காட்டிக்கொள்ளும் இவர் அண்மையில் ஈழத்தமிழர்களை பற்றிய ஆவணப்படங்களை எடுக்க ஆரம்பித்திருக்கிறார். கடந்த ஆண்டு சிறிலங்கா அரச ஆதரவாளர்களால் யாழ்ப்பாணத்தில நடாத்தப்பட்ட 'இலக்கியச் சந்திப்பு' என்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்ற அவர் அங்கு 'White Van Stories' என்ற ஆவணப்படத்தை தயாரித்துள்ளார். இவ்வாவணப்படம் சிறிலங்காவில் நடைபெறும் உரிமை மீறல்கள் தனித்து தமிழர்களுக்கு நடக்கும் பிரச்சனையில்லை என்பதனை நிறுவும் நுண்ணரசியல் கொண்டதாக அரசியல் விமர்சர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். லீனா மணிமேகலையின் கபடத்தனத்தை வெளிப்படுத்தும் இவ்வறிக்கையினை தமிழ் இலக்கிய உலகில் பிரபலமான பெண் படைப்பாளி மாலதி மைத்திரி வெளியிட்டுள்ளார். பல இலக்கிய ஆளுமைகள், கலைஞர்கள் இவ்வறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

"ஈழப்போரை தடுத்து நிறுத்தக்கோரி டெல்லியில் பிப்ரவரி 2009-இல் ஈழத்தமிழர் தோழமைக் குரல் என்ற அடையாளத்துடன் நடத்தப்பட்ட போராட்டம் எந்த அரசியல் கட்சிப் பின்புலமும் இல்லாமல் உணர்வெழுச்சியின் அடிப்படையில் இணைந்த படைப்பாளிகள், மாணவர்கள், திருநங்கைகள், மீனவர்கள், வழக்கறிஞர்கள், மனித உரிமை போராளிகள் ஒருங்கிணைந்து நடத்தியது."

அதனால்தான் "உணர்வெழுச்சியில் கொதித்திருந்த போராளிக் குழுவினர் சென்னையில் ரயில் ஏறியதிலிருந்து டில்லியிலிருந்து திரும்பும் வரை தங்கள் போராட்ட உடைகளையோ, முழக்கங்களையோ, தட்டிகளையோ எதோ ஒரு பெரும் சக்தியால் உந்தப்பட்டது போல, அகற்றாமலே இருந்தனர்." அதே ஈழத் தமிழர் தோழமை அமைப்பினர்தான் 'டில்லியிலிருந்து திரும்பியும் தொடர்ந்து தங்கள் பகுதிகளில் வெவ்வேறு போராட்ட வடிவங்களில் பங்கு கொண்டும், கைதாகியும், சிறை சென்றும் தங்கள் உணர்வுகளையும், எதிர்ப்பையும் காட்டியபடி இருந்தார்கள்."

நாங்கள் எல்லோரும் உணர்வெழுச்சியும் மனத்துயரும் கொண்டு இதில் ஈடுபட்டிருந்த போது இவை அனைத்தையும் முன்திட்டத்துடன் லீனா மணிமேகலை என்ற ஒருவர் தன் படத்தின் 30 நொடிக் காட்சியாகவும் அப்படத்தை உருவாக்க தனக்கு உரிமையும் தகுதியும் உள்ளது என்று நிறுவுவதற்கான முன்னோட்டமாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அதில் உள்ளது வன்முறை, அவமதிப்பு என்பதைச் சுட்டிக் காட்டினால் "ஈழத்தமிழர் தோழமைக் குரல் காட்சிகள் உட்பட எல்லாமும் நான் யூ-ட்யூபில் இருந்து டவுன்லோட் செய்தவையே! ஓபன் சோர்ஸ் காலத்தில், இதையெல்லாம் விளக்கமாக எழுதிக்கொண்டிருக்க வேண்டிய" தேவை இல்லை எனத் திமிர்த்தனத்துடன் பதில் அளிக்கிறார்.

எங்களையெல்லாம் வெறும் செம்மறியாட்டு மந்தைகள் என நினைத்துக்கொண்டு இவர் செயல்பட்டதைத்தான் நான் கண்டித்திருக்கிறேன். அதற்கு அவர் "தான் அழைத்துச் சென்ற செம்மறி ஆடுகள் போல" எங்களை நாங்களே சித்திரிப்பதாகச் சொல்கிறார். இது பற்றி தன்னைக் கேள்வி கேட்க யாருக்கும் உரிமையில்லை, அப்படிக் கேள்வி கேட்பது "படைப்பாளிகளின் வன்மம்" என்கிறார். அதில் எங்கள் அறியாமை வெளிப்படுவதாகவும் அது வெட்கக்கேடானது என்றும் சொல்கிறார். தமிழின் அரசியல் சார்ந்த படைப்பாளிகளை என்ன வேண்டுமானாலும் சொல்லலாம், எப்படியும் பயன்படுத்தலாம் "திரைப்படத்துறையில் உள்ள எங்களை உங்களால் என்ன செய்ய முடியும்?" என்ற மதம் பிடித்த குரல்தான் இது.

இதனை முன் நின்று கேட்கும் படைப்பாளியான ஒரு மக்கள் களப்போராளியை "மனநோய் மருத்துவரிடம் அழைத்து" செல்ல வேண்டும் என்கிறார். இதுதான் இவரது உண்மையான குணம், இதில் உள்ளது ஆதிக்கச் சாதித்திமிர், வர்க்கத் திமிர் மட்டுமல்ல, விளிம்புநிலை அரசியல் சார்ந்தவர்களை பழிதீர்க்கும் அதிகாரத்திமிரும் கூட.

இது போன்ற ஆதிக்கக் கைக்கூலிகள் தங்களையும் கலைஞர்கள் என்று கூறிக்கொண்டு செய்து கொண்டிருக்கும் சதி வேலைகளை அனைவரும் புரிந்து கொள்ள சாட்சியாக உள்ளது தான் டாடா நிறுவனம் பழங்குடியினரையும் பெண்களையும் ஒளிமயமான வாழ்வை நோக்கிக் கொண்டு செல்வதாகச் சொல்லி பிரச்சாரம் செய்யும் 'தேஜஸ்வினி' 3 நிமிட விளம்பரம். இதில் டாடா என்ற முதலாளிக் குழுமம் தான் சொல்ல விரும்பியதைச் சொல்வது அல்ல பிரச்சினை. பெண்களின் குரலை ஒலிக்கிறேன் என்று கூறிக் கொண்டு ஒருவர் இதனைச் செய்து தருவதுதான் பச்சை ஏமாற்றுத் தனம். தனக்கான இந்த பிம்பத்தை பெண்கள் பற்றிய படம் எடுப்பதன் மூலம் உருவாக்கிக் கொண்டு அதனை விற்பதுதான் திட்டமிட்ட சதிவேலை.

"செங்கடல்" படத்திற்காக மீனவச் சமூகத்தைப் பயன்படுத்திக் கொண்டதுடன் அதில் அவர்களின் வாழ்வை இழிவாகப் பதிவு செய்து, ஈழத்தமிழர் தோழமைக் குரல் காட்சியை இணைத்து அது யுடியூபில் கிடைத்தது என்பது எல்லாம் இந்த டாட்டாவின் 'தேஜஸ்வினி' கலிங்காநகர் விளம்பரப் படத்தின் மூலம் திட்டமிட்ட சுரண்டலாக, ஏமாற்றுவேலைகளாக மாறுகின்றன. தான் செய்வது விளம்பரம் செய்து ஊதியம் பெறுவதுதான் என்பது போன்ற சித்தரிப்பை இவர் உருவாக்க நினைக்கிறார்.

தற்பொழுது இந்திய கடல்சார் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் அழிக்கப்படும் சூழலில் இது ஒரு எரியும் பிரச்சினை. இதனை எதிர்த்து உயிர்களைப் பணயம் வைத்து மக்கள் போராடி வருகின்றனர். வங்காளத்தின் சிங்கூர், நந்திகிராம் மக்கள் டாடா தொழிற்சாலை தங்கள் மண்ணைப் பறித்துக் கொண்டதை எதிர்த்து பெரும் போராட்டம் நடத்தி துரத்தியடித்தனர்.

இந்தச் சூழலில்தான் இவர் செய்தது பச்சைத் துரோகம் என்றும் பழங்குடிப் பெண்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு எதிரான கருத்துக்களைச் சொல்ல வைப்பது கேடுகெட்ட தந்திரம் என்றும் சொல்கிறோம். அதே கோபத்துடன்தான் ஈழத்தமிழர் தோழமைக் குரல் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் ஆட்டு மந்தைகள் என நினைத்துக் கொண்டு தன் படத்திற்குப் பயன்படுத்திக் கொண்டதையும் கண்டிக்கிறோம்.

அதனால் தான் "உன் திரைப்படத்தை அங்கு திரையிட்டாயா? அந்த மக்களுக்கு காண்பித்தாயா? என்ற கேள்விகள்" இவர் திரித்துக் காட்டுவதுபோல சிறுபிள்ளைத் தனமானவை அல்ல. "நானும் கலைஞர்தான், கவிஞர்தான்" என்று சொல்லிக் கொண்டு எங்கள் மக்களையும் அவர்களின் போராட்டங்களையும் இழிவுபடுத்துவதை இனி அனுமதிக்க முடியாது என்பதற்கான கண்டனக்குரல்.

கானக உயிர்களைப் படம் பிடிப்பது போல செங்கடல் "ஆவண மற்றும் திரைப்படத்துக்கு" மீனவ மக்களைப் பயன்படுத்திவிட்டு நான் என்ன செய்திருக்கிறேன் என்பதை உங்களுக்கெல்லாம் காட்ட வேண்டுமா எனக் கேட்கும் திமிர்தனத்தை இனி அனுமதிக்க முடியாது என்பதற்கான எதிப்புக் குரல்.

இதுபோல் ஈழத்தில் முன்னாள் போராளிகள் மற்றும் மக்களை வைத்து எடுக்கப்பட்ட 'வெள்ளை வேன் கதைகள்' ஆவணப்படத்தில் பேட்டியளித்தவர்களின் முகங்களை மறைக்காமல் திரையிட்டதற்கும் அவர்களின் அனுமதி பெறாமலேயே இலங்கைக்கு வெளியே திரையிட்டதற்கும் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

கனடாவில் புலம்பெயர்ந்த பெண் படைப்பாளிகள் வெள்ளை வேன் திரையிடலுக்கான ஸ்பான்ஸரையும் டி.வி.ஐ தொலைக்காட்சியில் லீனாவின் நேர்க்காணல் ஒளிப்பரப்பையும் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதற்குப் பழித்தீர்க்க சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஜனவரி 3,4-இல் நடைப்பெற்ற பெண்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் புலம்பெயர்ந்த, ஈழப்படைப்பாளிகள், செயல்பாட்டாளர்கள் மீது நிகழ்ச்சியின் இரண்டாம் நாள் லீனா திட்டமிட்ட வன்முறைகளை நிகழ்த்தினார். இந்த மரண வியாபாரி எங்களைப் பார்த்து நீங்கள் யார் கேள்வி கேட்பதற்கு என்கிறார். இன்று நீதி கேட்க குரலற்ற ஈழத்தமிழர்கள் மற்றும் தமிழக மீனவர்கள் தன் மீது வழக்குத் தொடுக்க இயலாத நிலையில் உள்ளனர் என்ற ஏளனம் இந்த விளம்பரப்பட முதலாளியிடம் பொங்கி வழிகிறது.

## "நானும் கலைஞர்தான், கவிஞர்தான்" என்று சொல்லிக் கொண்டு எங்கள் மக்களையும் அவர்களின் போராட்டங்களையும் இழிவுபடுத்துவதை இனி அனுமதிக்க முடியாது

பூகோள, அரசியல், பொருளாதார, இன, மொழி அடிப்படையில் அனாதையாக்கப்பட்டு அழித்தொழிக்கப்படும் ஈழத் தமிழர்கள் மற்றும் தமிழக மீனவர்களை வைத்து ஆவணப்படம் எடுத்து விற்ற ரத்தப் பணத்தில் கொழிக்கும் லீனா மணிமேகலை அந்த மக்களைப் பொருட்படுத்தி படத்தைப் போட்டு காண்பித்து அனுமதி பெற வேண்டிய தேவை தனக்கு இல்லை என ஆணவத்துடன் கூவுகிறார்.

எழுத்தாக இருந்தாலும் படமாக இருந்தாலும் ஆவணப்படுத்தலின் போது பங்களிப்பவர்களின் அனுமதி பெற வேண்டும் என்பது அடிப்படை அறம் மற்றும் நியதி.

அவை திரிக்கப்பட்டு பயன்படுத்துவது அதைவிட கடுமையான மனித உரிமை மீறல். உலக கோர்ப்பரேட் முதலாளிகளின் கைக்கூலிகளும் உளவு நிறுவனங்களும் மட்டும்தான் இந்த விதியை மீறிச் செயல்பட்டு வருகின்றன.

இனி இது போன்ற அரசியல் அதிகாரச் சதித்திட்டம் கொண்ட கைக்கூலிகள் கேமராவுடன் வரும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதைத்தான் இதன் மூலம் அனைவருக்கும் தெரிவிக்க வேண்டியுள்ளது.






# சினிமா




பொங்கல் படங்களுக்குப் பிறகு கோலி சோடா தவிர்த்து சொல்லிக்கொள்ளும் வகையில் தமிழ் படங்கள் எதுவும் வெளியாகவில்லை. அதற்கெல்லாம் சேர்த்து விருந்து கொடுப்பதுபோல அமைந்திருக்கிறது பிப்ரவரி மாதம். ரம்மி சேர்ந்தாற்போல விஜய் சேதுபதியும் - ஐஸ்வர்யாவும் அடுத்தடுத்து இரண்டு படங்களில். முதலாவது ரம்மி. அடுத்தது பண்ணையாரும் பத்மினியும்.

“ ரம்மி சீட்டாட்டத்தைப்போல அடுத்து என்ன நடக்கும் என்பதை யூகிக்க முடியாத அளவிற்கு திரைக்கதையில் ஒரு மேஜிக்கை அமைத்திருக்கிறேன்” என இப்படம் குறித்து பெருமிதம் பொங்க கூறி இருந்தார் அறிமுக இயக்குனர் பாலகிருஷ்ணன். மூன்று முக்கிய கேரக்டர்களில் ஒன்றாக விஜய சேதுபதியையும் நுழைத்த தெம்புடன் 1987 முதல் 1990 கால கட்டத்திலான காதல் கதையை சமர்ப்பித்து இருக்கிறார்.

புதுக்கோட்டை வடகாடு ஊரைச்சேர்ந்த சக்தி, திண்டுக்கல் ஜோசப் இருவரும் அரசுக்கல்லூரி நண்பர்கள். உடன் படிக்கும் மீனாட்சி மனதில் இடம் பிடிக்கும் சக்தி மீது கோபமாய் திரிகிறான் சகா சையத். மறுபக்கம் ஜோசப்பிற்கும் காதல் பூக்கிறது. ஆனால் தங்கள் ஊர்ப் பெண்ணுடன் எந்த இளைஞன் பேசினாலும் அவனை நையப்புடைப்பது அல்லது கொல்வது ‘ஐயா’வின் கொள்கை, லட்சியம், சட்டம். காமெடிக்கு பரோட்டா சூரி. சுமூகமாக போய்க் கொண்டிருக்கும் கதையில் ஆங்காங்கே அரிவாளை காட்டி அலர்ட் செய்கிறார்கள். கதையின் பிற்பகுதியில் காதல்களுக்கு சிக்கல்கள் துவங்குகின்றன. அது எப்படி ரத்தக்களறியாகி நிறைவு பெறுகிறது என்பதையும் ‘ஐயா’வின் கண்ணிலேயே விரலை விட்டு ஆட்டும் இவ்விரு ஜோடிகளை எப்படி துரத்துகிறார், அக்காதலர்கள் என்ன கதிக்கு ஆளாகிறார்கள் என்பது கதை.

துவக்கத்தில் கொஞ்சம் சலிப்பூட்டாமல் நகர்கிறது படம். கொஞ்சம் சுவாரஸ்யமான காட்சிகள், (வழக்கமாக மொக்கை போடும்) பரோட்டா சூரியின் சுமாரான நகைச்சுவை, கல்லூரி, விடுதி சம்பந்தமான இயல்பான காட்சியமைப்புகள், விஜய்சேதுபதி- இனிகோ பிரபாகரின் நட்பு என்று எல்லாம் சேர்த்து ஒரு தடவை பார்க்கலாம் என்பது போல இருந்தது. படம் இறுதிக்கட்டத்தை நோக்கி செல்லும்வழியில் என்ன நடக்குமோ என்ற பரபரப்பு கூட தொற்றிக்கொள்கிறது. ஆனால் பெரிதாக ட்விஸ்ட் எதுவுமில்லாமல் அதே சமயம் மிகப்பெரிய ட்விஸ்டை வைத்து விட்ட நினைப்பில் படத்தை முடித்திருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது ரம்மியை ஒரு முழுமையான திரைச்சித்திரமாகவே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இனிகோவிற்கு முதல் நிலை நாயகனாக பிரமோஷன் கிடைத்திருக்கிறது. விஜய்சேதுபதி இரண்டாம் நாயகனாக வந்தாலும் கூட அரங்குகளில் விசில் பறக்கிறது. பரோட்டா சூரியை சந்தானத்திற்கு இணையான நகைச்சுவை நடிகர் என்று முன்னிறுத்தும்பொருட்டு ஆரவாரமான தொடக்கக் காட்சியெல்லாம் வைக்கிறார்கள். ஜோ மல்லூரியும் அவருடைய தம்பிகளும் நன்றாக நடித்திருக்கிறார்கள். டைகர் கார்டன் தங்கதுரை, சென்றாயன் போன்ற நல்ல மனித வளங்கள் வீணடிக்கப்பட்டுள்ளன.

கூட மேல கூட வச்சு என்ற பாடல் வந்தனாவின் குரலில் மனதிற்குள் ஐஸ்கிரீமாய் கரைகிறது. மற்ற பாடல்கள் அரங்கை விட்டு ஓடவைக்கும் வகை. பாடல் காட்சிகளுக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் அபாரம். ஆனால் எல்லா பாடல்களிலும் ஒரே இடத்தையே காட்டுவது போல இருக்கிறது.

ஊர்ப்பெரியவர் ஜோ மல்லூரி எதற்கு கண்ணில் படும் இளசுகளை எல்லாம் கொல்ல துடிக்க வேண்டும்? அதற்கான பின்னணி என்ன? ஊரில் அவருடன் இருக்கும் சில அடியாட்கள் தவிர்த்து மற்ற பொதுமக்கள் எல்லாம் கோவில் திருவிழாவிற்கு கிளம்பி போய் விட்டார்களா? ஒன்றும் புரியவில்லை. படம் நெடுக சுந்தர பாண்டியன் வாடை மூக்கை துளைக்கிறது. கதைப்படி ஐஸ்வர்யா செல்வச்சீமாட்டி. ஆனால் அவருடைய கழுத்துமணியும், உடையும் இன்னபிறவும் ஏழைப்பெண்ணை பிரதிபலிக்கின்றன. ஒருவேளை அவர் பெரிய வீட்டுப்பெண் என்பதையே ஒரு ட்விஸ்ட் என்ற நினைப்பில் வைத்திருக்கலாம்.

நான்கு பிரதான வேடதாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தாலும் கூட ஏனோ அவர்களுடைய கதைகளை சரிவர பிணைக்க தவறியிருக்கிறார்கள். உதாரணமாக, தன்னை சகோதரன் போல நினைக்கும் இனிகோவிடம் விஜய் சேதுபதி தன்னுடைய காதலைப் பற்றி சொல்லவில்லை. போலவே, இனிகோ காதலை காயத்ரி ஏற்றுக்கொண்ட விஷயமும் விஜய் சேதுபதிக்கு தெரிந்திருக்காது. ஐஸ்வர்யாவும் காயத்ரியும் ஒன்றுவிட்ட அக்காள் தங்கைகள். ஆனால் க்ளைமாக்ஸில் மட்டும்தான் பேசிக் கொள்கிறார்கள். காதலும் சரி, வன்முறையும் சரி மனதில் அழுத்தமாக பதியவில்லை. கடைசியில் ஐஸ்வர்யா எடுக்கும் உணர்வுப்பூர்வமான முடிவு கூட சிரிப்பையே வரவழைக்கிறது.

ரம்மி - காதல், சுப்ரமணியபுரம் போன்ற புலிகளை பார்த்து சூடு போட்டுக்கொண்ட பூனை. கொஞ்சம் விலகியிருந்தாலும் சுந்தரபாண்டியன், குட்டிப்புலி போன்ற அபத்த சினிமாக்களில் சேர வேண்டியது. கடைசியில் ரத்தம் தெறிக்க நியாயத்தை நிலைநாட்டினாலும், இஸ்லாமிய செய்யது காதலிக்கக் கூடாது, பெற்றோரை இழந்த- கிறிஸ்தவ ஜோசப் காதலிக்கக் கூடாது ஆனால் ஒரே மதத்தை சேர்ந்த பெண் வீட்டிற்கு நிகரான சமூக அந்தஸ்து உள்ளவரென்றால் காதலிக்கலாம் என்று சொல்கிறார்களோ என்றெல்லாம் தோன்றுகிறது.

ரம்மி - 1987ல் நடைபெறும் கதை மட்டுமல்ல, வெளிவந்திருக்க வேண்டிய படமும் கூட !

*- வாகீஸ் (வண்ணப்பூக்கள் வலைப்பதிவிலிருந்து..)*

## சினித்துளி

### வடிவேலு-ரஜினி கடும் போட்டி !



வைகைபுயல் வடிவேலு, நீண்ட நாட்களுக்குப் பிறகு நடிக்கும் படம் ‘ஜெகஜ்ஜால புஜபல தெனாலிராமன்’. இப்படத்தில் வடிவேலுவிற்கு ஜோடியாக மீனாக்ஷி தீக்ஷித் நடிக்கிறார். அறிமுக இயக்குனர் யுவராஜ் தயாளன் இயக்கி வருகிறார். முழுக்க முழுக்க நகைச்சுவைப் படமாக உருவாகிவரும் இப்படத்தை ஏ.ஜி.எஸ் நிறுவனம் பெரும் பொருட்செலவில் தயாரிக்கிறது. இப்படம் வரும் ஏப்ரல் மாதம் 11ம் திகதி ரிலீஸாகவுள்ளதாக வடிவேலுவின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதே நாளில் ரஜினிகாந்த் நடித்த ‘கோச்சடையான்’படமும் வெளியாகிறது. இதனால் இவ்விரு படங்களுக்கிடையே வியாபார போட்டி உருவாகியுள்ளது.

### சிம்புதேவன் இயக்கத்தில் விஜய் !



‘ஜில்லா’ படத்திற்குப் பிறகு ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கும் படத்தில் விஜய் நடிக்கிறார். சமந்தா, சதீஷ் ஆகியோர் உடன் நடிக்கிறார்கள். படத்துக்கு ‘வாள்’ என்று டைட்டில் வைத்திருக்கிறார்கள். இப்படத்தைத் தொடர்ந்து விஜய் அட்லி இயக்கத்தில் நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், சிம்புதேவன் சொன்ன கதை விஜய்க்கு ரொம்பவே பிடித்துவிட்டதாம். அதனால் அட்லிக்கு குட்பாய் சொன்ன விஜய் இப்போது பிடித்திருப்பது திறமையான இயக்குனர் சிம்புதேவனை !

2014 மே, மாதத்தில் படப்பிடிப்பைத் தொடங்க திட்டமிட்டு இருக்கிறார்கள்.

### ‘சிந்துபாத்‘ !



செல்வராகவன் இயக்கத்தில் ஆர்யா-அனுஷ்கா ஆகியோர் நடித்து வெளிவந்த படம் ‘இரண்டாம் உலகம்’. இப்படம் எதிர்பார்த்த அளவு வெற்றியடையாததால் தனது அடுத்தப்படத்தை வெற்றிப்படமாக கொடுக்க வேண்டும் என்ற முனைப்பில் அடுத்த படத்தின் வேலைகளில் களமிறங்கியுள்ளார் இயக்குனர் செல்வராகவன். ‘சிந்துபாத்’ என்ற கதையை தயார் செய்து வைத்துள்ள இவர், இந்த கதைக்கு ரொம்பவும் மெனக்கெட்டு விறுவிறுப்பாக உருவாக்கி வருகிறார்.

இதில் விக்ரம் அல்லது சிம்புவை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடக்கிறது. மேலும், தமிழின் முன்னணி நாயகி ஒருவரை கதாநாயகியாக நடிக்க வைக்கவும் முடிவு செய்துள்ளனர்.

*இந்தப்படத்தையாவது பாத்து செய்யுங்க பாஸ்..*

### ஏப்ரலில் கோச்சடையான் !



சூப்பர் ஸ்டார் ரஜினி நடிப்பில்நீண்ட கால நடிப்பில் தயாராகி வந்த கோச்சடையான் திரைப்படம் வரும் ஏப்ரல் 11ம் தேதி இப்படம் திரைக்கு வர உள்ளதாக கூறியுள்ளது. ஹாலிவுட் படங்களில் பயன்படுத்தும் செயல் திறன் பிடிப்பு தொழில்நுட்பத்தின் மூலம் படமாக்கப்பட்டுள்ளதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் செயல்திறன் பிடிப்பு தொழில்நுட்பத்தின் மூலம் படம்பிடிக்கப்பட்ட முதல் படமாக இது இருக்கும் என கூறப்பட்டுள்ளது.

தமிழ், இந்தி, தெலுங்கு, மராத்தி, போஜ்புரி, பெங்காலி மற்றும் பஞ்சாபி மொழிகளில் இப்படம் படமாக்கப்பட்டுள்ளது.

முன்னணி தமிழ் தொலைக்காட்சிகளுடன் அனைத்து SKY சனல்களும் £ 200 இருந்து
079 4715 9598 - 074 2472 6790
KATPY SATELLITE கற்பி சட்ரலைற்
Satellite & Communication Experts, Satellite Dishes, Satellite Receivers, New Installation, Troubleshooting, Upgrades
Special Offer £150
சட்டலைட் திருத்த வேலைகள் சகல இடத்தில் பொருத்துதல் மற்றும் டிஸ்க் பொருத்த முடியாத இடங்களில் இன்டர்நெற் தொலைக்காட்சி (IP TV) பொருத்துதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்
சகலவிதமான சட்டலைட் தொலைக்காட்சி இணைப்புக்களையும் சட்டலைட் ரிசீவர்களையும் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# MercuryGroup

## MercuryPay

**MERCHANT CREDIT CARD PROCESSING**



**1.2%** Per Credit card transaction

**12p** Per Debit card transaction

Card Payment Processing for your Business

* Static, Wireless and Mobile Terminals
* UK Based Customer Support 24 x 7 x 365
* Benefit from No Annual Fee
* Online access to transaction reports

**TAKE CARD PAYMENTS FOR LESS**

**Limited Offer !**

## MercuryTalk

**Excellence is more than a Goal. It's a Promise**

Connecting your Business world with our hosted IP telephony system



Phone Lines for **£ 2.99** a month

*One Company*
*One bill*
*One Great Savings*

## MercuryApps




Mobile Apps fuel your business growth

Apple, Android and Mobile Website

**50 Broadway, Westminster, London SW1H 0RG, United Kingdom**

**Call: 020 8550 6677 | Mail : info@mercurygroupuk.com | www.mercurygroupuk.com**



# Lebara mobile

தகவல்களை இலகுவாய் பரிமாறிக்கொள்ள...

## வரையறை அற்ற இணையப்பாவனை

இதில் கீழ்வரும் சலுகைகள் அடக்கப்பட்டுள்ளன

**500** நிமிடங்கள், அனைத்து UK வலையமைப்புகளுக்கும்

வரையறையற்ற சேவைகளாக
- ✓ **Lebara** விலிருந்து **Lebara** விற்கான அழைப்புகள்
- ✓ **UK SMS**

மேலதிக சலுகைகள்

**1p** நிமிடத்திற்கு தொலைபேசி / கைத்தொலைபேசி

**5p** நிமிடத்திற்கு தொலைபேசி / கைத்தொலைபேசி

**£12**

95,000ற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Carphone Warehouse · phones 4u · ASDA · TESCO

ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்கு மட்டும் செல்லுபடியாகும்.

**எப்பொழுதும் உங்கள் பக்கம்**

**"8885"** என்று **65088** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவும், அல்லது **lebara.co.uk** இணையத்தளத்திற்கு செல்லவும்.

The Lebara Data Plus 500 Pass includes unlimited calls to other Lebara numbers in the UK plus standard UK minutes and unlimited UK texts and Mobile Data as outlined above and is valid for 30 days from activation. On expiry of the 30 day validity period the Lebara Data Plus Pass will auto-renew. The offered discounted price of £12 is available for a limited time only. For full terms and conditions, please visit www.lebara.co.uk/passterms